

# இதுதான் காதல் என்பதா

பாலகுமாரன்

# இதுதான் காதல் என்பதா?

# 1

அபிராமி அந்தாதி அருளிய அபிராமிப் பட்டரின் வாழ்க்கையை மையமாக வைத்து ஒரு நாவல் 'என் கண் மணித் தாமரை' என்கிற பெயரில் சமீபத்தில் எழுதினேன்.

நல்ல வரவேற்பு. பல திசைகளிலிருந்தும் பாராட்டுகள் என் உழைப்பு தாண்டி இறையருளால் நாவல் கட்டுக்கோப்பாக வந்துவிட்டதால் பலர் கூப்பிட்டுக் கூப்பிட்டுக் கொண்டாடினார்கள்,

ஐம்பத்திரண்டு வயதில் எனக்கு இது ஒரு மைல் கல். தலை நரைத்து கீழ்ப்பற்கள் விழுந்து முகம் சுருக்க மாகி உடல் தளர முதுமைக்கு நகரும் இந்த நேரத்தில் இப்பாராட்டுகள் சந்துஷ்டி தந்தன.

ஒருநாள் பிற்பகல் ஒரு போன் கால்.

''நான் ஷைலஜா. ஞாபமிருக்கா?''

''ஆங்... ஞாபமிருக்கு. மார்க்கெட்ல பார்த்தமே. லெவன்த் படிக்கிறீங்க.''

''இல்லை. நாம பார்த்து இருபத்தாறு வருஷம் ஆச்சு'' எதிர்க்குரல் செருமியது.

நான் மௌனமானேன். யார்? என் புத்தி செதில் களுக்குள் புகுந்து தேடி திசை கெட்டு நின்றது.

''யார் தெரியலையே.?''

''நான் ஷைலஜா. டெலிபோன் ஆபரேட்டர். இரும்புத்தகடு கம்பெனி. நாம ரெண்டு பேரும் லவ் பண்ணமே. ஞாபகம் இருக்கா.''

ஆத்தா... நீயா, நல்லாயிருக்யா தாயே. கல்யாணம் ஆயிடுச்சுன்னு கேள்விப்பட்டேன். எப்படி இருக்கே. அவர் என்ன செய்யறார். பசங்க எத்தனை?''

என் அன்பு ஆர்வமாய்க் கொப்பளித்தது.

''நல்லா இருக்கேன். ரொம்ப நல்லா இருக்கேன். இரண்டு குழந்தைங்க. முதல் பையன் ப்ளஸடு படிக்கிறான் ரெண்டாவது பொண். அவ பேர் பாலா. பாலா திரிபுர சுந்தரி. டென்த் படிக்கிறா.''

''என்ன ஷைலஜா திடீர்னு?''

''நேத்துதான்ப்பா உன் நாவல் படிச்சேன். என் கண்மணித் தாமரை... அழுதேம்பா. ராத்திரி படிச்சுட்டு தனியா உட்கார்ந்து ஹால்ல விக்கி விக்கி அழுதேன். ரொம்ப நல்ல நாவல். மனசு உருகிப் போச்சு.

ஆனா நான் அழுதது நாவலுக்கில்லை. எனக்காக. உன்னை... நீ யாருன்னு தெரிஞ்சுக்காத எவ்வளவு இன்ஸல்ட் பண்ணியிருக்கேன். எத்தினி விரட்டு விரட்டி யிருக்கேன். எவ்வளவு அயோக்கியத்தனமா மனசு நோகப் பண்ணி... உன்னை முட்டாள்னு உரக்கச் சொல்லி... நான் முட்டாள். நான்தான் முட்டாள். ஸாரி... ஐயம் வெரி ஸாரி. இது சொல்லத்தான் போன். நீ யாருன்னு தெரியாத நான் என்னைப் பெரிய கொம்பு மாதிரி நினைச்சு...'' குரலில் அழுகை தெரிந்தது.



''ச்சே... என்ன ஷைலஜா. இப்ப என்ன அதுக்கு. உன் பையன் பேரு என்ன... நல்லா படிக்கிறானா. எந்த க்ரூப். எனக்கு ஒரு பொண்ணு. ஒரு பையன்.''

பத்து நிமிடங்கள் பேச்சு தொடர்ந்து முடிந்தது.

இருபத்தியாறு வருடங்கள்.

''என்னால் அன்று இரவு தூங்க முடியவில்லை. ஐம்பத்திரண்டு வயதில் ஒரு பெண் பாராட்ட அதில்மயங்கி நான் தவிக்கவில்லை. எப்போதோ காதலித்த பெண் இப்போது வலியவந்து பேசுவதில் புளகாங்கிதம் அடைந்து விடவில்லை. என் தூக்கமற்ற காரணம் வேறு.

அன்று ஷைலஜாவை நான் ஏன் ஜெயிக்க முடிய வில்லை. அன்று என்னால் என்னை ஏன் வெளிக்காட்ட முடியவில்லை. அன்று என் வலிமைகள் எங்கிருந்தன. அன்று நான் ஏன் அரைவேக்காடாய் ஒரு காதலைக்கூட சரியாக வெளிப்படுத்தத் தெரியாத பையனாய் இருந் தேன்.

ஐம்பத்திரண்டு வயதில் நிதானம் அமைதி பெரிய விஷயமில்லை. இவை ஏன் எனக்கு இருபத்தாறில் வர வில்லை. எப்படி கைகொள்ளாது இருந்தேன். ஏன் எவரும் வழிகாட்டவில்லை. வாலிபத்தில் நிதானம் வரக் கூடாதா. படபடப்புதான் வாலிபத்தின் வாகனமா.

ஷைலஜா என்னை உதறக் காரணம் ஷைலஜாவா, நானா?

நான்தான்.

முட்டாளை, மூர்க்கனைப் பெண்கள் நேசிப்பதில்லை. மாறாய் பயப்படுகிறார்கள். இவன் தன் வாழ்க்கையை மிதித்துக் கூழாக்கிவிடுவான் என்று கலவரப்படுகிறார்கள். எனவே நட்புகாதலாய் மலரும்போது...அல்லது மலரும்

முன்பே...போடா...போ என்று புறக்கணிக்கப்பட்டு விடுகிறது.

இன்னும் விவரம் சொல்ல கொஞ்சம் பின்னே போக வேண்டும்.

எனக்கு ட்ராக்டர் கம்பெனி உத்யோகம். சாடே சாத் அணா சம்பளம். அதாவது ஏதோ பரவாயில்லாத சம்பளம்.

சிங்கிள் டீக்கு லாட்டரி அடிக்கிற ஆளுமில்லை. கார், பங்களா, ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் அளவுக்கு காசுமில்லை. உடுப்பி ஹோட்டல் மசால் தோசை போன்ற சம்பளம்.

இதனாலேயே சுாதலிக்கும் ஆசை, தைரியம், பேர்ாவல், துணிச்சல் எனக்கு வந்தது.

ஷைலஜாவும் அதே யோக்கியதைதான். கிராமத்து வேப்பெண்ணையுமில்லை. ஷாம்பு குளித்து தலை விரித்துப் போட்ட அலட்சியமுமில்லை. ஒற்றைப் பின்னல், மல்லிகைப்பூ, ஷிஃபான் ஸாரி, ஹேண்ட்பேக், தயிர்சாதம் என்கிற இனம்.

''நிஜமாவே என்னைப் பிடிச்சிருக்கா?''

''ஆமா ஷைலஜா.''

''உங்க வீட்ல சரிம்பாங்களா?''

''மறுக்க என்ன இருக்கு. நீ அழகு. சம்பளம் ஆயிரத்து நானூறு. (அப்போது இது நல்ல சம்பளம்). கெட்டிக்காரி, நல்ல ஃபேமிலி.

''நான் வாயாடி இல்லையா?''

''ஆமாம் இரேன்.''



''இல்லை. உனக்குப் புரியலை. இப்படி வாயாடினா எந்த வீட்டுலயும் மரியாதை கிடைக்காது. நீ நிஜமாகவே என்னை லவ் பண்றியா?''

''என்ன செய்யணும் சொல். இது நிரூபிக்க என்ன செய்யணும். உன்னைப்பத்தி மூணு கவிதை எழுதியிருக்கேன். நேத்து ராத்திரி தூங்கறப்போ ஒரு மணி. காலைல எழுந்தது லேட்டு. ஒன் அவர் பர்மிஷன் போட்டுட்டு...',

''இல்லை. உன் கவிதை வேண்டாம். உன் சம்பளம் உனக்கா, இல்லை...உன் அம்மாவுக்கா?''

''இப்ப அம்மாவுக்கும்...அப்புறம் எனக்கு.''

''எப்புறம்.''

''கல்யாணத்துக்கப்புறம்.''

''என் சம்பளம்?''

''அதும் நமக்கு.''

''மாட்டேனுட்டா?''

''ஏன் மாட்டேன்''

''சும்மா சொன்னா...?''

''ஐ வில் ஓர்க் ஹார்ட். இன்னும் கஷ்டப்பட்டு நிறைய சம்பாதிச்சு...''

''இல்லை. உனக்குப் புரியலை.''

''ஏன் ஷைலஜா. புரிஞ்சுதானே...''

''மயக்கத்துல இருக்கே.''

''மயக்கறது நீயில்லையா.''

''என்ன இழவு இது.''

''ஏன் சுள்ளுன்ற ஷைலஜா?''

''புரியலையே உனக்கு?''

''என்ன புரியலை.''

''நான் எங்க சந்தேகப்படறேன்னே உனக்குப் புரியலை.''

''தயவுசெய்து என் காதல் மீது சந்தேகப்படாதே ஷைலஜா.'' தொடர்ந்து நிறைய வசனங்கள் பேசினேன். இப்போது நினைக்க எனக்குச் சிரிப்பு வந்தது.

பாவம் ஷைலஜா. பாவம் பெண்கள்.

மன்மதனாய்-ஆண்வேடம் போட்டால் போதாது. வில் அம்பு விட கற்றுக்கொள்ள வேண்டும். இலக்கு தெரிய வேண்டும். இலக்கே கண்ணுக்குத் தெரியாதபோது எப்படி அம்பு தைக்கும். கண்ணில் மயக்கம் உள்ள ஆணாக நின்றிருந்தேன். ஷைலஜா என்னைப் புறம் தள்ளினாள்.

''மிஸ்டர் பாலகுமாரன். ப்ளீஸ் லிஸன் டு மீ. நான் உன்னை லவ் பண்ணலை. பண்ணமுடியாது. என் எதிர் பார்ப்பு வேற. என் ஆசை வேற. என் எதிர்காலத் திட்டம் வேற. நீ எனக்குச் சரியா வர மாட்டே. ஏன், நான் உனக்கு ஏத்த லேடி இல்லை. ப்ளீஸ் விட்டுரு. இதான் கடைசி ஐஸ்க்ரீம். நீ சுத்தி சுத்தி வந்தது பார்த்த எனக்கும் ஒரு ஐடியா இருந்தது. ஆசை இருந்தது. நீ சும்மா கவிதை, வெங்காயம்னு போயிட்டிருக்கே. உனக்கு நெஜம் தெரியலை.''

''எனக்குச் சொல்லிக்கொடு ஷைலஜா.''

''அது என் வேலை இல்லை வாத்யாரே. என்னைத் தோள்ல தூக்கிட்டுப் போவேன்னு நினைச்சா...நீ என் மடில ஏறி உட்கார்ந்து கொழ கொழன்னு வாய்ல கட்டை விரலோட பேசிக்கிட்டு இருக்கியே...என்னால சுமக்க முடியாது. என்னைச் சுமக்கறவன் வேணும் எனக்கு.''



''புரியலையே.''

''முட்டாள்.''

''என்கிட்ட என்ன தப்பு.''

''போய் கண்ணாடில பார். காட்டான் மாதிரி இருக்கே. ஒரு மீசை ஒழுங்கா செதுக்கி வச்சுக்கத் தெரியலை. பேண்ட் சரியா போடலை. என்ன செருப்பு இது. ஏன் நகம் வெட்டலை. எவ்வளவு அழுக்கு. எப்பவும் ஏன் பதட்டமா இருக்கே.''

''அப்ப நீ என்னை லவ் பண்ணலையா ஷைலஜா.''

''லவ்வுன்னா என்ன? மாத்தி மாத்தி கவிதை எழுதறதா என்னதுக்கு உதவும். லவ்னா நம்ம ஊர்ல கல்யாணம், மேரேஜ், விவாகம், ஜென்மாந்திரத்து பந்தம், சாகற மட்டுமான உறவு. நீ வரமாட்டே. அவ்வளவு தூரம் தாங்கமாட்டே.''

''நான் உன்னை உயிருக்கு உயிரா...''

''ப்ளீஸ் புரிஞ்சுக்க. இது எல்லாரும் சொல்ற டயலாக். சொல்றதுக்கு முன்ன தயவு செய்து யோசி. உயிருக்கு உயிரான்னா என்ன அர்த்தம்.''

''நீ என்ன சொன்னாலும்...''

''தப்பு. எனக்குத் தலையாட்டி பொம்மை வேண்டாம். இப்ப தலையாட்டிட்டு அப்புறம் என் தலை மயிரைப் பிடிச்சு உலுக்குவே. பொண்டாட்டி சரியில்லைன்னு சொல்வே.''

''என்கிட்ட என்ன தப்பு. அதைச் சொல்லு ஷைலஜா.''

''முடிவு எடுக்கத் தெரியலை.''

''எப்படிச் சொல்றே?''

''உன் சம்பளம் இப்ப யாருக்கிட்டே தர்றே?''

''அம்மாக்கிட்டே.''

''நாளைக்கு.''

''உன்கிட்ட.''

''ஏன்னு உங்கம்மா கேட்டா... என்கிட்டே கொடுன்னா...''

''உனக்குப் பாதி. அம்மாவுக்குப் பாதி.''

ஷைலஜா பரிதாபமாய்ச் சிரித்தது இன்னும் என் மனசுள் இருக்கிறது.

''இப்படி எல்லாத்தையும் பாதிப்பாதி தரவனோட என்னால குடித்தனம் பண்ண முடியாது. எல்லாத்தையும் பாதி பாதியா தரவும் கூடாது. நீ அம்மா பிள்ளை. என்னை விட்டுரு.''

''எங்கம்மா நல்லவ.''

''நான் ரொம்ப கெட்டவ. என்னை விட்டுரு.'

''ஏன் இப்படி வெட்டி விடற.''

''உனக்குப் போறலை. நீ தெளிவா இல்லை.''

''எனக்குத் தெரியும்...''

''என்ன தெரியும்.''

''நீ வேற ஒருத்தனைப் பிடிச்சுட்ட.''

''இப்படிப் பேச வேண்டாம்.''

''ஆள் மாறிட்ட.''

''தப்பு நண்பனே.''

''அந்த கப்பல் கம்பெனி பையன்...''



''எஸ். என்ன...என்ன அதுக்கு?''

''சரி. நான் நகர்ந்துக்கறேன்.''

''நீ படத்துலயே இல்லை.''

''கடைசியா ஒரு வேண்டுகோள்.''

''என்ன?''

''உன் கையை ஒருதடவை கிஸ் பண்ணணும்.''

''ஓழி.''

நான் கைகோர்த்து சற்றுமேல் தூக்கி பதட்டத்தில் அவள் புறங்கைக்கு பதிலாய் என் புறங்கையை முத்தமிட்டேன்.

அவள் வாய்விட்டுச் சிரித்தாள். தலையில் அடித்துக் கொண்டாள்.

''ஸீ...எப்படி பிஹேவ் பண்ற பார். என்ன செய்யறோம்னு தெரியாத செய்யறபார். எங்கயோ ஒருபாணா தப்பு இருக்கு உன்கிட்ட.''

நான் வெட்கப்பட்டேன்.

நிறைய சிகரெட் குடித்தேன். வெயிலில் கடற்கரையில் தனியே உட்கார்த்து பேசினேன். நீண்ட கவிதைகள் எழுதினேன்.

காலம் மறக்கடித்தது.

இருபத்தாறு வருடங்கள்.

ஷைலஜா மறுபடி எனக்கு போன் செய்தாள்.

தாயே... பாசமிகு தேவதையே... உனக்கு என் நமஸ்காரம். உன் குழந்தைகள் வாழ்வாங்கு வாழ்ந்து நன்கு பொலிய என் வாழ்த்துக்கள். உன் அன்புக் கணவருக்கு என் நமஸ்காரம்.

நல்லவேளை மறுத்தாய். நான் உயர்ந்தேன், எரித்த சாம்பலிலிருந்து எழும் பறவை போல, மண்ணில் புதைந்த மலர் உரமாகி மறுபடி மலராதல் போல, ஒரு ரசாயன மாற்றத்திற்குப் பிறகு ஜெயித்தேன். இது இறையருள். குரு கிருபை. தாயின் அன்பு. விதியின் வணக்கம்.

நீ வருந்த எந்த அவஸ்யமுமில்லை.

தவறு என்னுடையது. வலுவில்லாத தெளிவில்லாத என் கனவு சாணும் குணத்தின் குறையது.

காதல் என்பது நம் ஊரில் திருமணம், மேரேஜ், விவாகம், நெடுந்தொலைவு பயணம்.

அன்று புரியவில்லை.

பிராக்டிகலாய் நானில்லை.
ஏன்...

காரணம் பல.

அப்படி இல்லாத இளைஞர்களுக்கு யுவதிகளுக்கு இந்தத் தொடர் சமர்ப்பணம்.

# 2

என் ஆரம்பகாலத் தெளிவின்மைக்கு வேறு யாரையும் நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை.

ஆயினும் என் நொய்மைக்கு என் தந்தைதான் மிக முக்கியமான காரணமாக இருந்தார் என்பது மறுக்கப் படாத உண்மை. என்ன செய்ய...சில சமயம் சிலருக்கு வாழ்க்கையின் ஆரம்பம் மோசமாய் அமைந்துவிடும்,



தாயோ, தந்தையோ, தமையனோ ஆசிரியரோ அடுத்த வீட்டுக் காரனோ முரட்டுத்தனம் காட்டி நமது புத்திக் கூர்மையை முறிக்க முயற்சி செய்வார்கள். முறித்தும் போடுவார்கள்.

என் பதட்டத்திற்குக் காரணம் என் வீடு என் தந்தை என் தாயைப்படுத்திய பாடு.

உள்ளூரக் கொஞ்சலுக்கும் அன்புக்கும் மனசு ஏங்கியது. யாராவது கட்டிக் கொண்டு தலையைத் தடவி விட மாட்டார்களா... அடடே... ரொம்ப நல்லா டிராயிங் போடறியே... பாராட்ட மாட்டார்களா... ''கண்ணு, மணி அஞ்சாச்சுடா...எழுந்து பிராணாயாமம் பண்ணு. என் ராஜா எழுந்து. மூச்சுப் பயிற்சி பண்ணாத்தானே பெரியாளாகலாம். எழுந்துருடா என் தங்கம்...'' தடவித் தடவி எழுப்ப மாட்டார்களா என்று ஆசை வரும்.

எனக்கு நடந்ததெல்லாம் நேர் மாறான விஷயம்.

எனக்குக் கிடைக்காத இந்த அன்பை பிறருக்கு வழங்க ஆரம்பித்தேன். எனக்கு பத்து பைசா கொடுத்தவர் களுக்கு நூறு பைசா கொடுத்தேன். ஒரு மூத்தம் கொடுத்த வர்களுக்கு ஆயிரம் முத்தம் என்று ஆர்ப்பரித்தேன்.

மனிதரை மனிதர் சந்தேகப்படுவார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. எல்லோருமே என்னைப் போல் அன்புக்காக ஏங்குகிறார்கள் என்று நினைத்துவிட்டேன்.

எதிராளியை நூறு சதவீதம் நம்புவது பேதமை. தாய், தந்தை, மனைவி உள்பட உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் வாய்ப்பு உண்டு.

''யூ லுக் ஸோ ஸ்மார்ட்யா'' என்று புகழ்ந்தால் பல்காட்டக் கூடாது.

''வாங்க பீர் சாப்பிடலாம்'' என்று எவரும் அழைத்தால் ஓடிவிடக் கூடாது.

நிதானம் புருஷ லட்சணம். முதலில் கத்தரிக்கப் பழகு பிறகு யோசனை செய். சாதக பாதகங்களை மடமட வென்று சிந்தித்துப் பார். புகழ்ச்சிக்கு நன்றி என்ற வார்த்தை சொல்லிவிட்டு அடுத்த பேச்சை ஆரம்பி புகழ்ச்சி அம்பு தைத்தவன் எழுந்திருக்க வெகு நாளாகும். யாராவது புகழ மாட்டார்களா என்று மனம் அலையும். அவரவர்க்கு ஆயிரம் வேதனைகள். உன்னைப் புகழ்வதற்கு எவருமே தயாராக இல்லை. புகழ்ந்தால் அது உண்மை இல்லை.

இவை எதுவும் தெரியாமல் நான் ஷைலாஜாவிடம் வழிந்தேன். இதையும் தவிர என் அலுவலகத்தில் என்னை ரொமாண்டிக் ஆளாய் காட்ட எனக்கு விருப்பம் பல பெண்கள் என்னிடம் வழிகிறார்கள் என்று சொல்லிக் கொள்ளும் அசட்டுத்தனம்.

வேட்டியும் கோமணமும், திருநீறுமாய் வரும் பயந்த பசங்களின் பொறாமையைத் தூண்டுகிற பேராவல்.

''யார் ஷைலஜா...ரொம்ப அழகா இருப்பாளா?''

''ஓகே...சுமாரா இருப்பா''

''நீ அவளையா கல்யாணம் பண்ணிக்கப்போற...'' ஒரு கோமண வேட்டி தொடர்ந்து கேட்டது.

''போன வாரம் வேற ஒரு பெண்ணோட ரொம்ப நேரம் பேசிண்டுருந்தே...''

''ஆமா...டெலிபோன்ஸ்...சீதா லக்ஷ்மி... ரொம்ப அழகி''

''அவளைக் கல்யாணம் பண்ணிப்பியா?''

''தெரியலை தம்பி''

''எங்கே பேசுவே?...''



''பீச்சுல...புஹாரி ரெஸ்டாரெண்ட்ல. பெசண்ட் நகர் ஹோட்டல்ல. எக்மோர் தாஸப்பிரகாஷ்ல''

''யார் பில்லுக்கு பணம் கொடுப்பா?''

''சில சமயம் நான். சிலசமயம் அவள்.'' நான் தோள் குலுக்கிக் கொள்வேன்.

''இந்த வாட்ச் ஸ்ட்ராப் சீதாலக்ஷ்மிதான் வாங்கிக் கொடுத்தா''

எல்லாம் பொய். எப்பவும் பொய்.

காதல் எனக்கு ஒரு அலட்டலாக இருந்தது.

என் மீது பலர் பொறாமைப் பட்டார்கள். சிலர் புறங் கூறினார்கள். ஆபீஸ் வேலை. ஆபீஸ் வேலை என்று வெளியே போறான் சார். மூன்று மணிக்கு எவளோடயோ ஹோட்டல்ல உட்கார்ந்திருக்கான் சார். ஒரு கோமண வேட்டி போட்டுக் கொடுத்தது.

தமிழ் நாட்டில்தான் காதலிப் பவர்கள், காதலிக்கவே முடியாதவர்கள் என்று இரண்டு வகை உண்டு. காதலிக் கவே முடியாதவர்கள் காதலிப்பவர்களைக் கட்டோடு வெறுப்பார்கள். கவிழ்ப்பார்கள். காதலிக்கிற பெண்ணை செம கேஸ் என்பார்கள்.

இங்கு இளைஞர்களுக்கு முதிர்ச்சி குறைவு. பொறமை மிக மிக அதிகம்.

இந்தத் தனியார் கம்பெனியில் எனக்கு வந்த காதல் கடிதங்களை ஒரு கோமண வேட்டி எடுத்துக் கொடுக்க ஒரு உதவி மேனேஜர் உரக்கப் படித்து எல்லோருக்கும் விநியோகம் செய்தார். அந்தக் கோமண வேட்டி லஞ்சப் பிசாசு. அந்த உதவி மேனேஜர் பரத்தைப் பிரியன். இவர்களைப் போன்றவர்கள் காதல் என்கிற விஷயத்தை மிகவும் கொச்சைப் படுத்துவார்கள். காதலிக்கிறவனை ஒன்றுகூடி செருப்பால் அடிப்பார்கள்.

எதுக்கு லவ்...பொண்ணு பார்த்தமா...விலை பேசினமா...விஷயத்தை முடிச்சமான்னு இல்லாம...என்று ஆபாசமாய் அடுக்குவார்கள்.

சுய பலமும் இல்லாமல், சூழலும் நன்கு அமையாமல் காதல் என்கிற விஷயத்தில் ஈடுபட தோல்வி தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

சினிமா பாட்டுகள் உயர்ந்தவகை சாராயம். இலக்கியம் அபின். நிஜவாழ்க்கையில் இந்தப் பாட்டுக்கு என்ன இடம் என்று ஒரு இளைஞன் மிக தெளிவாய் இருக்க வேண்டும். காதலிக்க ஆசை வரும் நேரத்தில் இந்தப் பாட்டுக்கள் மிக மிக பலவீனமாக்கும்.

ஓராயிரம் பார்வையிலே-உன்

பார்வையை நானறிவேன்

என்கிற பாட்டைநான் இரவெல்லாம் பாடியிருக்கிறேன்.

முன்தலைமயிர் கண்ணுக்குத் தெரியாத இருட்டில் உட்கார்ந்து கண்ணில் நீர் வடிய உட்கார்ந்திருக்கிறேன். இப்போதும் இளைஞர்கள் இவ்வித மனோ நிலையில் இருக்கலாம். இது ஒருவித சக்தி விரயம். வீண் புலம்பல்.

ஷைலஜா என்கிற பெண்ணை நான் எப்படி காதலித்திருக்க வேண்டும்?

இந்தக் கட்டுரையை எளிமையாக்க நான் என்னை முன்னுதாரணமாக்கினேன்.

உண்மையில் இங்கு உங்களை நிறுத்திப் பாருங்கள். அடிப்படை விஷயம் ஒன்றுஉண்டு. எந்தவிதத் தூண்டலுக்கும் பலியாகாதீர்கள்.



காமமூட்டல் கோபமூட்டல், வஞ்சிக்கப்படுதல், எதற்கும் பலியாகாதீர்கள். உள்ளே மனதின் அடியில் நின்று உங்களை வேடிக்கை பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

தம்பி, என்னடா வழியற. அசிங்கமா இருக்குடா... என்று உள்ளே உரக்கக் குரல் கொடுங்கள்.

'நாளைக்கு இதே இடத்தில மீட் பண்ணலாமா?'

'இல்லையே வேலை இருக்கே'

'ப்ளீஸ் வாங்கப்பா'

'இல்லம்மா. ஆபீஸ் வேலை முக்கியம். ஆபீஸ் வேலைக்கப்புறம் தான் நீ'

'நான் முக்கியமில்லையா?'

'சத்தியமா இல்லை. இந்த ஆபீஸ் வேலை இல்லேன்னா நான் உனக்கு முக்கியமேயில்லை. அப்பாலே போ சாத்தானேன்னு சொல்லியிருப்பே.

'நாளைய விட்டா எனக்கு வேறநாள் வர முடியாதுப்பா'

இப்போது உள்ளே ஆராய்ச்சி செய்யுங்கள்.

வர மூடியுமா...வருவது நல்லதா...அவசியம்தானா... ஆராய்ச்சி செய்யுங்கள்.

இந்த வருகைக்கு எதையெல்லாம் பலிகொடுக்கப் போறீர்கள் என்று மிக நிதானமாய் யோசனை செய்யுங்கள்.

பிறகு முடிவு செய்யுங்கள்.

இந்த நிதானம்தான் காதலின் வெற்றி. இதுதான் காதலின் கம்பீரம். இழுத்த இழுப்புக்குப் போவதல்ல.

காதலிக்க முடியாதவர்களிடம் உங்கள் காதலைப் பற்றி தயவுசெய்து பேசாதீர்கள். வேறு விதமாகச் சொன்னால் அலட்டாதீர்கள்.

பாட்டில் இறங்கிவிடாதீர்கள். எந்நேரமும் பாடிக் கொண்டிருக்காதீர்கள். தினசரி கடமைகளைத் தளர விட்டு வானம் பார்த்து பீடி பிடிக்காதீர்கள்.

பாட்டு மனம் போடும் பெரிய கூச்சல். ஒரு மாதிரியான கதறல். நாசுரீகமான அழுகை. தனக்குத்தானே உரக்கப் பேசிக் கொள்வதின் இன்னொரு விதம். தெருவில் உரக்கப்பேசிக் கொண்டு நடக்க முடியாதவர்கள் பாட்டு பாடுகிறார்கள்.

நான் உன்னை எவ்வளவு லவ் பண்றேன் தெரியுமா என்று யாரிடமாவது சொல்லிப் புலம்ப ஆசைப்படுபவர்கள், உயிரே உயிரே என்று கை விரித்துப் பாடுகிறார்கள். வந்து என்னோடு கலந்துவிடு என்று அழுகிறார்கள்.

நெல் முனையும் யாரோடும் யாரும் கலக்க முடியாது. என்பதுதான் உண்மை. நெருப்பு உண்மை.

காதலின் முதல் இலக்கணம் கம்பீரம். அந்தக் கம்பீரம் மிக உண்மையாக இருக்க வேண்டும்.

உண்மையான கம்பீரம் காதலிக்கிறேன் என்று சொல்லவே சொல்லாது.

என்னைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்கு விருப்பமா என்றுதான் கேட்கும்.



# 3

சம்பத்குமாருக்கு உடைகள் மீது மிகப்பெரிய காதலிருந்தது. அந்தக் காதலை நிறைவேற்றிக் கொள்ள வசதி வாய்ப்பு இல்லாமல் இருந்தது, ஆனாலும் இருக்கின்ற உடைகளை நேர்த்தியாக அணிவதில் அவன் மிக அக்கறை காட்டினான்.

எது அணிந்தாலும் அணிந்தவை அவனுக்கு பாந்தமாக இருந்தன. அவன் உடல்வாகு அவ்விதம் இருந்தது. ஒட்டிய வயிறு. சட்டம் போன்ற மார்பு, அகலமான தோள்கள், நீளமான கைகள், உருளையான பிருஷ்டம், அடர்த்தியான கேசம், வரிசையான பற்கள், உறுதியான முகவாய், மிதமான உயரம், மாநிறமான தோற்றம். அவன் துண்டு கட்டிக்கொண்டு வந்தாலும் சுந்தர புருஷனாக காட்சியளித்தான்.

தன்னைப் பார்த்து பல புருவங்கள் உயர்வதும், முதிர்ந்த பெண்கள் உட்பட தன்னை ஆவலோடு பார்ப்பதையும் சம்பத்குமார் உணர்ந்து கொண்டான்.

அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்? இப்படி எல்லோரும் பார்க்கும்படி கவர்ச்சியாகவா தோற்றமளிக்கிறேன்? சம்பத்குமார் நெடுநேரம் தன்னை உயரக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

அவன் அப்பாவுக்கு அது பிடிக்கவில்லை.

''பருவத்துல பன்னியும் அழகாத்தான் இருக்கும். சும்மா உடம்ப முறுக்கி முறுக்கிப் பார்த்துட்டிருக்காதே.

நேரா நில்லு...பணிவா இரு...உள்ள உன் புத்திய பாரு...' எச்சரித்தார்.

ஏனெனில் அவர் இளமையில் இவ்விதம் எச்சரிக்கப் பட்டார்.

''உடம்பு அழகு கடவுள் அருள். நீ உழைச்சு சம்பாரிச் சது இல்ல...அப்ப எதுக்கு இத்தினி அலட்டல். உழைச்சு கெடச்சுதுயே பெருசா எடுத்துக்கக் கூடாதுன்னுவாங்க உடம்பு மினு மினுப்ப பெரிசா எடுத்துக்கலாமா-அதும் தவிர எதுனா தப்பா தின்னு ரெண்டு நாள் வயித்தால போயிட்டா உன்னைக் கண்கொண்டு பார்க்க முடியாது'' என்று சம்பத்குமாரின் அப்பாவுக்கு சொல்லப்பட்டது. அவர் புரிந்துகொண்டு உடம்பு பற்றிய கனாவில் இருந்து விலகினார்.

ஆனால், சம்பத்குமாரின் காலம் வேறாக இருந்தது.

''ஜீன்ஸ்போட்டு, நெக் பனியன் போட்டு...அது மேல அதே கலர் ஜீன்ஸ் ஷர்ட் போட்டு, தலைக்கு கண்டிஷனர் போட்டு, களிமண் பவுடர்ல ஃபேஷியல் பண்ணி, வுட்லண்ட்ஸ் ஷூ மாட்டி அப்படி நின்னா போறும்; தெரு வுல போற அத்தினி பேரும் உன்னைத்தான் பாப்பான். அப்பாஸ்...அப்பாஸ்னுவான்'' சம்பத்குமாரை புகழ ஒரு நடிகர் பெயரைச் சொன்னார்கள்.

சம்பத்குமார் மதி மயங்கினான்.

''எங்கிட்ட ஜீன்ஸ் பேண்ட் இருக்கு. நெக் பனியன் இல்லியேடா...ஷர்ட் இல்லியே...''

''நான் தர்றேன்...நான் தர்றேன் நான் தர்றேண்டா'' அவனது கல்லூரி நண்பர்கள் தர முன்வந் தார்கள்.

''எனது போட்டுக்க மச்சி. அப்புறம் திருப்பிக் கொடுத்திரு'' தானம் செய்தார்கள்.



சம்பத்குமார் காலையில் எழுந்ததும் முகத்தில் மாவு குழைத்துக்கொண்டு நிற்பான். தலைக்கு கண்டிஷனர் போட்டு அலசி காயவிடுவான். தலைமுடி மயில் பீலிபோல் அடர்ந்து, அசைந்து நிற்கும். நடக்கும்போது பொங்கிப் பொங்கி அலைபோல் படியும்.

முன்முடியை வாய் மடித்து ஊதினால் பின்னுக்குப் போகும். மறுபடி விழும்.

''அய்யோ-செம ஸ்டைலு மச்சி- இத மட்டும் பத்துப் பொண்ணுங்க இருக்கிற போது பண்ணினே...காணாதெ போய்டுவாளுங்க...''

''இன்னும் கொஞ்சம் சதை போடணும்டா...நீ... காலைல ஒண்ணவர் தண்டால் எடு.''

காலையில் அறைக்குள் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு தரையில் வளையம் வைத்து தண்டால் எடுப் பான். உடம்பு கரளையைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வான். குளித்துவிட்டு வந்து நூறு முறை தலை வாரி கண்ணாடி பார்த்துக் கொள்வான். ஹேர் டிரை யரில் சமன் செய்து கொள்வான். உள்ளாடை உடுத்தி பார்த்துக்கொள்வான். வெளியாடை உடுத்தி பார்த்துக் கொள்வான். ஷூ போட்டபின்பு பார்த்துக் கொள் வான். ஒருமுறை தன்னை சுற்றி பார்த்துக்கொள்வான்.

கால் அகட்டி நிற்பான். இடுப்பு ஒசிய நிற்பான். கண்ணாடி முன் நின்று கை குலுக்குவது போல் நடிப்பான். 'ஹலோ' என்று சொல்வான். சிரிப்பான். அதிகம் சிந்திப்பவன் போல் பார்ப்பான்.

''ஜாக்கிரதை...எங்கிட்ட இந்த வேலை வெச்சுக் காத...'' நடிப்பான்...

''நீங்க விடுங்க. அவன நான் பாத்துக்கறேன்...'' யாரிடமோ பேசுவான், வாழ்க்கைமுழுவதும். நிலைக்

கண்ணாடித்தனமாகப் போயிற்று, பொய்யைக் கொண்டாடுகிறகுணம் பெரிதாகப் போயிற்று.

உடம்பே அநித்யம் என்கிறபோது உடம்பை அலங்கரிக்கிற உடுப்புக்கு என்ன மதிப்பு; ஆனால் ஆள் பாதி ஆடை பாதி என்கிறார்கள்; ஒரு ஆளின் பாதி மதிப்பு ஆடையில் ஏற்படுகிறது என்கிறார்கள்.

ஆடை உயரே தெறிக்கிற வாண வேடிக்கை என்றால் அதை உயரே அனுப்புகிற ஒரு வெடிமருந்து குழல் தேவையாக இருக்கிறது.

ஆனால் சம்பத்குமார் உயரே போவதற்கு முன்பு சிதற ஆரம்பித்தான்.

நாலு பனை உயரத்தில் சிதற வேண்டிய வாணம் நாற்சந்தியில் சிதறினால் கலவரம்தான் ஏற்படும்.

தினசரி இரண்டுமணி நேரம்... மூன்றுமணி நேரம் கண்ணாடி முன்புபோக எட்டுமணி நேரம் நாற்சந்தியில் போயிற்று.

கையில் சில புத்தகங்களும்... கடன் வாங்கிய உடுப்புகளும் அவனை அலங்கரிக்க எல்லோரும் பார்த்து தன்னை வியக்க வேண்டுமென்று தெருவில் நின்றான். அவனோடு அவன் மனோநிலை ஒத்த சிலநண்பர்களும் நின்றனர்.

உழைத்து மெருகேற வேண்டிய பகல்நேரத்தில் அவர்கள் வெறுமனே பொம்மைகளாய்... பஸ் ஸ்டாண்டில் நின்றார்கள். என்ன படித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைக் கூட மறந்தார்கள். உடுப்பைக் காட்டுவதற்காகவே கல்லூரியின் முதல் வகுப்பிற்குப் போனார்கள்.

அங்கு பலரும் வியந்து திகட்ட திகட்டப் பாராட்டியதும் பஸ் ஸ்டாண்டிற்கு வந்தார்கள்.



''டே... கணேசன் சொன்னது கரெக்ட்றா... ஒரு கோல்டன் கலர் ஃபிரேம் ரவுண்ட் கிளாஸ் மாட்டிக்கடா... ஒரு அமெரிக்கன் லுக் வந்துடும், படிப்பாளின்னு சொல்லாம சொல்லும்.''

''ஒரு மூக்கு கண்ணாடி என்ன விலை வரும்?'' சம்பத்குமார் ஆவலாகக் கேட்டான்.

''முன்னூத்தி அம்பது ரூபா...''

''உங்கிட்ட இருக்குமா...?'' சம்பத்குமார் கேட்டான்.

''மாப்ளே... காசு போட்டு வாங்குடா... எல்லாத்தியுமே ஓசியில் எதிர்பார்க்காதே.''

சம்பத்குமார் மனம் குன்றினான்.

''ச்சே, எப்படியாவது கண்ணாடி வாங்கணும்டா...'' கண்கலங்கிப் பேசினான்.

''நம்ம பேட்ட கஜாகிட்ட ஐந்நூறுரூபா வாங்கிக்க. மொள்ள திருப்பிக் கொடு. ஆனா திருப்பிக் கொடுத்திடணும். கொடுக்காட்டி கஜா அசிங்கப்படுத்திடுவான்.''

''எப்படியாவது திருப்பிக் கொடுத்திடறேன்பா...''

எப்படி என்று சம்பத்குமார் யோசிக்கவே இல்லை. கஜாவிடம் ஐநூறு ரூபாய் கடன் வாங்கினான். வட்டி விசாரிக்கவே இல்லை. மறுமாதம் அது அறநூறு ரூபாயாகும் என்று யாருமே சொல்லவே இல்லை.

முன்னூறு ரூபாய்க்கு கண்ணாடி, நூறு ரூபாய்க்கு பாடி ஸ்பிரே, நூறுரூபாய் கைச்செலவுக்கு என்றுமாறியது.

''ஐயோ... இப்ப அஜித் மாதிரி ஆய்ட்டேடா...''

எல்லோரும் பாராட்டினார்கள். மறுபடியும் கண்ணாடி தவம் நடந்தது. கீழ்ப்பார்வையாகவும், மேற்பார்வை

யாகவும், இடப்பாவையாகவும், வலப்பார்வையாகவும் பார்த்துக்கொண்டான்.

''டே... இடம் மாத்திடுவோம்டா... கம்ப்யூட்டர் கோர்ஸாண்ட... ஏகப்பட்ட பொண்ணுங்க வருது. அங்கே போய் நிப்போம்.''

பி.ஏ. பொருளாதாரம் தமிழில் படிக்கிற சம்பத்குமார் நாலு வார்த்தை ஆங்கிலத்தில் சுத்தமாக பேசத் தெரியாத சம்பத்குமார்-கம்ப்யூட்டர் வகுப்பு புத்தகங்களைக் கையில் வைத்துக் கொண்டு யாருடைய மோட்டார் சைக்கிளுக்கு அருகே... எல்லாம் தெரிந்தவன்போல் காட்சி கொடுத்தான்.

பொய்யைக் கண்டு சோதிக்காமல் ஏமாறுகிறவர்கள் இந்த உலகத்தில் உண்டு. சம்பத்குமாருக்கு காட்சி கொடுப்பதுதான் முக்கிய விஷயமாக இருந்ததே தவிர... யாரையும் காதலிப்பது விஷயமாக இல்லை.

ஆனால் அவனுடைய அட்டகாசமான பர்சனாலிட்டி மற்ற நண்பர்களுக்கு உறுத்தலாக இருந்தது.

''சம்பத்குமார்... உன்ன அந்தப் பொண்ணு பாத்து கிட்டே போகுது. நீ திரும்பாதே. நீ பாட்டுக்கு டீப்பா படிச்சுகிட்டே இரு.''

அந்தப் பெண் மறுபடியும் இறங்கி வந்தது.

''டே... பார்ட்டி வருது ரொம்ப 'லுக்' வுடாதே. அப்படியே டிசண்டா எங்ககூட பேசிட்டே இரு.''

நண்பர்கள் எச்சரிக்க அவன் அப்படியே செய்தான்.

''இங்க மைக்ரோடிப் பென் எங்க கிடைக்கும்...?'' அந்த பெண்ணுக்கும் இந்த வாலிபர்கள் மீது ஏதோ ஒரு ஆர்வம் இருந்திருக்க வேண்டும். தெருவில் போகிற நூற்றுக்கணக்கான ஜனங்களை விட்டுவிட்டு



இவர்களிடம் வந்து பேசியது உள்ளிருந்து பீறிடும் ஒரு குதூகலத்தினால்தான்.

''மைக்ரோடிப் பென் எங்கப்பா கிடைக்கும்...?'' நண்பர்கள் உரக்க கேட்டார்கள்.

''நான் கூட்டிகிட்டுப் போறேன்.'' சம்பத்குமார் கை உயர்த்தினான்.

''வாங்க மேடம்'' அவளோடு நடந்தான்.

''எனக்கு பெங்களூரு... மெட்ராஸ்க்கு இப்பதான் வந்தேன். அதனால கடை பத்தியெல்லாம் தெரியல.''

''சரி மேடம்''

''நீங்களும் கம்ப்யூட்டர் படிக்கறீங்களா...''

''முடிச்சிட்டேன் மேடம்...''

''பேஸிக்கா...'' அவள் என்ன கேட்கிறாள் என்று தெரியவில்லை.

ஆனாலும் ''ஆமாம்'' என்றான்.

''இப்ப என்ன பண்றீங்க...''

''இப்பத்தான் ஊருக்கு வந்திருக்கேன் மேடம்''

''உங்களுக்கும் மெட்ராஸ் சொந்த ஊர் இல்லையா?''

''மெட்ராஸ்தான் சொந்த ஊர்'' சம்பத்குமார் மனம் பதிலுக்கு அலை பாய்ந்தது. என்ன சொல்லலாம் என்று தேடியது. சும்மா ஒரு பொய் சொல்லிவிட்டா என்ன...

''மெட்ராஸ்தான் சொந்த ஊரு...ஆனா நான் போன வாரம்தான் வந்தேன்...''

''எங்கே இருந்து...''

''ஸ்டேட்ஸ்... அமெரிக்கா''

''அப்படியா...'' அந்தப் பெண் பெரிதாக வியந்தாள். பேராசை கொண்ட நிறைய பேருக்கு அமெரிக்க பூமி தங்கும் தளமாய்... உச்சி மலையாய்... பிடிக்கப்பட வேண்டிய கோட்டையாய்... அடையப்பட வேண்டிய சொர்க்கமாய் இருக்கிறது.

''ஸ்டேட்ஸ்ல எங்கே...?'' அவள் அவனை உற்றுப் பார்த்துக் கேட்டாள். அந்தப் பார்வை அவன் மீது பட்டு அவனுக்குக் கிறக்கத்தை ஏற்படுத்தியது. அவன் உள்ளே பதில் தேடினான்.

''பிட்ஸ்பர்க்'' பதில் சொன்னான். அவன் நண்பர் கூட்டத்தில் ஒரு நண்பனின் ஒன்றுவிட்ட அண்ணா பிட்ஸ்பர்க்கில் வசிக்கிறான். அதுபற்றி அவன் நண்பர்கள் கேட்க, விலாவரியாய் விளக்கியது ஞாபகத்திற்கு வந்தது

''பிட்ஸ்பர்க்ல நிறைய இரும்பு தொழிற்சாலை இருக்குல்ல...''

''ஆமாம்...'' என்று சம்பத்குமார் பதில் சொன்னான்.

''வேற என்னல்லாம் இருக்கு...?'' தெரிந்து கொள்ள வேண்டும என்று பரபரத்தாள்.

''பிட்ஸ்பர்க்ல என்ன வேலை.''

''கம்ப்யூட்டர்...''

''புரோக்கிராமரா...'' அவள் விசாரித்தாள். இதுவும் ஏதோ கேள்விப்பட்ட விஷயமாகத்தான் இருக்கிறது. 'புரோக்கிராமரா' என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

''உங்கள பாத்தவுடனேயே நெனச்சேன். நீங்க நம்ம ஊர் ஸ்டைலா இல்லியே...ரொம்ப டீஸண்டா இருக்கீங்க. நான் நெனச்சது ரொம்ப கரெக்ட்...'' அந்த இளம்பெண் துள்ளியது.



''ஆனா...ஸ்டேட்ஸ்ல இருப்பீங்கன்னு நெனைக்கல... கம்ப்யூட்டர்ல பெரிய ஆளா இருப்பீங்கன்னு நெனச்சேன்''

''அமெரிக்காவுல புரோக்ராமருக்கு நல்ல சம்பளம் இல்லே.''

''சுமாரா வருது...''

''சுமாரான்னா...''

''ஒரு மாசத்துக்கு நாப்பதாயிரம்...'' அவன் பொய் சொல்லுகிற பயத்தில் எச்சில் விழுங்கி பேசினான்.

அதை அடக்கம் என்று அவள் எடுத்துக் கொண்டாள்.

கண்களைப் பார்த்து தான் பேசுவது பொய் என்று கண்டுபிடித்து விடப்போகிறாளோ என்று நேர் பார்வையை விலக்கினான்.

அவன் தன்னைப் பார்த்து வெட்கப்படுவதாய் நினைத்துக் கொண்டாள். விலகி நடந்தால்தான் அவள் தன் உடுப்பை நன்றாக பார்க்க முடியும் என்று அவன் தள்ளி நடந்தான், அவனை கண்ணியவான் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

மனிதர்களை எடைபோடுவது மிகவும் கடினமான விஷயம். அதிக வயதும் பரந்த அறிவும் இருந்தாலும் சறுக்கிவிடும் சமாச்சாரம். பொய் தோற்றங்களை எல்லாம் விலக்கி உண்மையை ஸ்பரிசிக்க பொறுமைவேண்டும். பொறுமைக்கு அடிப்படை அமைதி. அமைதிக்கு அடிப்படை ஆசையின்மை.

ஆசையே வியாதிக்கு காரணம் என்பது மகா வாக்கியம். இந்த வியாதி மனம் சம்பந்தப்பட்டது. மனம் நோய்ப் பட்டால் உடம்பை பாதிக்கும்.

அந்த இரண்டு பேருமே அதிகம் ஆசைப்பட்டார்கள். அதனால் அவசரப் பட்டார்கள்.

என்னிடம் பல யுவதிகளும், இளைஞர்களும் கேட்டிருக் கிறார்கள்.

''எப்படி சார் ஆசைப்படாம இருக்க முடியும்?''

ஆசையில்லாம வாழறது ஒரு வாழ்க்கையா...ஆசை இல்லாத வாழ முடியுமா...என்று கோபமாய் கேட்டு இருக் கிறார்கள்.

நான் அவர்களுக்குப் பதில் சொல்லி இருக்கிறேன். தொடர்ந்து சொல்லுவேன்.

# 4

**ஆசையை அடக்க முடியுமா?**

முடியுமே.

ஆசையை அகற்ற முடியுமா?

முடியுமே.

இதற்கு மிகுந்த புத்தி பலம் தேவையா?

இல்லை, அப்படியொன்றும் தேவையில்லை.

ஆனால்...மனதின் பார்வையை உள்ளே செலுத்துதல் என்கிற பழக்கம் தேவை. மனதின் பார்வையை வெளியே அலையவிடாத பக்குவம் தேவை.

ஆசையோடு அலையாது...எது ஆசைப்படுகிறதோ அந்த மனதை கவனிக்க துவங்கிவிட்டால் ஆசை பின் வாங்குகிறது,



எனக்கு இனிப்பு மிகவும் பிடிக்கும். ஆனால் வயதும் உடற்பருமனும் கருதி வேண்டாம் என்று சொல்லப்பட் டால் நான் கோபப்படக் கூடாது. நொந்து கொள்ளக் கூடாது. ஒரு இனிப்பு சாப்பிடக் கூட அனுமதிக்காத வாழ்க்கை எதற்கு...என்ன எழவு இது என்று ஆத்திரப் படக் கூடாது.

ஆழ்ந்து உள்ளே பார்க்க வேண்டும்.

''கத்தாத...கத்தாத...ஸ்வீட் வேண்டாம் வுட்ரு...''

உள்ளே எங்கு ஆசை கிளம்புகிறதோ...'சாப்பிடணும் சாப்பிடணும்' என்று அடித்துக் கொள்கிறதோ அங்கே எழும் ஆசையை உற்றுப் பார்த்து அந்த இடத்தில் பேச வேண்டும். இதை எழுத்தால் சொல்லித்தரமுடியாது.

ஒரு முறை இப்படிப் பேசுவது சிக்கிவிட்டால், பேசி மனதை நிலை நிறுத்திக் கொண்டால்...அப்படி கட்டப் படும் மனதை வைத்துக்கொண்டு பல காரியங்கள் சாதித் துக் கொள்ளமுடியும். அப்படி உள்ளே பேசுகையில்... ஆசை அடங்கும்...அகலாது, ஆனால், மனம் மனதோடு பேச ஆரம்பித்துவிடும்,

'எப்பவாவது ஒரு தரம் சாப்பிடு...நான் சொல்ற போது...சொல்ற நேரத்துல எடுத்துக்க...இனிப்ப புடிச்சு கிட்டு நிக்காதே...உதறு...அப்படி விஷயமிருப்பதையே மறந்துவிடு. எதிரே வைத்தாலும் மனதை அதிலே செலுத்தாதே'

'இனிப்பு சாப்பிடணும்னு ஆசையிருக்குல்ல...காத்தா லயும் சாயந்திரமும் நல்லா நட...உடம்பைக் குறை. நிறைய கீரை சாப்பிடு' காய்கறி சூப் குடி, உடம்பு வற்றிய நேரம் முழுசா ஒரு ஸ்வீட் சாப்பிடு'

'அந்தப் பெண் உனக்கு வேணுமா. 'டக்'ன்னு எப்படி கிடைக்கும்' உனக்கு அதுக்கு யோக்யதை இருக்கா,

இல்லேன்னு தெரியுதில்ல...அப்போ ஏன் கத்தறே...அவ தேவைன்னு ஏன் அலையறே...ஏன் பின்னாலயே ஓடறே... வெறுமனே ஆசைப்பட்டா கிடைச்சுடுமா...பின்னால ஓடினா ஜெயிச்சுடலாமா?

ஆசைப்படறதுக்கு முன்னாடி ஆசைப்படற தகுதிய வளர்த்துக்கணும். ஆசைப்படற போதே உன்னிப்பா பார்க்கணும். தேவைக்கு அதிகமா ஆசைப்படறமோன்னு யோசிக்கணும்.

அப்படி பாக்காட்டி என்னாகும்...ஆசைப்பட்டதை அடையறதுக்கு எல்லா வழியிலும் ஈடுபடணும்னு தோணும். ஏகப்பட்ட பொய்வரும். கண்மூடித்தனமா ஏமாத்தற புத்தி வரும், நடிக்கும்படியா நேரும்.

ஆனால் ஒரு மனிதன் எத்தனை நாள் பொய் சொல்ல முடியும். ஒரு மனுஷன் எவ்வளவுநாள் ஏமாத்த முடியும். எத்தனை வருடங்கள் நடிக்க முடியும்,

கம்ப்யூட்டரின் அடிப்படைகூட தெரியாத சம்பத்குமார் உடுத்திக் கொண்ட அழகால் யாரையோ கவர்ந்து' கவர்ந்த காரணத்தால் தொடர்ந்து பொய் சொல்லி அவனையுமறியாமல் ஒரு விபரீத விளையாட்டுக்குள் இறங்கினான்.

அவள் பெயர் மிருணாளினி. அவளுக்கு இரண்டு தங்கைகள் இருந்தார்கள். அவள் அப்பாவிற்கு சுமாரான உத்யோகம். அம்மா பள்ளிக்கூடத்து டீச்சர். நகரத்தில் ஒரு சந்தில் இரண்டாவது மாடியில் குடியிருந்தாள்.

அவள் அம்மாவின் அழகு அவளுக்கும் இருந்தது. அவளின் பதினெட்டு வயது பருவம் அந்த அழகிற்கு மெருகேற்றியது.

'பிளஸ் டு'வில் தொண்ணூறு சதவீதம் வருமென்று நினைத்தாள். எண்பது சதவீதம்தான் வந்தது. எண்பது



சதவீதத்திற்கு அவள் கேட்ட பாடம் எதுவும் கிடைக்காது. எனவே முழுநேர கம்ப்யூட்டர் பாடம் படிக்க ஆசைப்பட்டாள்.

ஏதாவது படித்து எங்கேயாவது வேலைக்கு போய் தானும் காசு சம்பாதித்தால் வீட்டில் கூட அரை லிட்டர் பால் வாங்கலாம். கெட்டி தயிர் சாதம் சாப்பிடலாம். கிழிசலில்லாத பாவாடை...சாயம் போகாத புடவை... ஒட்டுப் போடாத நைட்டி என்கிற விஷயங்களைத் தூக்கிப் போட்டுவிட்டு...நல்ல துணிமணிகள் வாங்கலாம்.

வீட்டில் உள்ள எல்லோரும் ஒட்டு மொத்தமாய் சினிமா போகலாம். கும்பகோணம்...தஞ்சாவூர் என்று ஊர் சுற்றலாம். கடைசி பெண்ணுக்கு இரண்டு சவரனில் நகை செய்யலாம்.

என்னென்னமோ அவருக்கு சிந்தனையில் ஓடின.

அவள் சிநேகிதியின் அண்ணன் வீட்டிற்கு வந்து இருந்தான்.

அமெரிக்காவில் கம்ப்யூட்டர் புரோக்கிராமர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள்.

கி. பி. இரண்டாயிரத்தில் நிறைய புரோக்ராம்கள் மாற வேண்டியிருக்கின்றன. எனவே, செய்த புரோக்ராம்களையே மறுபடி புதிதாய் பிரதி செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு பெரிய அறிவு தேவையில்லை. இது இன்ஜினியரிங் விஷயமில்லை. கம்ப்யூட்டர் இயக்கத் தெரிந்தால் போதும். நிறைய பேர் இந்தியர்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாய் தமிழ் நாட்டில் இருந்து போகிறார்கள்.

பிளஸ் டு இங்கிலிஷ் மீடியம் படித்து ஆங்கிலத்தில் தாராளமாக பேச முடிந்து...சிறிது கெட்டிக்காரத்தனமும் இருந்தால் போதும், கம்ப்யூட்டர் இயக்க எங்கேனும்

நல்ல பள்ளியில் படித்தால் போதும். அமெரிக்காவில் நிச்சயம் வேலை கிடைக்கும்.

தான் அப்படித்தான் வேலை செய்வதாகவும் இப் போது கல்யாணம் செய்யப்போகும் பெண்ணும் கம்ப் யூட்டர் இயக்கத் தெரிந்திருப்பதால் அவளையும் அழைத் துப் போவதாகவும்...இரண்டு பேரும் சேர்ந்தால் ஒரு மாதத்திற்கு இரண்டு பேரும் எழுபத்தி ஐந்தாயிரம் ரூபாய் சம்பாதித்து விடலாம் என்றும் சிக்கன செலவு போக ஐம்பதாயிரம் ஊருக்கு அனுப்பிவிடலாம் என்றும்,

ஐந்து அல்லது ஆறு வருடத்தில் சென்னையில் வசதி யாக செட்டிலாகிவிடலாம் என்றும் விபரமாய் பேசினான்...

ஒரு மாதத்திற்கு எழுபத்தைந்தாயிரம் ரூபாய் சம்பளம் என்கிறபோதே மூச்சு முட்டிற்று.

மல்லாக்கப் படுத்துக் கொண்டு அவள் அமெரிக்க கனவுகள் காண ஆரம்பித்தாள்.

அவளுக்கு சின்னத் திரையோ...சினிமாவோ பெரிய மயக்கத்தைக் கொடுக்கவில்லை. காதல் பாட்டுக்கள் கண் சொருக வைக்கவில்லை. உடம்பின் ஹார்மோன்கள் கிளறி தொந்தரவு செய்யவில்லை. நடிகர்களும்...நடிகை களும் இடுப்பை இடைவிடாது வட்டமாக ஆட்டுவதில் உணர்ச்சி ஏற்பட்டு விடவில்லை.

மாறாய்...யாராவது அமெரிக்கா என்றால் அதிர்ந்து போனாள். கம்ப்யூட்டர் பற்றி பேசினால் துள்ளி குதித் தாள். சிங்கப்பூர், புருனே, மலேஷியா. ஆஸ்திரேலியா, ஜப்பான், யு.கே,மிடில் ஈஸ்ட் பிரான்ஸ் என்று யார் பேசினாலும் ஓடிப் போய் ஒட்டிக் கொள்வாள்.

'என்ன வேலை... என்ன சம்பளம்-எப்படி இருக்கு லைஃப்...லேடிஸ் போக முடியுமா? போனா தனியா இருக்க முடியுமா?'



மிருணாளினி என்ற அந்தப் பெண் வாழ்க்கையில் ஜெயிப்பதற்காக...பரம்பரை பரம்பரையாக வரும் வறு மையில் இருந்து மீள்வதற்காக...தன்னையும் சேர்த்து இரண்டு தங்கைகளைக் கரையேற்றுவதற்காக தகப்பனை யும், தாயையும் கடன் சுமைகளிலிருந்து விடுவித்து சந்தோஷப்படுத்துவதற்காக...நிறைய படிக்கவில்லையே என்ற ஆதங்கத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக 'டாலர் கனவுகள்' கண்டாள்.

ஆசைப்பட்டது தவறில்லை.

ஆசையை எப்படி நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்று தெரியாமல் அலைந்தது பிசகு.

''நம்மால வெளிநாட்டுக்கு போக முடியாது. வெளி நாட்டுக்கு யாராவது போனா...அவா கூட தொத்திக் கலாம்...அப்படி கூட்டிண்டு போக அண்ணாவோ, மாமாவோ இல்லை. அதனால இந்த மாதிரி யங் பாய்ஸ் யாராவது புடிச்சுண்டுதான் போகணும்.

யங் பாய்ஸ் கொஞ்சம் பேசினா லவ்யூன்னுதான் சொல்லுவான்...'' 'தாக்கரே' மூக்கரே'ன்னு எதாவது உளறுவான். வேற வழி... பொறுத்துக்கத்தான் வேணும்.

கம்ப்யூட்டர் கிளாஸ் வாசல்ல பார்த்த பையன் டக்கரா இருக்கான். ரொம்ப ஹேண்ட ஸம். கூச்ச சுபாவம் வேற... முகத்துல சரஸ்வதி களை தாண்டவ மாடறது...

இவன் மாதிரி யாராவது ஒருத்தர் சினேகிதம் கிடைச்சா வாழ்க்கையில நன்னா செட்டிலாயிடலாம்.

''டே... சம்பத். பாப்பா இன்னிக்கும் உன்னையே பாக்குதுடா. அய்யோ சிரிக்குதுடா... பேர் கேட்டியா...''

''கேக்கலை...''

''போடா... போய் கேளு...''

''எப்படி... எப்படி போய் டக்குனு கேக்கிறது...?''

''நேத்து வாங்கிக்கொடுத்த பேனா நல்லா எழுது தான்னு கேளு...அப்புறம் பேர் கேளு...'' நண்பர்கள் உந்தினார்கள்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா.

நீங்கள் தெளிவாக இருந்தால், திடமாக இருந்தால், விழிப்போடு இருந்தால் எவர் சொல்லியும் உங்களுக்கு தீங்கு வராது. உங்களை யாரும் தீங்கு நோக்கி தள்ள முடியாது,

தன் நினைவில்லாமல் நண்பர்கள் நெட்டித் தள்ள நகர்கிறவன் முட்டாள். தன் காதல் நிற்க நண்பர்களை முட்டுக் கொடுக்கச் சொல்பவன் மூடன்.

சம்பத்குமார் சலவை மடிப்பு கலையாத உடையோடு அவளை நெருங்கினான்.

''பேனா... நல்லா எழுதுதுங்களா...'' என்றான்.

அவள் பதில் சொன்னாள். பெயர் கேட்டான். அவள் பதில் சொன்னாள்.

''வீடு எங்கே...'' விவரம் கேட்டான். அவள் பதில் சொன்னாள்.

''அட...அந்த ஏரியாவா...உங்கப்பா உயரமா செகப்பா உங்கள மாதிரியே இருப்பாரா...''

''குள்ளமா கருப்பா இருப்பாரு. எங்கம்மாதான் என்னை மாதிரி சிகப்பா அழகா இருப்பாங்க.'' அவள் தொடர்ந்து எல்லா கேள்விகளுக்கும் பதில் சொன்னாள்.

''வேற ஒண்ணுமில்லயே...'' அவன் விலகினான். நண்பர்களிடம் வந்தான். நண்பர்கள் பொறாமையில் வெந்தார்கள். ஆனாலும் கை [கொடுத்தார்கள்.



அவனுக்கு அவன் வெற்றியை நம்ப முடியவில்லை இது வெற்றியா என்றே தெரியவில்லை, ஆனாலும் ஒரு அசட்டு அகம்பாவம் அவனைப் பற்றிக் கொண்டது,

''நீ ஸ்டைல் இம்ப்ருவ் பண்ணு மச்சி, நிக்கி ஷூ போடு. என் ஃபிரண்டு ஒருத்தன் பழைய ஷூவைப்பாதி விலைக்கு விக்கிறான் வி நெக் பனியன். இம்போர்டட் வாட்ச், செண்ட் எல்லாம் வெச்சுகிட்டு இருக்கான். ஒரு ஆயிரம் ரூபா எடுத்துகிட்டு வாயேன் ரெண்டு மூணு அயிட்டம் வாங்கிடலாம்.''

''பழைய ஷூ போடலாமாடா...'' நண்பர்களிடம் ஒரு பையன் கேட்க அவனை லொட் லொட்டென்று பல பேர் தட்டினார்கள்.

''பழசுன்னு...ஷூவில எழுதியா ஒட்டியிருக்கு. புது ஷூ என்ன விலை தெரியுமா? மூவாயிரத்து அறுநூறு ரூபா. நான் ஆயிரம் ரூபாவுக்கு மூணு அயிட்டம் வாங்கித் தரேன்றேன். அசிங்கமா பேசறியே...'' தடுத்தவனை இன்னொரு முறை அடித்தார்கள்.

ஆயிரம் ரூபாய் எப்படி சம்பாதிப்பது என்று சம்பத் குமார் யோசித்து கொண்டே போனான். கல்லில் கால் தடுக்கியது. தடு மாறியதில் கால் கட்டை விரலும், முழங் காலும் அடிபட்டன.

சம்பத்குமார் நொண்டிக் கொண்டே வீட்டிற்குள் போனான். வீடு 'என்ன... என்ன' வென்று பதறியது.

நண்பனின் மோட்டார் சைக்கிள் ஓட்டும் போதும் ஒரு ஆளை இடித்ததாகவும்...உயிர் பிழைப்பதே அதிசயம் என்றும், கேஸ் நடக்காமல் இருக்க ஆயிரத்து ஐநூறு

இ—3

ரூபாய் தரவேண்டும் என்றும் அழுதபடியே பொய் சொன்னான்.

''தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு...'' அவன் அம்மா ஒற்றை வளையல் கழட்டி தந்தாள்.

''வித்து கட்டிடு...''

அவனுக்கு வலித்தது. ஆனாலும் விற்றான்.

## 5

முக்கால் சவரன் நகையை விற்றபோது இரண்டா யிரம் ரூபாய் கிடைத்தது.

காசு கையில் கிடைத்ததும் சம்பத்குமார் நண்பனைத் தேடிப் போனான். அவனுக்கு நூறு ரூபாய் தருவதாக ஒப்பந்தம் செய்து கொண்டான்.

ஷூ வாங்கினான். செண்ட் வாங்கினான். ஒரு எலக்ட்ரானிக் வாட்ச் வாங்கினான். ஐ லவ் யூ என்று எழுதப்பட்ட மைக்ரோ டிப் பேனா வாங்கினான். லாஸ் ஏஞ்சல்ஸ் கலிஃபோர்னியா, பஃபெல்லோ என்ற ஸ்டிக்கர் கள் வாங்கினான். நயாகரா நீர் வீழ்ச்சி போட்ட பனியன் வாங்கினான்.

அம்மாவின் கை மூலியாகி பல பொருட்கள் இவனை அலங்கரித்தன.

மறுபடியும் கம்ப்யூட்டர் கிளாஸ் வாசலுக்கு வந்தார் கள்.

பழைய நெக் பனியன், பழைய செண்ட் இருந்தாலும் அவன் பொலிவு கண்டு அவன் நண்பர்கள் பொறாமைப் பட்டார்கள்.



சம்பந்தப்பட்ட பெண் மட்டுமின்றி மற்ற எல்லா பெண்களும் அவனை உற்று நோக்குவது பார்த்து மன மெலிந்தார்கள்.

அதில் தந்திரமிக்கவர்கள் அவனைச் சிக்க வைக்க எண்ணினார்கள்.

''இவனைக் கவுத்துடணும் மச்சி...'' என்று தங்களுக் குள் பேசிக் கொண்டார்கள்.

''பேனா யாருக்குமா பார்ட்டிக்கா...ஸ்டிக்கர் பார்த்து ஒட்டுமா...'' என்று கேலி செய்தார்கள்.

''பார்ட்டி...உங்காளை எங்கியாவது கூட்டிகிட்டுப் போ...எங்க எதிர்ல பேச பயப்படுது. போய் திரும்பினா பார்க்...இன்னும் கொஞ்சம் தள்ளிப்போனா அனுமார் கோயில், அந்த ரூட்லயே நேரா போய்ட்டேனு வெச்சுக்க. எல்லாம் பங்களாவாதான் இருக்கும். ரோட்டோரமா கை கோர்த்துகிட்டுப் போனாகூட எவனும் கண்டுக்கமாட டான்.

''பீச்சுகிட்ட ஒரு ஹோட்டல் இருக்கு. தனி கேபினுக் குள்ள கூட்டிகிட்டுப் போயிடலாம். கிஸ் அடிக்கலாம்.

''கிடைச்சத விடாத மச்சி...பொண்ணுங்களே துணிஞ்சு பேசறபோது நாம பின்வாங்கலாமா...''

''அவன் துட்டு இல்லியேன்னு பாக்கறான்டா...''

''கடவுளே...அதுங்க செலவு பண்ணும்.''

''அது நல்லா இருக்குமா...''

''முத வாட்டி செலவு பண்ணட்டும். அவங்களுக்குப் பிடிச்சுப் போச்சு...போலாமா...போலாமான்னு அவங் களா கேப்பாங்க...''

சம்பத்குமார் அவர்கள் காட்டிய வழியில் மனசால் பயணப்பட்டான். மனசுக்குள் கை கோர்த்தான். இடுப்பு வளைத்தான். முத்தம் கொடுத்தான்.

மெல்ல மெல்ல மனச்சேற்றுக்குள் இறங்கினான். எண்ணங்களின் திண்மைதான் செயல். திரும்பத் திரும்ப வரும் எண்ணங்களின் ஸ்தூல வடிவம் செயல்.

ஒரு முறை மனசுக்குள் காதலித்துப் பழகிவிட்டால் எங்கேயாவது எப்போதாவது காதல் பிய்த்துக் கொண்டு வந்துவிடும்.

காமமும் அவ்வாறே. மனசுக்குள் மறுபடி மறுபடி யோசித்துப் பழகிவிட்டால் எங்கேனும், எப்படியேனும் சீறிக் கிளம்பிவிடும்.

எண்ணங்கள்தான் வாழ்க்கை.

எண்ணங்கள் தோன்றும்பொழுதே சுத்தப்படுத்திவிட வேண்டும். இந்த விஷயத்தில் என் யோக்யதை என்ன? ஆசைப்படுகிறபோதே யோசிக்க வேண்டும்.

இந்த ஆசைக்கு இத்தனை பொய் சொல்ல வேண்டுமா. இத்தனை பித்தலாட்டம் தேவையா. இது வெளியானால் என் கதி என்ன? ஆசை முக்கியமா...அவமானம் முக்கியமா என்று ஆசையை ஆராய வேண்டும்.

அம்மாவை ஏமாற்றி அப்பாவை ஏமாற்றி தம்பி, தங்கைகளின் நம்பிக்கையைத் தகர்த்து நான், என் ஆசை...என்று நடப்பது சரியா? என்று சிந்திக்க வேண்டும்.

ஆசையின் வேகத்தையும்...விளைவுகளையும் மனசுக்குள்ளேயே கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும்.

ஏன் இவை தோன்றுகின்றன? என் வேலைக்கு இவை உதவுமா...அல்லது இடைஞ்சல் செய்யுமா? என்னை வளர்க்குமா...அல்லது அழிக்குமா...?



'என்னோட ஆசை தப்புதான். என்னா பண்றது பட்டுட்டேனே...' போ...போய் படு. அழி. நாசமாகு. மலத்தில் கால் வை. முகர்ந்து பார். உடம்பு முழுவதும் தடவிக் கொண்டு நில்

உன்னைத் தோளில் போட்டு வளர்த்தவள் கூட அருவெருப்படையும்படி செய். நண்பர்களும் நல்லோர்களும் விலகும்படி கிட.

இந்த வாழ்க்கையின் அவலம் வெகு சீக்கிரம் உன்னைத் தாக்கும். உன் தனிமை உன்னைத் தின்னும். உன் தவறு உன்னை எரிக்கும்.

அலறுவாய்...ஆளிருக்காது. அப்போது, எவர் ஆறுதலும் உனக்கு கிடைக்காது.

ஆறுதலற்ற இந்நிலைமை உன் மனோ நிலையை இன்னும் மோசமாக்கும். இந்தக் கலவரத்தை ஆசையின் ஆரம்பத்திலேயே யோசனை செய்.

''இப்படி எல்லாம் முடியுமா...ஆசைப்படறபோதே இவ்வளவு யோசிக்க முடியுமா...பொண்ணு பார்த்த உடனே பொங்கிடறோமே...இதுல என்னத்த யோசனை பண்றது. அந்தப் பொண்ணை பார்த்தவுடனே மனசுக்குள்ள ஒரு சந்தோஷம். இவ...என்னை லவ் பண்ண மாட்டாளான்னு ஒரு ஏக்கம். லவ் பண்ணினா நல்லாயிருக்குமேன்னு ஒரு ஆசை.

அப்படியே மனசு ரெக்கை கட்டிகிட்டு பறக்குது. நா அவகிட்ட துணிஞ்சு பேசிட்டா மாதிரியும்...அவ பதிலுக்கு லவ் யூன்னு சொல்லிட்டா மாதிரியும்...எங்க வூட்ல எல்லாரும் ஒத்துகிட்ட மாதிரியும்...அவங்க வூட்ல எல்லாரும் மரியாதையா பேசுனா மாதிரியும் எங்கங்கயோ போகுது. நிறுத்தவே முடியலை.

மாப்ள அழைப்பு...கல்யாணம்...ரிசப்ஷன்...சாந்தி முகூர்த்தம் வரைக்கும் போயிட்டேன் போயேன்.

இதற்குப் பெயர்தான் மரணம். வாழ்வதற்கு எதிர் பதம் மரணம்தானே. கனவு வாழ்வதில்லையே...எனவே கனவு மரணம்தானே...

கவிஞர்கள் கனவை சுகமென்பார்கள். அறிஞர்கள் சொல்லமாட்டார்கள்.

தன் எண்ணங்களுக்கு கடிவாளம் இல்லாதவன் வாழ்க் கையை ஓட்ட முடியாது. சிறு குதியலுக்குக்கூட கீழே விழ வேண்டியிருக்கும்.

வாழ்க்கையைச் சீராய் ஓட்ட எண்ணங்களை கவன மாய் பார்ப்பதை தவிர வேறு வழியே இல்லை. கடவுள் காப்பாற்றுவான் என்பதோ...கிரகங்கள் உதவி செய்யு மென்பதோ சாமியார்களின் விபூதி சரிப்படுத்துமென் பதோ பொய்.

கடவுளை அறியும் விஷயமும்...தன்னை அறியும் விஷய மும் ஒன்றே. தன்னை உற்று கவனிப்பவனுக்குதான் கடவுளைக் காண முடியும். கடவுளைக் காணுதல் என் பது தன்னை கவனித்தல். ஒரு நல்ல குரு சீடனை அவன் மனதுக்குள்ளே தள்ளுவார். உள்ளே பார்...என்று கற்றுக் கொடுப்பார்.

குரு இல்லாமலும் கற்றுக் கொள்ளலாம். மனசுக்குள் இடைவிடாது பார்த்து எண்ணங்களைப் பிரித்துப் போட்டு விடலாம்.

ஆனால் இதெல்லாம் சம்பத்குமாருக்கு யாரும் கற்றுத் தரவில்லை, இதை யாரும் கற்றுக் கொடுத்தாலும்ஏற்றுக் கொள்ள எல்லோருக்கும் தெரியாது.

''நான் போனேனா... பொண்ணுதானா வருது. விட்ற சொன்னா எப்படி... அப்புறம் என்னைஎல்ல அது தப்பா நினைச்சுக்கும். ஒண்ணுமில்லாதவன்னுல்ல சொல்லிடும்.''



சம்பத்குமாருக்கு யாராவது சொல்லிக் கொடுத்து இருந்தால் இப்படித்தான் சொல்லியிருப்பான்.

''இந்தக் கிழவன்களோட பெரிய ரோதனையா போச்சுப்பா. இத பண்ணாத... அத பண்ணாத... இவள பாக்காத... அவளைப் பாக்காதன்னு சொல்லிகிட்டே இருப்பாங்க. வைக்காப் போர் மேல நாய் படுத்தா மாதிரி'' என்று இளக்காரம் செய்வார்கள்.

'பட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமெனில். சுட்டுத்தான் தீயைப் பற்றி ஞானம் வருமெனில் தொடர்ந்து போ.' சிலருக்கு உலகில் அப்படியும் பாடங் கள் நடப்பதுண்டு.

சம்பத்குமார் நண்பர்கள் உசுப்பேற்ற அந்தப் பெண்ணைக் காதலிக்கும் நிர்பந்தத்திற்கு ஆளானான். அவன் பொய்கள் மயிலின் தோகை போல் விரிந்தன.

''எங்கூட ஆஞ்சநேயர் கோவில் வர்றீங்களா...'' ஆண் பொய் கூப்பிட்டது.

''அய்யோ... எதுக்கு...''பெண் பொய் அச்சப்பட்டது.

ஆஞ்சநேயர் கோயில் போனதும்...

''இங்க கூட்டமா இருக்கே... அப்படிப் போயிட லாமா...''

ஆண் பொய் இருட்டுச் சாலையில் நடந்தது. பெண் பொய் பின்னால் நகர்ந்தது.

''எப்படியாவது லவ் பண்ணி இவனைக் கைக்குள்ள போட்டுண்டா... எப்படியாவது மாட்ட வைச்சு கல்யாணம் பண்ணிண்டுட்டா, நாமும் அமெரிக்கா போயிடலாம். பிட்ஸ்பர்க்ல ஏதாவது ஒரு வேலை கிடைக்காமயா

போயிடும். டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ல வெறும சாமான் அடுக்கினா ஐநூறு டாலர் சம்பளம் தராளாமே. ஒரு டாலர் முப்பத்தி ஆறு ரூபா. ஐநூறு டாலர்னா... அடேயப்பா...''

பிட்ஸ்பர்க்ல என்னல்லாம் இவன் வாங்கி வச்சிருக் கான்னு கேக்கணும். அப்பார்ட்மெண்ட் கிடைக்குமான்னு விசாரிக்கணும். நம்ம போய் செட்டி லாய்ட்டா ரெண்டு தங்கைகளையும் கூப்பிட்டுக்கலாம். அதே... அடுக்கற வேலைய அவங்களுக்கும் சொல்லித் தரலாம். மூணு ஐநூறு டாலர்... எங்கியோ போயிடலாம்.

மெட்ராஸ் என்ன மெட்ராஸ். சொந்த ஊர் நன்னிலம். மெட்ராஸுக்கு வந்துடலியா... அதே மாதிரி பிட்ஸ்பர்க் போயிடறது.

பிட்ஸ்பர்க் இரும்புத் தொழில் நகரமாமே, ரொம்ப அழகான நதி ஓடறதாமே. அந்த நதிக்குப் பேரு என்ன அப்பா... இருட்டா குளு குளுன்னு இருக்கு. இப்படி இவரு கூட போறதே ஜாலியா இருக்கு. இவன் மேல் ஒரு நல்ல வாசனை வருது. அமெரிக்கன் செண்டா... குடுறான்னு கேட்கலாமா... கடவுளே... அங்க ஒரு லைட் வருதே... வெளிச்சத்துல யாராவது பாத்துட்டா... அவளுக்கு குப்பென்று வியர்த்தது.

''எவ்ளோ தூரம் போகப் போறோம்...'' அவள் தயங்கி கேட்டாள்.

''நீங்க எவ்ளோ தூரம் வருவீங்க?'' அவன் பதிலுக்கு கேட்டான். அவள் பதில் பேசாது இருந்தாள்.

''உங்களுக்கு இதை பிரசண்ட் பண்ணணும். அதுக்குத் தான் கூப்பிட்டேன்...'' பேனாவும், மூன்று ஸ்டிக்கர் களும் கொடுத்தான்.

அவள் கை நடுங்க வாங்கிக் கொண்டாள்.



''அய்யோ கேட்காமலே கொடுக்கறதே இது. செண்ட் கேட்கலாமா... இல்ல ஸாரி கேட்கலாமா...''

''ஸாரி ஏதும் வாங்கிண்டு வரலியா...'' அவள் மனதில் ஓடியதை வார்த்தையாக்கினாள்.

அவன் லேசாக மிரண்டான்.

'அய்யோ குட்டி என்ன, பெரிய ஐயிட்டம் கேக்குது' எப்படி வாங்குவது என்று யோசிக்கத் துவங்கினான்.

''வாங்கினேன் மிருணாளினி... பதினாறு. பதினேழு கொண்டு வந்தேன். எல்லாம் பிச்சுட்டாங்க. ஒரு புடவை யாருக்கும் பிடிக்கலை. அது என்கிட்ட இருக்கு. நீங்க புடவை கட்டுவீங்களா...''

''நாங்க என்ன சின்ன பாப்பாவா... இப்படி கேக்கறீங்களே...''

''அடடே... சுடிதார், மிடிலதான வர்றீங்க. அதான் கேட்டேன்.''

''புடவையும் கட்டுவேன். அது என்ன கலர் ஸாரி...?''

''தெரியலீங்க. நாளைக்குக் கொண்டு வரட்டா...''

''எங்க...''

''நீங்க எங்க சொல்றீங்களோ... அங்க...''

''எங்க போனாலும் பயமாருக்கு...''

''பயமே இல்லாத இடம் சிடில எங்க...''

அவள் சிணுங்கினாள்.

நான் கூட்டிகிட்டுப் போறேங்க...''

''எப்படி...''

''என் வண்டிய எடுத்துகிட்டு வந்திடறேன்.''

அவன் யாரிடம் கடன் கேட்பது என்று தீர்மானம் செய்தான். என்ன சொல்லி கேட்பதும் என்றும் விரைவாக முடிவு செய்தான்.

''என் பிரதருக்கு ஹார்ட்ல ஒரு ஹோல் இருக்காம்பா. தமிழ்நாடு ஹாஸ்பிடல் போகணும். அது சிடிக்கு வெளிய இருக்கு. பிளீஸ்... இன்னிக்கு ஒரு நாள் உன் வண்டிய கொடேன்.''

தேவைப்படுகிறபோது பொய் அழகாகவே வரும். ஆசைப்படுகிறபோது மனம் அதை அடைவதற்கு ஆயிரம் வழிகள் பார்க்கும்.

பொய்கள்தான் பிரச்சினையின் ஆரம்பம். போலித் தனம்தான் பிரச்சினையின் நடு மையம். இதை மகனுக்கோ... மகளுக்கோ சொல்லித் தர பல பெற்றோர் களுக்குப் பொறுமை இல்லை. திறமையும் இல்லை.

## 6

''அம்மா... இன்னிக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு. வரதுக்கு லேட்டாகும் கவலைப்படாதே...'' பெண் உடுத்திக்கொண்டே சொன்னாள்.

''எத்தனை லேட்டாகும்...'' அம்மா உள்ளிருந்த படியே கேட்டாள்.

''தெரியலையே...'' பெண் உடனே பதில் தந்தாள்.

''என்னடி இது... எத்தனை மணி வரைக்கும் தான் கவலைப்படாம இருக்கலாம்... சொல்லிட்டுப் போ...''



''ஒம்போது மணிவரைக்கும்.''

''ஒம்போது மணியா...'' அம்மா உடனே கவலைப்பட ஆரம்பித்தாள். வந்து அருகே நின்றாள். பெண்ணை உற்றுப் பார்த்தாள். பெண் அதை அலட்சியம் செய்தாள்.

மகள் தன் கவலையை அலட்சியம் செய்வது தாய்க்கு கோபத்தை கொடுத்தது.

''கம்ப்யூட்டர் கிளாஸ்தானே போற...'' தாயின் கேள்வி பெண்ணிற்கு கோபத்தை கொடுத்தது.

''பின்ன... வேறெங்க போக்கிடம் எனக்கு...'' சுள்ளென்று பேசினாள்.

தாய் விடவில்லை. அவள் சந்தேகம் வலுத்தது.

''ஒரு கம்ப்யூட்டர் கிளாஸுக்கு இத்தனை சிங்காரமா...?''

மகளுக்கு ஆத்திரம் கனன்றது.

''உன்னை மாதிரி பரட்டைத் தலையும், பழம் புடவையுமா அலைய சொல்றியா...தலைய வாரு...வேற உடுத்து...உடனே கிளம்பு.''

''எங்கடி...''

''கம்ப்யூட்டர் கிளாஸுக்கு. வா... வந்து நீயும் கத்துக்கோ... உன்னைவிட வயசானவல்லாம் வந்து படிச்சுட்டு விவரமா போறா. உனக்கு தெரிஞ்ச கத்தரிக்கா குழம்பையே டி.வி.யில செய்து காட்டறான். நீயும்... ஈன்னு பாத்துண்டிருக்கே... காத்து, கருப்பு, பேய், பிசாசுன்னு ஏழரையிலேருந்து பத்தரை வரைக்கும் டி.வி. ஓரியல்—கம்ப்யூட்டர்னா என்னன்னு சொல்லு பார்ப் போம்.'' மகள் தெரிந்து அடித்தாள்.

''கம்ப்யூட்டர்னா ஒரு மெஷின்.''

''ஆமா...மாவரைக்கிற மெஷின்... மொளகாப் பொடி அரைக்கிற மிஷின். உன்னை மாதிரி பத்து தேய்க்கிற

மெஷின்.'' பெண் அம்மாவின் அறியாமையை கடுமையாக சாடினாள்.

''நான் எதுக்கு கம்ப்யூட்டர் கத்துக்கணும்...'' அம்மா பொருமினாள்.

''உலகத்தில் இனிமே எல்லாமே கம்ப்யூட்டர்தான். வாழ்க்கைல ஒருத்தர் வளமா இருக்கணும்னா கம்ப்யூட்டர் தெரிஞ்சே ஆகணும்.''

அம்மா பேசாமல் நின்றாள்.

''இனிமே தயவுசெய்து கம்ப்யூட்டருக்கு ஏன் இப்படி உடுத்திண்டு போறேன்னு கேக்காத... ஒருநாள் என்கூட வந்து பாரு...யாரெல்லாம் வரா... என்னெல்லாம் படிக்கிறா...அப்படி வரவா என்னெல்லாம் உடுத்தறா... எப்படி பேசறா...எல்லாம் பாரு...''

ஏழு மணிக்கு ஆபீஸ் முடிச்சுட்டு வந்து ஏழரைக்குள்ள டிபன் சாப்டுட்டு எட்டுலேருந்து பத்து வரைக்கும் கிளாஸ்ல உட்கார்ந்து பாடம் கேட்டுட்டு...பத்துலேர்ந்து பதினோரு மணி வரைக்கும் தானா கம்ப்யூட்டர்ல ஒர்க் பண்ணிட்டு, பதினோரு மணிக்கப்புறம் வீட்டுக்கு போறா... நான் சொல்றது ஒரு லேடி. தனியா வருவோ — தனியா போவோ.

கம்ப்யூட்டர் கிளாஸ்ல வந்துதான் மூஞ்சிய அலம்பி, தலை பின்னி, பொட்டு இட்டுப்பா...உடம்பு பூரா செண்ட் அடிச்சுப்பா...அவளப் பாத்தா நீ என்ன சொல்லுவே... ஏதோ கெட்ட தொழிலுக்கு போறவான்னு சொல்லுவே...

''சரி... இனிமே நான் ஒண்ணும் கேக்கலடி...'' பின் வாங்கினாள்.

''எனக்கொரு அம்பது ரூபா கொடு...''



''தினம் அம்பது ரூபா கேட்டா நான் எங்கே போவேன்.''

''நான் எங்கே தினம் கேட்கறேன்.''

''அடிக்கடி கேட்கறே.''

''செலவிருக்கு...கேட்கறேன்,''

அம்மா காசெடுத்துக் கொடுத்தாள். பெண் சுருட்டி சொருகிக் கொண்டு போனாள்.

ஃ ஃ ஃ

ஒரு வாசனையோடும்... ஒரு பளபளப்போடும், ஒரு துள்ளலோடும் பெண் நகர்ந்து போவதையே கவலையோடு தாய் பார்த்தாள். மகளைப் பற்றிய சந்தேகம் அவளை விட்டு அகல மறுத்தது,

மகள் பஸ் பிடித்தாள். வசதியாய் உட்கார்ந்து கொண்டாள். மனம் துள்ளிக் குதித்தது.

இன்னிக்குப் புடவை கொண்டு வந்து தர்றேன்னு சொல்லியிருக்காரு, என்ன கலர் புடவைன்னு தெரியல... அப்படி கிடைச்சா இதான் முதல் இம்போர்டட் ஸாரி... எத்தனையோ பேர் இம்போர்டட் ஸாரி... கட்டி பாத்து இருக்கமே ஒழிய சொந்தமா ஒரு இம்போர்டட் புடவை இல்லை, எங்கயோ மோட்டர் சைக்குள்ல கூட்டிட்டு போறேன்னு சொல்லியிருக்கு. எங்க கூட்டிகிட்டு போவான்...தெரியவில்லை. எங்க போனாலும் வீட்டுக்கு ஒம்போது மணிக்கு வந்துடணும். அவன் கல்யாணம் பண்ணிக்க சம்மதிப்பானான்னு கேட்கணும். அப்படியே அவன் சம்மதிச்சா அவன் அப்பா, அம்மா வம்பு பண்ணாம இருப்பாளான்னு பார்க்கணும்.

எத்தனை பண்ணுவா உங்க வீட்லன்னு இவன் கேட்டா...இருபது, இருபத்தியஞ்சுன்னு சொல்லிடணும். ஆனா வீட்ல ரெண்டு பவுன்தான் இருக்கு.

புடவை என்ன கலர்னு தெரிஞ்சா டக்குன்னு அதுக்கு மேட்சா பிளவுஸ் வாங்கிடணும். இந்த ஒண்டுக்குடித் தனம் முழுக்க இம்போர்டட் ஸாரிய கட்டிக்கிட்டு போய் காமிக்கணும்.

அவள் பளபளப்பான சுடிதாரில் வழக்கமான இடத்தில் இறங்கினாள்.

அவன் மோட்டர் சைக்கிளில் மதுரை வீரன் போல் காத்திருந்தான். காலில் கனத்த ஷூக்கள், அற்புதமான ஜீன்ஸ் பேண்ட் மஞ்சள் நிற சட்டை வெள்ளை நிற நெக் பனியன் பறக்கின்ற முடி. படிப்பாளியாய் காட்டுகின்ற வட்டக் கண்ணாடி.

தெருவில் போகும் நிறைய பெண்கள் அவனை ஏதோ ஒரு நடிகனுடன் ஒப்பிட்டார்கள். திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு போனார்கள், மோட்டர் சைக்கிள் பெட்டியில் ஒரு இம்போர்டட் புடவை இருந்தது, வெளீர் நீலமும், மஞ்சளும் கலந்த புடவை அது. மிக மெல்லிய துணி அது காலணிகளை எங்கு வாங்கினானோ... அங்கேயே இதையும் வாங்கினான்.

ஆனால் காசு கொடுக்காமல் கடனுக்கு வாங்கி வந்தான். ஒரு வாரத்தில் தருவதாக சொல்லி இருந்தான். ஆனால் ஒரு வாரத்தில் தருவதற்கு அவனுக்கு எந்த வழியும் இல்லை. அதைப்பற்றி அவன் கவலைப்படவும் இல்லை.

'புடவை கொடுத்தபிறகு என்ன செய்யறது...மேல கை வைக்கலாமா...வேணாமா...கை வைக்க விடுமா... விடாதா...அப்படி கை வைக்க விடலேன்னா புடவை கொடுத்து என்ன...கொடுக்காம என்ன...'



'பொண்ணு சுலபமா மடிஞ்சுடும். மடிஞ்ச பிறகு என்ன செய்யறது...ஒரு ரெண்டு மூணு தடவை தொட்டுட்டு விட்றலாமா...அல்லது தொடர்ந்து ஓட்டலாமா...'

பஸ் நின்றதும் அவள் இறங்கினாள்.

அவனுக்கு பயத்தில் வயிறு குழைந்தது.

'கடவுளே...குட்டி டக்கரா வந்திருக்கு. பாக்கும் போதே உடம்பெல்லாம் என்னமோ செய்யுது. கிடைச்சா லக்கு. ஆனா நானூறு ரூபா புடவை கொடுத்துட்டு சும்மாவிடக்கூடாது.'

அவனை பார்த்துவிட்டு அவளும் கால் நடுங்கினாள். 'யப்பா எப்படி இருக்கான் பாரு... நாம எப்படி இருக்கணும்னு ஆசைப்பட்டமோ அப்படியே இருக்கான். இந்த பஸ் போன உடனே புடவையை பத்தி கேட்கலாமா... கூடாது அதுபற்றி ஞாபகமே இல்லாத மாதிரி பேசணும். வேற எதாவது பாராட்டணும். அமெரிக்காவ பத்தி எதாவது கேள்வி கேட்கணும். மெள்ள அவன் டிரஸ் பத்தி ஐஸ் வெக்கணும். என் டிரஸ் நன்னாருக்கான்னு கேட்கணும். உத்து பார்ப்பான். பாத்தா...பாத்துக்கேன்னு கேட்கணும் உத்து பார்ப்பான். பாத்தா... பாத்துக் கோன்னு விடணும். ஆனா தொடவிடக் கூடாது, தொடவிட்டா சீப்பா போயிடுவோம்.'

தொடாத எப்படி இருப்பான்... புடவை கொடுத்தா தொடத்தான் தொடுவான் லேசா... தொட விடலாம். நிறைய பேச விடலாம். கொஞ்சம் அத்து மீறி பேசினாக் கூட 'ஏய்'...'னு அதட்டிட்டு விட்டுடலாம்.

''ஹலோ...'' அவள் கையசைத்தாள்.

''ஹலோ...'' அவன் தலையசைத்தான். அவள் ஏறிக்கொண்டாள்.

புடவை கொண்டு வரவில்லையா...அவள் விழிகளால் தேடினாள். ஏமாற்றமானாள். கேட்க வெட்கப்பட்டாள். அவள் கண்கள் தேடுவதை அவன் கண்டு கொண்டான்.

''கொஞ்சம் வேஸ்ட் துணி கொடுங்க...''

பக்கப் பெட்டியை திறந்து உள்ளேயிருந்த பிளாஸ்டிக் கவரை எடுத்து வெளியே வைத்தான். பெட்டிக்குள்ளே துணியால் துடைத்து மறுபடி உள்ளே வைத்தான்.

அந்த பிளாஸ்டிக் கவரில் புடவை இருப்பதை அவள் பார்த்துவிட்டாள். சந்தோஷமானாள்.

வண்டி மறுபடி கிளம்பியது, அவள் பின்னே உட்கார்ந்து அவனை அணைத்துக் கொண்டாள். வண்டி திருவான்மியூர் தாண்டி மகாபலிபுரம் நோக்கிச் சீறியது. வேகம் கூட்ட...அவள் அணைப்பு இன்னும் இறுக்கமாகியது. உடம்புஒட்டிக்கொண்டது.

அவன் லாரிகளையும், பேருந்துகளையும் மின்னல் வேகத்தில் தாண்டினான், பயத்தில் அவள் வயிறு குழைய வைத்தான்.

காமத்தின் கிளர்வும், பயத்தின் அதிர்வும் ஒரே விதமானவை. அருகருகே இருப்பவை. பயத்தில் அவள் நெருக்கமாக தொடல் அங்கே சாதாரணமாயிற்று. இத்தனை வேகமாக ஒரு ஆண் மோட்டார் சைக்கிள் ஓட்டினால்...ஒரு பெண் பின்னிக் கொண்டுதான் ஆகவேண்டும்.

அவர்கள் ஒரு திரைப்பட அரங்குக்குள் போனார்கள். அந்த திரைப்பட அரங்கு திறந்தவெளியில் இருந்தது.

முதலில் பல படங்களிலுள்ள காதல் பாட்டுக்கள் போடப்பட்டன. அவன் மோட்டார் சைக்கிளை நோக்கி போனான். கவர் எடுத்து வந்தான்.

''வித் லவ்...'' என்று அவளிடம் நீட்டினான். அவள் மொழியாலும், விழியாலும், நன்றி சொன்னாள். மெள்ள



எடுத்துப் பார்த்தாள். புடவை ஒரு ஐஸ்கிரீம் போல தெரிந்தது. மேலே போர்த்திப் பார்த்துக் கொண்டாள். மிக மிக அழகாக இருந்தது. மடித்து பையில் வைத்தாள்,

''பிடிச்சிருக்கா...''

''ரொம்ப...''

''எதை...''

''எதை கேட்டீங்களோ...அதை...''

''இதை...'' அவன் சுட்டுவிரலால் அவள் நெஞ்சை காட்டினான்.

''ச்சீ...அவள் சிணுங்கினாள்.

''தப்பா நினைக்கக் கூடாது. நான் சுட்டிக்காட்டிய இடம்...மனசு...''

அவர்கள் தொடர்ந்து விளையாடினார்கள்.

# 7

ஓர் இளைஞனும், யுவதியும் எப்படிகாதலிக்கிறார்கள் என்று நான் எழுதப்போவது இல்லை, இந்தக் கட்டுரையின் நோக்கம் அதுவல்ல. காதலித்த என்பதற்கு அர்த்தம் உண்மையாயிருத்தல். நெல் முனையளவும் பொய் சொல்லாதிருத்தல்.

காதலித்தல் என்பது பெண்ணை ஆணோ...ஆணைப் பெண்ணோ அனுபவித்தல் அல்ல. பரஸ்பரம் ஒருவரை ஒருவர் முன்னிட்டு வாழ்தல், அவளுக்காக வாழ்கிறேன்...

என்று அவனும். அவருக்காக வாழ்கிறேன்...என்று அவளும்...திசை மாறுதல்.

திசை மாறிய பிறகு பின் வாங்குவது பேடித்தனம். கபடம். அதுவரை தாய், தந்தை, சகோதர, சகோதரிகள்...என்றிருந்த வாழ்வு வேறு இடம் நோக்கி திரும்புகிறது. மற்றெல்லாவற்றையும்விட அவனுக்கு அவளும். அவளுக்கு அவனும் முக்கியமென்று மாறுதல் ஏற்படுகிறது. இதில் ஏமாற்றுவது பெரும் பாவம், மனிதப் பிறவிக்கு இன்னும் தயாராகவில்லை என்று அர்த்தம்.

உணர்வைக் காட்டுவதிலும் உறவை ஏற்றுக்கொள்வதிலும் பொய் சொல்பவர்கள்...குற்ற உணர்ச்சியால் கடுமையாகத் தாக்கப்படுவார்கள். ஏமாந்தவர்களுக்கு மறந்தாலும் ஏமாற்றியவர்களுக்கு ஏமாற்றியது மறக்காது. எங்கே முழங்கால் இடித்தாலும். எப்போது மூச்சுத்திணறினாலும் ஏமாற்றியதால் வந்துவிட்டதோ என்று பயம் வரும். மரணபயம் போன்றும் ஒரு கிலேசம் தரும். அந்தக் கிலேசம் கொண்டவர்களின் முகமும் ஜீவனிழந்து காணப்படும். சொல்லும், செயலும் தடுமாறும்.

காதலில் ஏமாற்றிவிட்டு யாருமே சந்தோஷமாய் இருந்ததில்லை. இருந்தது போலவும் நடிக்கலாம். உள்ளே...இடைவிடாது இடித்துக்கொண்டே இருக்கும். ஏமாற்றியது நச்சுப்பூண்டாய் உள்ளே நாற்றமடித்துக் கொண்டிருக்கும். உடல் நாறினால் குளிக்கலாம். மனம் நாறினால்...? விமோசனமே கிடையாது.

காதலென்பது பரஸ்பரம் ஜெயிப்பது அல்ல. அது தன்னை இழந்த நலம். தன்னை இழக்க ஒரு இளைப்பாறல் தேவைப்படும்.

''எனக்கொன்னும் தெரியாதும்மா... என்னுடைய வரவு செலவு கணக்கெல்லாம். நீ பாத்துக்கோ...நான் காசு கொண்டு வர்றேன்...'' அவன் சொல்வான்.



''என்னை வேலைக்கு அனுப்பாதப்பா...ஆபீஸ் போகப் பிடிக்கலை.'' எத்தனை வேலை இருந்தாலும் விட்டோட செய்ய அவள் ஒரு இடத்தில் அடங்குவாள்.

இம்மாதிரி சாய்ந்து கொள்ளவும், ஆதரவாகவும், அறிந்துகொள்ளவும் பழகும் இடமாகத்தான் காதல் இருக்கவேண்டும்.

''நாம...ஹிந்தி படிக்காம பல நஷ்டங்கள் நடந்திருச்சு. நம்ம பசங்க ஹிந்தி படிச்சே ஆகணும்...''

''நம்ம பசங்க படிக்கிறதுக்கு முன்னாடி நாம படிச்சா என்ன...?''

திருமணம் செய்து ஆறு மாதம் கழித்து கணவனும் மனைவியுமாய் ஹிந்தி வகுப்புக்குப் போனதை நானறிவேன்.

குடும்பத்திற்காக அறிதலை விரிவாக்கியவர்கள் அவர்கள். இதுதான் காதலின் வெளிப்பாடு.

ஆனாலும் மருணாளினியும், சம்பத்குமாரும் திட்டமிடாமல் மாட்டிக் கொண்டார்கள். பொய் பேசுபவர்களால் திட்டமிடமுடியாது. சொல்லப்பட்ட பொய்களின் பின்னால்தான் அவர்கள் போய்க் கொண்டிருப்பார்கள். அடுத்த பொய்யைப் பக்குவமாகச் சொல்வதையே திட்டமிட்டுக் கொண்டிருப்பார்கள்.

சம்பத்குமார் தொட...மிருணாளினி தொட அவர்கள் மனம் காமத்தில் சிக்கி தவித்தது.

காமம் மதுரசம் போன்றது. முதலில் இரண்டு மிடறுகள் வயிற்றில் இறங்கியதும் அந்த மது மிகப்பெரிய அதிர்ச்சி தரும். 'இதைப் போய் ஏன் சாப்பிட்டோம்' என்றொரு அளவளப்பு ஏற்படும். சற்றுநேரம் பொறுத்து அந்த வேகம் அடங்கினபிறகு மறுபடியும் அந்த அளவளப்

புக்கு மனம் ஆசைப்படும். மறுபடியும் குடிக்கும். இம்முறை அந்த அளவளப்பை அனுபவிக்க தெரிந்துவிடும்.

குடிப்பதற்கு ஆசைப்பட்டுவிட்ட மனது சதா நேரமும் குடியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கும். குடிப் பதையே கற்பனை செய்து கொண்டிருக்கும்.

சுத்தமான டம்ளரை நிமிர்த்திவைத்து அதை தண்ணீர் ஊற்றிக் கழுவி...துணியால் துடைத்து தேன்வண்ண மதுவை ஊற்றி எடுத்துப் பார்த்து ரசித்து கலக்க வேண்டி யதைக் கலந்து முகர்ந்து எதிரே குடிக்க உட்கார்ந்தோரை பல்லிளித்து உற்சாகப்படுத்தி ஒரு சின்ன உறிஞ்சலுக்குப் பிறகு...

அப்புறம்... உலகத்துல எல்லாரும் நல்லாயிருக்காங் களா'' என்று தொடை தட்டி கேள்வி வரும். சிறிதளவு மதுவுக்கே பெரிதளவு கர்வம் வரும். காமமும் இது போலவே... கால் பிரள வைக்கும், சொல் பிரள வைக்கும். கர்வத்தால் மனம் பிரள வைக்கும்.

எந்நேரமும் காமமே மனதில் நர்த்தனமாடும். இது நூலில் கட்டிய புலி போல உள்ளே அலைந்து கொண்டிருக் கும். இறையைக் கண்டு விட்டால் ஒரு வீச்சில் மரபை அறுத்து பாயத் துவங்கும்.

நிறைய பொய்கள் கோர்த்து காமத்தை அனுபவித் தால் தொடர்ந்து பொய்கள் சொல்லத்தான் வேண்டும், உறவு பற்றிய பயமின்றி... உலகம் பற்றிய பயமின்றி அனுபவிக்க வேண்டிய காமத்தை சம்பத்குமாரும், மிருணாளினியும் பயந்து பயந்து அனுபவித்தார்கள்.

''இதுவே ஒரு த்ரில்லாருக்குல்ல.'' என்று சமாதானம் சொல்லிக் கொண்டார்கள்.

வாழ்வின் அமைதியைக் கொடுக்கக்கூடிய விஷயமாக அவர்களின் காதல் ஆகிவிட்டது.



''ஏண்டி சட்டையெல்லாம் அழுக்காயிருக்குன்னு கேட்கறா எங்கம்மா...''

''வெளிய வாசல்ல போனா அழுக்காகும்னு சொல்ல வேண்டியதுதானே...''

''ஏன் இடுப்பு பக்கம் மட்டும் அழுக்காயிருக்கு... கை... கைய்யா அழுக்கு தெரியுதேடிங்கிறா... தயவு செய்து இனிமே என்னைத் தொடாத சம்பத். அதுவும் அழுக்குக் கையோட தொடாத...''

''அப்புறம் எப்படி சமாளிச்சே...''

''கம்ப்யூட்டர் கிளாஸ்ல டெஸ்ட் வெச்சாங்க. நான் ஃபர்ஸ்ட்ல வந்தேன். என்னுடைய லேடிஸ் ஃப்ரெண்ட்ஸ் என்னைக் 'கட்டிப்பிடிச்சு தட்டாமாலை ஆடினாங்கன்னு சொன்னேன்.''

''உங்கம்மா என்ன சொன்னாங்க...''

''நல்லா படிறி... நீ ஒரு ரெண்டாயிரம் ரூபா கொண்டு வந்தா வீட்டுக்கு சவுகரியமா இருக்கும். கொஞ்சம் ரசம் குழம்புன்னு சாப்பிடலாம்... அப்படின்னாங்க... நான் சிரிச்சுண்டேன்.''

''ஏன்...''

''உங்களோட நான் அமெரிக்கா வந்துட்டா... ரெண் டாயிரம் என்ன எங்க அம்மாவுக்கு இருபதாயிரம் அனுப்ப லாம்ல.''

அவனுக்கு உள்ளே 'பொக்'கென்று பயம் உடைந்தது. பரவியது.

'என்னை இன்னும் அமெரிக்கான்னு நினைச்சுகிட்டு இருக்கியா. சரியாப்போச்சு போ... எனக்கே மறந்து போச்சு. நல்லவேளை ஞாபகப்படுத்தினே...!'

'இப்ப என்னா செய்றது...? குட்டியோட அதே விளையாட்ட தொடர்ந்து விளையாட வேண்டியதுதான்.'

'நடுவில தெரிஞ்சு குட்டி ஓடிப் போயிட்டா...'

'விடக்கூடாது. போறதுக்கு முன்னாடி சாப்பிட்டறணும். வண்ணமா சாப்பிட்டறணும். இந்த மாதிரி வாசனையா சாப்பாடு அமையாது. குட்டி ரொம்பவும் வெட்கபடலை. கொஞ்சம் குறி பார்த்து அடிச்சோம்னா... மல்லாந்துடும்.

தொட்டதனாலயே கல்யாணம் பண்ணிக்கணும்னு அழுவும். சரி பண்ணிக்கிறேன். நாப்பது சவரன் போடுன்னு சொல்லிடலாம். டிரஸ்க்கு பனிரெண்டாயிரம் செலவுக்கு எட்டாயிரம்... 'யமஹா' மோட்டார் சைக்கிள் ஒண்ணு. இதெல்லாம் குடுத்தா கல்யாணம் கட்டிக்கறேன்னு சொல்லணும்.

'மாமா பெரிய ஆபீசராமே... செய்யட்டுமே...'

'என்ன பேசாத இருக்கீங்க...''

''இருபதாயிரம் மேட்டரே இல்ல... மாசம் ஆயிரம் இல்ல... மாசம் ஆயிரம் டாலர் அனுப்பினா போதும். கிட்டத்தட்ட முப்பத்தியாறு ஆயிரம் ரூபா...உங்கவீட்டுக்கு வந்திடும். உன் சம்பளத்தை அப்படியே அனுப்பிடலாம். என் சம்பளத்தில குடித்தனம் பண்ணிக்கலாம். சரி... கிட்ட வா...''

''எதுக்கு...''

''உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்...''

''கிட்டதானே இருக்கேன்...''

''கட்டிக்கிட்டு பேசினாத்தான் மரியாதை. உங்க வீட்ல கொஞ்சம் நல்லபடியா கல்யாணம் பண்ணித் தருவாங்களா...''



''நல்லபடியான்னா...''

''பேண்டு... வாண வேடிக்சை...''

''அய்யய்யோ...''

''அதெல்லாம் வேணாம்னு சொல்ல வந்தேன்...'' அவன் சுதாரித்துக்கொண்டான்.

''பிறகு...''

''உனக்கும் எனக்கும் அமெரிக்காவுக்கு டிக்கட்வாங்கித் தரமுடியுமா...''

''கேட்டுப் பார்க்கிறேன்...''

''குடுத்துதான் ஆகணும், சும்மா கேட்டுப் பார்க்கறேன்னு சொல்லாத...'' அவன் தீவிரமானான்.

''ஏன் இப்படி கோவிச்சுக்கறீங்க...'' அவனை சமாதானப்படுத்த அவள் நெருங்கி தொட்டாள். திருமணத்திற்குப் பிறகு தொடத்தானே போகிறோம் என்று தொட்டாள். அவன் அதை நன்கு உபயோகப்படுத்திக் கொண்டான். வேகமாய் பரவினான். அவள் வெட்கமின்றி வாங்கிக் கொண்டாள்.

முதலில் அவன் தொடல் புரியவில்லை. மெல்ல கிறக்கம் ஆரம்பித்தது, அவன் என்ன செய்தாலும் சந்தோஷமாக இருந்தது. 'கடவுளே...இதென்ன கொலைத் தாக்குதல்...ஏன் இவ்வளவு மோசமாக விட்டுக் கொடுத்துவிட்டேன்...?' திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டாள். ஆனால் செயல்படுத்த முடியவில்லை. ஒரு பிணைக் கைதிபோல் மனம் அவன் பின்னே போயிற்று.

கற்பழிதல் என்பது உடற்கூறு அல்ல. அது மனதின் சிதிலம். உறுதியாய் இருக்கும் தன்மை உடைந்து போய்... குப்பையாய்...யார் காலடியிலோ சார்ந்திருக்கும் தன்மை.

திடமற்ற புத்தி. திறமையற்ற நடத்தை. மனம் குட்டை நீராய் தேங்கிக் கிடக்கும் தன்மை.

பெண்கள் தங்களை உடலாகவே அதிகம் நினைப்பவர்கள். எனவே...உடல் ரீதியான விஷயங்கள் மன ரீதியாய் அவர்களை பாதிக்கின்றன.

தான் வெறும் உடம்பல்ல ஒரு ஆண் தொட்டதாலேயே தன் வாழ்க்கை ஒட்டு சந்தாய் நின்றுவிடக்கூடாது என்று பல பெண்கள் சிந்திப்பதே இல்லை.

''என்ன இப்போ...என்ன நடந்து போச்சு இப்போ... நீ நல்லவன்னு நெனச்சு விட்டேன். இல்லேன்னு தெரிஞ்சது...ச்சீ நாயேன்னு தள்ளிட்டேன்.'' என்று திடமாய் பல பெண்களுக்குச் சொல்லத் தெரிவதில்லை.

மிருணாளினியும் அவ்விதமே இருந்தாள். அவன் தொடத் தொட குழைந்து போனாள். பலகீனமானாள்.

ஊருக்கு உடம்பெல்லாம் கண். யார் யாரோடு சுற்றுகிறார்கள் என்று பார்ப்பதே ஊரின் வேலை. ஆளுமையில்லாத ஆண்களும்...ஆண்களை விரும்பாத பெண்களும் அதிகம் உண்டு இங்கே. அவர்களுக்கு மற்றவர் காதலே சர்க்கரை போட்ட அவல். மடியில் போட்டு மனிதர் உணர்வுகளைமென்று திண்ண அத்தனை ஆசை.

''என்னடி...எவன் கூடவோ சுத்தறியாமே...'' அப்பா கேட்டார்.

''அவர் அமெரிக்காவில வேலை செய்யறார்ப்பா...'' அவள் சொல்ல ஆரம்பித்தாள். வீடு கோபத்தை விட்டு கேட்க ஆரம்பித்தது.

''டிக்கட் மட்டும் வாங்கி கொடுக்க போதும்றார்ப்பா அங்க போய் சம்பாதிச்சு...திரும்ப அனுப்பிடலாம்னு சொல்றார்.''



''ரெண்டு டிக்கட் என்னாகும் மிருணாளினி...'' கேட்டாள்.

''பலதும் சேர்த்து லட்ச ரூபா'ன்னு வெச்சுக்கோயேன்...''

அவனைப் பார்க்க தங்கைகளை ரகசியமாக கூட்டிக் கொண்டு போனாள். தங்கைகள் அவனைத் தொலைவில் இருந்து பார்த்துவிட்டு...செம பர்சனாலிட்டி...' என்று சப்பு கொட்டினார்கள். லேசாய் பொறாமைப்பட்டார்கள்.

# 8

நிறைய குடும்பங்களுக்கு நல்வழிப்படுத்த, சரி தவறு என்று எடுத்து சொல்ல கனமான ஒரு வழிகாட்டி இல்லை. கூட்டுக் குடும்பமாய் இருந்தபோது தாத்தா, பாட்டி, பெரியப்பா, சித்தப்பா, அண்ணா, மாமா என்று ஒருவர் மாற்றி ஒருவர் காவல் இருப்பார்கள்.

கூட்டுக் குடும்பம் சிதறியதில் அப்பா மட்டும் காவல் இருக்க வேண்டியிருந்தது. அந்தக் காவலை எளிதில் ஏமாற்ற முடிந்தது. தன் வழி தனி வழி என்று ஜம்பம் அடித்துக் கொண்டு குழந்தைகள் இருட்டில் இடறிக் கொண்டு நடந்தன. போகும் இடம் பற்றி தெளிவில்லாமல் இருந்தன.

அப்பாவால் லட்ச ரூபாய் புரட்ட முடியாது. அப்பா அம்மாவைக் கேட்டாள், அம்மா ஓடிப்போய் தன் தமையனைக் கேட்டாள்,

''லட்ச ரூபா கொடுத்து அமெரிக்காவுக்கு டிக்கட் வாங்கினா கல்யாணம் பண்ணிக்கறேன்றானா...ரொம்ப

சிப்பா இருக்கே. உன் பொண்ணுக்கு ஜாதகம் சரியா வரலேன்னா...என் பொண்ணுக்குப் பார்க்கலாமா...'' மாமா அல்பத்தனமாய் பேசினார். அம்மாவுக்கு மனசு பதறியது.

''என்னத்த ஜாதகம்...அவா ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறா...''

''விரும்பறான்னா என்ன லவ்வா...''

''ஆமா லவ்வுதான்.'' அம்மா முடிச்சவிழ்க்க வேண்டியதாயிற்று.

''தினம் பார்த்துப்பாளா...பேசுவாளா...'' உறவுகள் கிண்ட ஆரம்பித்தன.

மாமாவின் மகள் வீட்டிற்கு வந்து சினேகமாகி இன்னும் விபரங்கள் சேகரித்துக் கொண்டு போனாள்.

''கிஸ்ஸடிச்சிருக்கானாம்...'' வீட்டிற்கு வந்து அம்மாவிடம் சொன்னாள்.

''அப்ப நமக்கு வேண்டாம்.'' அவர்கள் நகர்ந்து கொண்டார்கள்.

''லட்ச ரூபா முடியாது. என்னால முடிஞ்சது அம்பதாயிரம் ரூபா தர்றேன். என் பொண்ணுக்கும் அமெரிக்காவில ஒரு வேலை பாக்க சொல்லு'' அவர்கள் எல்லோரும் ஒரு நாள் வீட்டில் கூடியிருக்க அவள் அவனை சாக்குபோக்கு காட்டி கூட்டி வந்தாள். அவன் வீட்டிலுள்ள கும்பலைப் பார்த்து திகைத்துப் போனான்.

''ஏன் இங்க கூட்டிட்டு வந்தே...'' அவளை முறைத்தான்.

வீடு அவனை சூழ்ந்து கொண்டு பல நூறு கேள்விகள் கேட்டது. அவன் எல்லாவற்றுக்கும் தேக்கி வைத்திருந்த பதில்களை இறக்கினான். பிசிறு தட்டாமல் பொய்



சொன்னான். அந்தக் குடும்பத்தில் யாரும் திருப்பதி தாண்டி பயணப்பட்டதில்லை. டெல்லி, பாம்பே என்று கூட போனதில்லை. அமெரிக்கா அந்தக் குடும்பத்திற்கு பிரமிப்பாக இருந்தது.

எல்லார் மனதிலும் பேராசை கொழுந்துவிட்டு எரிந்தது. மிருணாளினிக்கு இவ்வளவு நல்ல இடம் அமைந்து விட்டதே என்று உறவுகள் குமைந்தன.

''லட்ச ரூபாய்க்கு மேல ஒரு பைசா செலவு பண்ண முடியாது. ப்ளீஸ் புரிஞ்சுக்கங்க...''

''அய்யோ லட்ச ரூபாயா...சீக்கிரம் கொடுங்கடா டேய்...'' அவன் உள்ளுக்குள் பேயாய் பறந்தான்.

''அப்படியா...யோசனை பண்ணி சொல்றேன்...'' கம்பீரமாய் எழுந்தான். விடை பெறுவது போல் கை கூப்பினான்.

''நானும் அவர்கூட போய்ட்டு வர்றேன்மா...'' அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

பல்லியை நோக்கி ஈசல்தானே நகருமாம். ஓடிப்போய் வாயில் விழுந்து இறக்குமாம்.

அதுவே அங்கு நடந்தது.

பெண்ணுக்கு திருமணம் என்கிறபோது ஒரு மத்திய தரவர்க்கம் படுகிற அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. தன் பெண்ணுக்கு ஒரு வரன் வந்திருக்கிறது. அந்த பையன் தன் பெண்ணை பல்வேறு காரணங்களுக்காக விரும்புகிறான். அப்படி விரும்புகிறபோது அலசி ஆராய்ந்து ஆதரித்துப் பேச வேண்டிய உறவு...

''ஒரு வேளை உன் பொண்ணுக்கு சரி வராட்டி-என் பொண்ணுக்கு பண்ணிக்கட்டுமா'' என்று கேட்கிறது.

இந்த கேள்வி சம்பந்தப்பட்ட குடும்பத்தினரைக் கலவரப் படுத்துகிறது.

அய்யோ கை நழுவிப் போகுமோ என்று பதறுகிறது.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்கிற வசனம் மறந்து போய் கெட்டிக்காரத்தனம் முக்கியமாகப் போய் விடுகிறது.

போட்டி வந்துவிடுமோ என்கிற கவலையும், போட்டி வந்தால் ஜெயிக்க வேண்டுமென்கிற வெறியும் உடனே ஏற்பட்டு விடுகின்றன.

அந்த வீடு இந்த கலவரத்தில் சிக்கிக்கொண்டது, வீட்டுப் பெண்கள் இதைப் பெரிதுபடுத்தினார்கள்.

''தானா ஒருத்தன் வந்து வீட்டுப் படியேறி பொண்ணைப் பண்ணிக்கறேன்றான், பேந்த பேந்த முழிச்சு கோட்ட விட்றாதேங்கோ சட்டுப் புட்டுனு ஆகவேண்டிய காரியத்த பாருங்கோ'' ஆத்திரக்கார பெண்கள் அவசரமாகப் பேசினார்கள.

''லட்ச ரூபாய்க்கு எங்கடி போறது?'' வீட்டுத் தலைவர் விழித்தார்.

''எங்கியாவது போகணும்,யாரையாவது பாக்கணும், எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நடத்தணும்.''

''பையனைப் பத்தி விசாரிக்க வேண்டாமா...''

''நீங்க விசாரிக்கப் போய் கூட ரெண்டு லட்ச ரூபா செலவாச்சுன்னா...முடியுமா...ஒரு லட்ச ரூபா ஏரோப்ளேன் டிக்கட்டுக்கு, ஒரு அம்பதாயிரம் ரூபா புடவை திருமாங்கல்யம்... ஒரு நாப்பது பேருக்கு ஒருவேளை சாப்பாட்டுக்கு; எங்கியாவது கோயில் மண்டபத்துல கல்யாணத்தை முடிச்சு...ஒரு ஹோட்டல்ல சாப்பாட்டை முடிச்சு வீட்டுக்கு வந்துட வேண்டியது, ஒண்ணரை லட்ச



ரூபாய்க்கு அமெரிக்க மாப்பிள்ளை கிடைக்கிறது கசக்கிறதா ...''

வீட்டிலுள்ள முட்டாள் பெண் பிள்ளை தொடர்ந்து பேசினாள்.

''அவன் அமெரிக்கா போய்... அவளையும் கூட்டிண்டு, அவங்க ரெண்டு பேரும் நன்னா சம்பாரிச்சு... வளைகாப்பு. சீமந்தம்னு வரும்போது...விமரிசையா பண்ணிக்கலாம், வாண வேடிக்கை நடத்தலாம். இப்ப இப்படி நடத்தினா போதும். எப்படியாவது ''ஒண்ணரை லட்சம் பாருங்கோ'' வீடு தலைவனை நெருக்கியது.

அவர்கள் வேகம் பார்த்து சம்பத்குமார் மிரண்டான்.

''நாம ரெண்டு பேரும் போறோமா இல்ல, முதல்ல நீங்க போயிட்டு அப்புறம் என்னைக் கூட்டிக்கறேளா...''

''இரண்டு நாள்ல சொல்றேன்...'' அவன் கம்பீரமாய் சொல்லி அவளைக் கண்ட இடங்களில் தொட்டுவிட்டு அகன்றான். இரண்டு நாட்கள் தீவிரமாக யோசனை செய்தான்,

''முதல்ல காசை வாங்கிக்கடா அப்புறம் கல்யாணத்த டபாய்ச்சுக்க.'' நண்பன் சொல்லிக் கொடுத்தான்.

''டிக்கட்மெட்ராஸ்ல கிடைக்கல பாம்பேல கிடைச்சுடுச்சு. அப்படின்னு சொல்லிடு. டிரெயினேறி பாம்பே போயிடு. மூணு நாள் சுத்திட்டு வந்துடு. பாம்பேல ஷூசீப்பா கிடைக்குதுடா லேடீஸ்கூட'' அந்த இளைஞர்கள் அருவருப்பாய் பேசிக்கொண்டார்கள்.

''நான் மட்டும்தான் முதல்ல போறேன்.'' அவன் அவள் வீட்டிற்கு போய் விளக்கினான்.

''போறதுக்கு முன்னாடி நீ வரதுக்குண்டான எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டு போறேன். அங்கே போய்

டிக்கட் வாங்கி அனுப்பறேன். ஆனா உனக்குண்டான டிக்கட்டுக்கு மாத்திரம் நீங்க இங்கயே கொடுத்திடணும்.'' அவள் வீட்டிலேயே அவன் அவளோடு தனியே பேசினான்.

அப்படி பேசும்போதெல்லாம் அவளைத் தொட்டு கட்டாயப் படுத்தினான். அவன் கட்டிக்கொள்ளப் போகிறவன்தானே என்று அவளும் முக்கால் பங்கு விட்டுக் கொடுத்தாள்.

உடம்பு கிளற... மனம் கிளற... புத்தி குழம்ப, அவனைத் தொட்டுக் கிடந்தாள்.

நாள் குறிக்கப்பட்டது.

''எங்கள் வீட்டில் யாருக்கும் இதில் சம்மதமில்லை. குண்டாய் ஒரு உறவுக்கார பெண்ணை கொண்டு வந்து நிறுத்தி இருநூற்றியம்பது சவரன் என்று சொல்கிறார்கள். இவர் மகள் தான் எனக்கு சவரன். இரண்டு வருடத்தில் இருநூற்று ஐம்பது சவரன் சம்பாதித்துவிடுவேன். நீங்கள் யாரையும் எதிர்பார்க்காதீர்கள். நான் வீட்டில் யாருக்கும் சொல்லப் போவதில்லை. சொன்னால் உங்களுக்கும்... உங்கள் மகளுக்கும்தான் ஆபத்து எனவே ரகசியமாய் திருமணம் முடிப்பதே நல்லது. அமெரிக்கா போய் வந்தால் எல்லாம் சரியாகும்.''

அவள் வீடு குழம்பியது நம்பியது. எல்லோரையும் கூப்பிட வேண்டாமென்று இருபது பேரை மட்டும் கூப்பிட்டது.

''நீங்க காசு கொடுத்தீங்கன்னா நான் டிக்கட் வாங்கிடுவேன்.'' அவன் கல்யாணத்திற்கு முன் அவசரப்பட்டான்.

''தாலி கட்டின மறுநாள்தான் காசு.'' அவள் வீடு கண்டிப்பாய் சொல்லியது. மிகுந்த கெட்டிக்காரர் போல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டது.



சம்பத்குமார் பழி பாவத்திற்கு அஞ்சாதவன்.

''எப்பாடு பட்டோ அந்த வீடு ஒரு லட்ச ரூபாயைத் திரட்டி வைத்திருப்பதை அவன் அறிந்து கொண்டான். பச்சை மாமிசம் முகர்ந்த புலி போல பதுங்கினான்.

''பத்தாயிரம் ரூபா எடுத்துகிட்டு வா...'' அவளுக்கு கட்டளை இட்டான்.

அவள் வீட்டில் சண்டையிட்டு அந்த காசை எடுத்துக் கொண்டு வந்தாள்.

''நாம போலாண்டி கடைக்கு. எதுக்கு நீ காச எடுத்துண்டு போறே...'' வீடு மறித்துக் கேட்டது.

''என் புருஷன் கூப்பிடறான். நான் போய்த்தான் ஆகணும்...'' அவள் இரண்டு அர்த்தத்தில் பேசினாள்.

அம்மா, அப்பா, பெண் எல்லோரும் ஒரு விதத்தில் முட்டாளாக இருந்தார்கள். இதை ரகசிய கல்யாணம் என்று நினைத்து முழுதும் விசாரிக்காமல் 'தடதட'வென்று இறங்கினார்கள்.

''மளிகை கடையில் கொஞ்சம் கெட்டுப்போன கோதுமை மாவை சீப்பா போடறானாம் கூட்டம் சேர்றதுக்கு முன்னாடி பத்து கிலோ...யாருக்கும் தெரியாம வாங்கிண்டு வந்துடுங்கோ.''

புடவை தலைப்புக்குள் பையையும். காசையும் மறைத்துக் கொண்டு ஓடிப்போய்...ஒற்றைக் கதவு திறந்த மளிகை கடையில் ஒருக்களித்து புகுவது போல அந்த கல்யாணம் நடந்தது.

# 9

அவன் நண்பர்கள் என்று பத்துபேர் வந்திருந்தார்கள் அந்தப் பத்துப் பேரில் ஒருவனைத் தவிர மற்ற ஒன்பது பேருக்கும் அவனைப் பற்றி அதிகம் தெரியாது.

''ஒரு லவ் மேட்டர் பிரதர். நானா ஒண்ணரை லட்ச ரூபா செலவு பண்ணி கல்யாணம் பண்ணிக்கறேன். அது தவிர அம்பதாயிரம், துணிமணி, நகைன்னு செலவு பண்றேன். சாப்பாடுகூட அவங்க போடுவாங்களா... இல்ல நான்தான் போடணுமான்னு தெரியலை... எனவே' நீங்க கல்யாணத்துக்கு வரணும்.

நண்பர்களை நம்பிதான் கல்யாணம் பண்ணிக்கறேன். பிரசண்ட் பண்றதாயிருந்தா, ப்ளீஸ், காசா கொடுத்துடுங்க வெள்ளியில் வெங்கடாஜலபதி படம் கொடுத்தீங்கன்னா-நான் அதைத் தூக்கிகிட்டு அமெரிக்கா போக முடியாது ஓ.கே? யூ... அண்டர்ஸ்டேண்ட்...?''

அவன் நண்பர்களை ஏமாற்றினான். அவர்களும் நம்பினார்கள்.

விதவிதமாய் பொய்கள் சொல்ல அந்த பொய்களை ஞாபகம் வைத்துக்கொள்ள பொய்களைப் பிரித்தெடுக்காமல் போட்டு பொய்களை அழுத்த அவனுக்கு எளிதாய் முடிந்தது.

பத்து நண்பர்கள் வந்ததும் அவள் வீடு உற்சாகமாயிற்று. அவர்களை சம்மந்திகள் போல் வரவேற்று உபசரித்தது,

''சம்பத்குமாரை ரொம்ப நாளா தெரியுமா உங்களுக்கு?''



''தெரியுமே... என் கூடதான் படிச்சான். அமெரிக்கா போனான். இப்ப திரும்பி வந்து கல்யாணம் பண்ணிக்கறான்.'' மாப்பிள்ளைத் தோழன் பொய் சொன்னான்.

''தேங்க்யூ-தேங்க்யூ...''

அந்த நல்ல குடும்பத்தின் கண்களை எல்லாவிதமான பொய்களும் மறைத்துவிட்டன. உண்மை தெரியாது போயிற்று.

கல்யாணத்தில் வாசிக்கப்பட்ட வாத்தியம்கூட சரியாக இல்லை. பிசிறு தட்டிய அந்த நாதஸ்வரம் சினிமா பாட்டு வாசிக்க முடிந்ததே தவிர... தெளிவான சங்கீதம் அங்கு ஒலிக்கவில்லை,

ஆனாலும் அவள் கல்யாணத்தன்று நாகலிங்க பூவைப் போல் சிவந்திருந்தாள். மிக மிக சந்தோஷமாக இருந்தாள். தானே பார்த்து நிச்சயித்துக்கொண்ட கல்யாணம் என்கிற கர்வத்தில் இருந்தாள்.

யாருக்கும் கிடைக்காத அதிர்ஷ்டம் தனக்கு கிடைத்துவிட்டதாக நம்பினாள். இன்னும் ரெண்டு மாசமோ மூணு மாசமோ... அமெரிக்கா போய்விடப் போகிறோம் என்பதால் அதிகம் ஆங்கிலம் பேசினாள்.

அப்பாவும், அம்மாவும் எத்தனை சிரமப்பட்டு இந்த கல்யாணத்தை நடத்துகிறார்கள் என்பது புரிந்து அவர்கள் மீது பாசமழை பொழிந்தாள்.

தாலி கழுத்தில் ஏறியதும் அழுதாள். அப்பாவின் அணைப்பில் விம்மித் தீர்த்தாள். அம்மாவைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டு அழுதாள். தங்கைகளின் தழுவலில் மனம் குளிர்ந்தாள். சமாதானம் ஆனாள். கொஞ்சம் சிரிப்போடு அழுதாள். அழுதுவிட்டு சிரித்தாள்.

வாழ்க்கை முழுவதும் அழப்போகிறோம் என்று தெரியாமல் அழுதாள்.

உலகில் மிக மிக கேவலமான காரியம் பொய் சொல்லி திருமணம் செய்து கொள்வதுதான். பெண்களை ஏமாற்றுவதுதான். ஒரு குடும்பத்தின் வயிற்றெரிச்சலை கொட்டிக் கொள்வதற்கு பதில் இல்லாமல் போய் விடாது. ஒரு பெண் குழந்தையைப் பெற்று வளர்த்து மணம் முடிக்க பெற்றோர்கள் படும் பாட்டை இளைஞர்கள் உணர வேண்டும்.

கல்யாணம் சமுதாய கட்டாயம். அதன் விமர்சிகையும் ஒரு சமூக நிர்பந்தம். இரத்தம் சிந்தி சம்பாதித்த பணத்தை இரண்டுநாள் கல்யாணத்தில் இறைக்கிற பெற்றோர்களின் மனோநிலையை இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தான் பெற்ற மகள் சந்தோஷமாக இருக்கத்தான் சீரும், சீதனமும் தரப்படுகிறது. தன்னுடைய மகள் கலங்கக்கூடாது என்றுதான் ஒரு தகப்பன் தன் செல்வத்தைப் பிய்த்துக் கொடுக்கிறான். கடன் வாங்கியாவது திருமணம் செய்கிறான்.

அவன் மகள் அழுதால், அவன் வயிறு எரியும். அவன் வயிறெரிந்தால் சம்பந்தப்பட்டவர்கள் வாழ்க்கை ரணமாகும். அவன் வயிற்றை எரிவித்தவர் ஏதேனும் சித்ரவதைக்கு ஆட்படுவார். சொல்லவொண்ணா துயரத்தில் மாட்டிக் கொள்வார்கள்.

ஒரு விளைவுக்கு எதிர் விளைவு உண்டு என்பது இயற்கை விதி. ஒரு பாவத்திற்கு உண்டான பலனை அனுபவித்தே ஆகவேண்டும் என்பதில் பலபேருக்கு அலட்சியம் இருக்கிறது. அறிவில் தெளிந்தவர் அலட்சியம் செய்வதில்லை.



அன்றிரவு சம்பத்குமார் சிறிதும் கூச்சமின்றி மிருணாளினி என்ற அந்தப் பெண்ணை சம்போகித்தான். உண்மையைச் சொல்லிவிடலாமா என்று யோசித்து...ஓடுகிறவரை ஓட்டும் என்று மௌனமாக இருந்தான்.

வெள்ளம் தலைக்குமேல் விரைவாக போய்க்கொண்டு இருக்கிறது. மூச்சு பிடித்து ஆற்றோடு போய் கொண்டு இருக்கிறவனுக்கு சாண் போனாலென்ன-முழம் போனால் என்ன...என்று அலட்சியமாய் இருந்தான்.

மறுநாள் புதிய பையில் போட்டு ஒரு லட்ச ரூபாய் காக அவனுக்கு தரப்பட்டது. அவன் நான்கு நாளும் அந்த காரோடு ஊர் சுற்றினான். விதவிதமான உடுப்புகள் வாங்கினான்,

'பம்பாய்க்கு போய் பிளேன் ஏறவேண்டும்' என்று சொன்னான். பம்பாய்க்கு முதல் வகுப்பு ட்ரெய்ன் டிக்கட் வாங்கினான். பம்பாய்க்கு போகும்வரை கால. நேரம் பார்க்காது மனைவியோடு மாமனார் வீட்டில் கூடிக் கிடந்தான்.

''உங்க வீட்டுக்கு ஒருதடவை கூட போகலையே...''

''ஒரு தடவை போய்ட்டு வந்தேங்க. படியேறினா வெட்டிடுவேன்னு அரிவாளைக் காட்டினாங்க. திரும்ப வந்துட்டேன்.

அவள் வீடு வாயடைத்துப் போயிற்று.

''வேண்டாம். வேண்டாம். அமெரிக்கா போய்ட்டு வந்து பாத்துக்கலாம்.'' தானே சமாதானப்படுத்திக் கொண்டது.

ஏழ்மையான, வெகுளியான, வெண்மையான அந்த குடும்பத்தை அவன் ஏமாற்றினான். பம்பாய்க்கு ரயிலேறினான். அவள் வீடு ஸ்டேஷனுக்கு வந்து விம்மி விம்மி அழுது பிரியாவிடை கொடுத்தது.

அந்த அயோக்கியன் அடுத்தவாரமே சென்னை திரும்பினான். வடசென்னை பக்கமுள்ள கம்ப்யூட்டர் சென்டரில் கலிஃபோர்னியா என்ற பனியனும், கம்ப்யூட்டர் புத்தகமுமாய் நின்றான். தூண்டில் போட்டான். அங்கும் ஒரு மீன் சிக்கியது.

கெட்டழிந்து போகும் காலம் வந்துவிட்டால், எட்டு திசையிலிருந்தும் எதிரிகள் வருவார்கள்.

''ஒரு ஐநூறு ரூபா கொடு மச்சி. பரீட்சைக்கு பணம் கட்டணும். வீட்ல அப்பா ஏதோ பிரச்னைல இருக்காரு. அவருகிட்ட போய் காசு கேட்கிறது நல்லாயிருக்காது ரெண்டு மாசத்துல எங்கப்பா ரிலீஃப் ஆயிடுவாரு. நான் வாங்கி கொடுத்துடுவேன்.

இரண்டுமுறை சட்டை கடன் கொடுத்தவன் இவன் வசதி பார்த்து கேட்டான்.

''ஸாரிம்மா, ஐநூறு ரூபா இல்ல. அம்பது ரூபா வெச்சுக்க. உன் சட்டைய ரெண்டுநாள்தான் போட்டேன். அதுக்குண்டான வாடகை.''

கேட்டவனுக்கு சரேலென்று கோபம் பொங்கியது. அடக்கிக்கொண்டான். ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்டு நன்றி சொன்னான்.

''மவனே...உன்னை அழிக்கலே...நான் ஆம்பளை இல்லடா...இந்த அம்பது ரூபாயில உன் பேர் எழுதி வெச்சு நீ அவஸ்த்தைப்பட்டு அழும்போது நான் நாலுபேரோட ஐஸ்கிரீம் வாங்கி திம்பேன்'

'நான் அம்பது ரூபாய்க்கா சட்டை கடன் கொடுத்தேன். நட்புக்கு கொடுத்தேன். நண்பன் சந்தோஷமா இருக்கட்டும்னு கொடுத்தேன். இன்னிக்கு திருட்டு துட்டு வந்தவுடனே என்னையே ஏமாத்தறியா...'



'ரெண்டு ரூபா மொட்ட கடுதாசி...உன்னை நாஸ்தி பண்ணிடும். பண்ண வைக்கறேன் பாரு...இந்த அம்பது ரூபாயை மாத்தவே மாட்டேன்டா...' அவன் வெளியே சிரித்தான். உள்ளுக்குள் சூளுரைத்தான்.

வேறுபக்கத்திலிருந்தும் ஒரு அம்பு வந்தது. காலேஜ் படிக்கும் அவன் தங்கையும் கம்ப்யூட்டர் வகுப்பு போக. கம்ப்யூட்டர் படித்து என்ன செய்வீர்கள் என்று சாதாரணமாக கேட்க...

''அமெரிக்கா போவேன்...'' என்று அந்த பெண் சொல்ல,

''அமெரிக்காவில உன்னை யார் வெத்தல பாக்கு வெச்சு அழைக்கிறாங்க...'' என்று அவர்கள் கேட்க

''என் அக்காள் புருஷன்...'' என்று அவள் நெஞ்சு நிமிர்த்த...

''யார் உன் அக்காள்...யார் உன் அக்காள்புருஷன்...'' என்று கேள்வி வர...அவள் அடையாளம் காட்ட...

''இவனா...கம்ப்யூட்டர் பொறுத்தவரைக்கும் இவன் விரல் பிரட்டி, கை நாட்டு, திருப்பதி தாண்டாதவனை அமெரிக்கான்றயே...யார் சொன்னா உனக்கு...ஏன் பொய் சொல்றே?''

''அய்யோ...நான் பொய் சொல்லல...இவர்தான் என் அக்கா புருஷன்...'' அவள் மணிபர்சிலிருந்து குரூப் போட்டோ காண்பித்தாள்.

''இவன் உன் அக்கா புருஷனா இருக்கலாம். ஆனா இவன் அமெரிக்கா இல்லை.''

மிருணாளினியின் தங்கை கலங்கினாள், மூச்சு இறைக்க வீட்டிற்கு ஓடிவந்தாள். அம்மாவிடம் சொன்னாள்.

''நான் டிக்கெட் பாத்தேனேடி...நியூயார்க்னு டிக்கெட் இருந்ததே...யாராவது பொறாமைப்பட்டவன் சொல்லியிருப்பான், மிருணாளினி தெரியாதயா அவனைத் தேர்ந்தெடுத்திருப்பா''

அந்த வீடு மிரண்டது.

ஐம்பது ரூபாயில் அவமானப்பட்டவன் அவர்களுக்கு நேரிடையாக கடிதம் எழுதாமல், எதிர் வீட்டிற்கு கடிதம் எழுதினான்.

'மிருணாளினி புருஷன் அமெரிக்க போகவில்லை. வட சென்னையில் சுற்றிக் கொண்டு இருக்கிறான். அவன் ஏமாற்று ஆள். மாமனார் காசில் கோழிக்கறியும், குலோப் ஜாமூனும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். அங்கே ஒரு வட இந்திய பெண்ணை தினமும் சந்தித்து, பேசி அவள் மனதையும் கெடுத்துக் கொண்டிருக்கிறான். உங்கள் எதிர்வீடு ஏமாந்துவிட்டது' என்ற உண்மையைப் பக்குவமாக எடுத்துச் சொல்லி விடுங்கள்.

'பக்'கென்று பெட்ரோலில் நெருப்பு பிடிப்பதுபோல், அந்த செய்தி தெரு முழுக்கப் பரவியது. மிருணாளினி வீட்டையும் தொட்டது.

''ஏங்க...உங்க மாப்பிள்ளை அமெரிக்கா இல்லீங்களாமே...எதிர்வீட்டுக்கு லெட்டர் வந்துதாமே...''

''அமெரிக்கா இல்லன்னா பரவாயில்ல...அமிஞ்சிக் கரையில வேலை வாங்கித் தரலாம். ஆனா வேறொரு பெண்ணோட தொடர்பு, ஆரம்பிச்சான்றாங்க. அது ரொம்ப தப்பாப் போயிடும். கொஞ்சம் பாத்து மடக்கி பிடுச்சி வைங்க...'' தெரிந்தவர் பேச...

மிருணாளினி வீடு வாய்விட்டு கதறியது.

மிருணாளினி இடிந்து போனாள்.



# 10

''எங்கிட்ட போன் நம்பர் கொடுத்திருக்கார். டெலிகிராஃபிக் அட்ரஸ் கொடுத்திருக்கார்.''

''எல்லாம் பொய்...முந்தா நேந்து சேத்துப்பட்டுல பாத்தாங்களாம்...''வேறு யாரோ தகவல் சொன்னார்கள்.

''அவங்க வீட்டு அட்ரஸ் என்னடி...?''

''தெரியாதே...''

''அவன் பிரண்ட்ஸ் அட்ரஸ் ஏதாவது தெரியுமா?''

''தெரியாதே...''

அந்த கம்ப்யூட்டர் கிளாஸ் எதிரே...பத்துப் பேரோட உட்கார்ந்துண்டு இருப்பான்னு சொல்லுவியே...அதுல ஒரு ரெண்டு பேரைப் பிடிச்சா தெரிஞ்சுடாது?'' தங்கைகள் கேட்டார்கள்.

வீடு மொத்தமும் அங்கு ஓடியது. விசாரித்தது. உண்மையை உணர்ந்தது. உடைந்து போய் விசும்பி விசும்பி அழுதது.

பொய் சொல்லி பணம் சம்பாதிக்கலாம். பொய் சொல்லி பரிசு வாங்கலாம். பொய் சொல்லி வேலை செய்யாதிருக்கலாம். பொய் சொல்லி வேலை தேடலாம். ஆனால் பொய் சொல்லி திருமணம் செய்யவே கூடாது.

ஆயிரம் பொய் சொல்லி திருமணம் செய்யலாம் என்பவன் நீசன். பெற்ற தாயை விற்பவன்தான் திருமணத்திற்கு ஆயிரம் பொய் சொல்வான். நற்பிறப்பாக இல்லாத

வனும், நல்லபடி வளர்க்கப்படாதவனும்தான் திருமணத்தில் ஏமாற்றுவான்.

ஜோடி சேர்வதற்காக பொய் சொன்னவன்...பொய் சொல்லி பிறர் வாழ்க்கையைப் பாழ் பண்ணியவன் தனிமைப்படுத்தப்படுவான். வறுமையாலும், தீராத நோயாலும் தாக்கப்படுவான். தன்னைத் தானே வெறுத்து. தற்கொலை செய்துகொண்டு துர்மரணம் அடைவான்.

திருமணத்தில் சொல்லும் பொய் ஒருவர் வாழ்க்கையைத் துடிக்க வைத்கிறது. அவர் சம்பந்தப்பட்ட பல நெருங்கிய உறவுகளின் கனவுகளைச் சிதறடிக்கிறது. அய்யோ என்று அவர்கள் போடும் கூச்சல் ஏமாற்றியவன் குடும்பத்தைத் தாக்கும். அவன் எது செய்தாலும் விரல் முறியும்.

இது நம்பிக்கை துரோகத்தின் உச்ச கட்டம். மானங்கெட்ட செயல்.

பொய் சொல்லி ஏமாற்றியவன் முகம் இருண்டு கிடக்கும். கண்கள் பள்ளத்திற்குப் போகும். கருவிழிகள் ஒளியிழந்து காணப்படும். பொய் சொல்பவன் மேனி சோபை அற்று இருக்கும். பேச்சு தடுமாறும், அதீத யோசனையால் மலச்சிக்கல் ஏற்படும்.

மலச்சிக்கலால், நுரையீரலில் நீரடையும், நீர் சளியாகும். அது ரத்த ஓட்டத்தை பாதிக்கும். ரத்த ஓட்டம் தளர்ந்து, இருதய படபடப்பு அதிகரிக்க...எல்லா நோயும் நிச்சயம் வரும்.

காம்பீர்யம் இல்லாமல் வாழ்வதைவிட மரணமடைவது உத்தமம். மறுபடி பிறந்து, காம்பீர்யத்தைக் கைகொள்ள முடியும்.



மிருணாளினி வீடு கதவிடுக்கில் விரல் கொடுத்தது போல கதறியது. அவள் அப்பா அவனை வெறிபிடித்தது போல அடித்தார். பீன்ஸ் நறுக்கும் கத்தியை எடுத்துக் கொண்டு அவனைக் கொன்று விடுகிறேன் என்று தெருவில் இறங்கினார். அழுது கொண்டே திரும்பினார்.

''என்னால கொல்ல முடியாதுடி. எனக்கு சமார்த்தியம் போறலைடி....சரியா விசாரிக்கத் தெரியலைடி...நான் மகாபாவிடி...நல்லவனா வளர்ந்துட்டேண்டி...''

நல்லவனாக இருப்பது பாவம் என்ற அர்த்தத்தில் பேசினார்.

இரவு முழுவதும் அழுதபடி...விடியலில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். எதிர் வீடு, பக்கத்து வீடு என்று எல்லோரும் கூடி யோசனை செய்தார்கள். உறவுகளை வரவழைத்தார்கள். இரண்டு ஆட்டோக்களில் ஏறி, அவன் வீட்டை அடைந்தார்கள். அவன் அம்மாவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அவன் எங்கே என்று கேட்டார்கள். அந்த கிழவி மிரண்டு போனாள். சொல் தாங்காமல் சிறுத்துப் போனாள்.

''தப்புதான்...ரொம்ப பெரிய தப்புதான். என்னைக் கொன்னுடு. எனக்கும் நிம்மதி. அவனுக்கும் நிம்மதி.'' அவளும் அழுதாள்.

அவனைத் தேடிக்கொண்டு வட சென்னைக்குப் போனார்கள். அவன் அட்டகாசமாக ஒரு கம்ப்யூட்டர் வகுப்பு வாசலில் நின்று கொண்டிருந்தான். ஆட்டோவை நிறுத்தி விட்டு வயிற்றெரிச்சலோடு அவனை எல்லோரும் பார்த்தார்கள். அவள் மட்டும் இறங்கி அருகே போனாள்.

அருகே போய் தூவென்று முழுபலத்தோடு துப்பினாள். அவன் அடிக்க கையோங்கினான். அவள் உறவுகள்

ஓடிவந்தன. தெருவில் நின்று கத்தின. அவன் மிரண்டு ஓடினான்.

அவர்கள் வீடு திரும்பி போலீசுக்கு சொன்னார்கள்.

''எனக்கு மூணு பொண்ணுங்க. இவன் கால் கட்டை விரலை நசுக்காத விடமாட்டேன். நான் அடிக்க ஆரம்பிச்ச பிறகு தடுக்ககூடாது. அய்யோ என் புருஷன்னு அழக்கூடாது''

''இல்ல சார். இவன் என் புருஷன் இல்ல சார், இனிமே இவன் கூட நான் வாழமாட்டேன் சார். நான் இனிமே எவன் கூடயும் வாழமாட்டேன் சார். நான் கம்ப்யூட்டர் படிப்பேன் சார். அமெரிக்கா போவேன் சார். அங்கே போய் லட்சம் லட்சமா சம்பாதிச்சு என் தங்கைகளுக்கு கல்யாணம் பண்ணி வைப்பேன்.

எனக்கு இவன் வேண்டாம் சார். இவன் அழறத நான் பாக்கணும் சார்...''

போலீஸ் அவனை மூன்று மணி நேரத்தில் கைது செய்தது. அவனை சட்டையை அவிழ்த்துவிட்டு, தரையில் உட்காரும்படி கட்டளையிட்டது.

''இல்ல சார்... நான் சொல்றத கேளுங்க... எப்படியும் நான் அமெரிக்கா போயிடுவேன்...'' அவன் கெஞ்சினான்.

போலீஸ் அவனை பூட்ஸ் காலால் எட்டி, எட்டி உதைத்தது. அவன் ஓடி வந்து அவள் கால்களைப் பிடித்துக் கொண்டான். அவள் தன் செருப்பை உருவி அவன் முகத்தில் பலம் கொண்ட மட்டும் அடித்தாள்.

பெயிலில் விடக்கூடாத செக்ஷன்படி அவனைச் சிறைக்குள் தள்ளினார்கள். அவன் ஏமாற்றியது எளிதில் நிரூபணமாகி மூன்று வருட சிறைத்தண்டனை கிடைத்தது.

இன்னொரு கோர்ட் ஒரு வருடத்தில் அவளுக்கு விவாகரத்து கொடுத்தது. அவள் வெறி பிடித்தது போல் படித்



தாள். யார் பரிதாபப்பட்டாலும், யார் கேலி செய்தாலும் பயமின்றி ஏற்றாள்.

தான் பட்ட வேதனையை வேறெந்த பெண்ணும் படக் கூடாதென்று 'தன் கதையைப் பத்திரிகைக்குச் சொன்னாள். தான் போராடிக் கொண்டிருப்பதை விவரித்தாள்.

''அமெரிக்கா போறது ஒண்ணும் கஷ்டமேயில்லை. எங்க கம்பெனியில ஜாய்ன் பண்ணச் சொல்லுங்க. நாங்க அமெரிக்கா அனுப்பறோம்'' அவளுக்கு உதவிகள் பல வந்தன.

அவள் ஒரு சிறிய கம்பெனியில் வேலை செய்தபடி, தொடர்ந்து அமெரிக்காவில் வேலை தேடிக் கொண்டிருக்கிறாள். விண்ணப்பங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறாள்,

அங்கங்கே வெளிச்சக்கீற்றுகள் தென்பட... அவள் தெளிவும் சந்தோஷமுமாக வலம் வந்து கொண்டிருக்கிறாள்.

சிறைச்சாலையிலிருந்து நீண்ட கடிதமொன்று வந்தது. அவள் அப்பா அதைப் படித்துவிட்டு...

''மன்னிப்பு கேட்டு எழுதியிருக்கான்மா...'' என்றபடி அவளிடம் நீட்டினார். அவள் அதைப் படிக்கவேயில்லை. வாங்கி பல துண்டுகளாக கிழித்துப் போட்டாள்.

''என்னம்மா...?''

''நமக்குத் தெரிஞ்ச ஆளை மன்னிக்கலாம். தெரியாத ஆளை எப்படி மன்னிக்கறது...''

இந்திய பெண் அடக்கமானவள்தான். அவள் சீறி எழ ஆரம்பித்து விட்டால், அவள் முன் எவனின் ஆண்மையும் செல்லுபடியாகாது.

காதல் ஏன் தோல்வி அடைகிறது! காதலில் ஏன் பிரிவு வருகிறது? காதலித்துவிட்டு ஒதுக்கமாக எப்படி போக முடிகிறது. காரணமென்ன...

நீ இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது... என்ற அவசியத்தை ஒரு காதல் ஏற்படுத்த வேண்டும். அப்படியொரு உணர்வு ஏற்பட்டால்தான், அது காதல்.

நீ இல்லாமல் நான் இல்லையென்று இருப்பது சரியா? அது ஆரோக்யம்தானா? தனித்திருப்பது நல்லதா? சார்ந்திருப்பது உத்தமமா? தொடர்ந்து யோசிக்கலாம்...

## 11

**ம**னிதன் மிருகமல்ல. உடல் இச்சையை தீர்த்துக் கொள்ள இணை தேடுகிற தன்மை மட்டும் அவனுக்கு இருப்பின், அவன் குடும்பம் என்கிற ஒரு விஷயத்தை குலம் என்கிற விகசிப்பை. தேசம் என்கிற விவரிப்பை கை கொண்டிருக்க மாட்டான்.

ஆறாவது அறிவோ அல்லது வேறொன்றோ ஏதோ ஒரு காரணத்தால், மனிதனுக்கு காமம் மட்டுமே போதுமானதாக இல்லை. காமத்தை நேரடியாக அனுபவிக்க அவனுக்கு விருப்பமே இல்லை. காதல் கிறக்கம் அவனுக்கு ஏற்பட, அவன் வாழ்க்கை முறையே மாறிப் போயிற்று.

மிருகங்களுக்கு சந்ததித் தொடரை வளர்க்கின்ற காமம் மட்டுமே முக்கியமான விஷயம். அதனால்தான் சந்ததி பிறந்ததும் சிறிதுநாள் அதை வளர்த்துவிட்டு, உடனே துரத்திவிடுகிறது.



மனிதனால் தன் சந்ததியைத் துரத்த முடியவில்லை. வெறும் காமத்தால் மட்டும் பிறந்த குழந்தை அல்ல அது. சந்ததி காதலின் பரிசு. எனவே, காதலின் விரிவாக்கம் மனைவியிடம் இருந்து குழந்தைக்குப் போகிறது. தன் குழந்தையிடமிருந்து மற்ற குழந்தைக்குப் பரவுகிறது.

வெறும் காமம் மட்டுமே மனதின் எண்ணமாக இருப்பின், மொழி, மதம், தேசம் போன்ற விஷயங்களெல்லாம் வளர்ந்திருக்காது, பெண் மீது கொண்ட காதலின் வெளிப்பாடாகத்தான் கலைகள் தோன்றின.

இந்த கலைகளின் ஆளுமையால் நாகரீகம் கனிந்தது. நாகரீகத்தின் முதிர்ந்த விஷயமே மதம். மதத்தின் நிர்வாக வெளிப்பாடு, அரசியல், இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஆண் பெண் காதல்.

இந்தக் காதலை மறுக்கின்ற சமூகம். மதம் அல்லது அரசியல் காட்டுமிராண்டித்தனமாய் இருக்கும் என்பதில், மிருகவெறியோடு அலையுமென்பதில் எந்த ஐயமுமில்லை.

பெண்களை இழிவுபடுத்துகிறபோது அந்த சமூகம் மூன்று தலைமுறைக்கு சீரழிகிறது.

பெண்களை இழிவுபடுத்துவது என்பது, காமம் அதிகரித்து காதல் குறைவதைக் காட்டுகிறது. அதே சமயம் காதல் அதிகரிப்பதாலும் பிரச்சினைகள் வந்துவிடுகின்றன.

மனிதரில் சிலருக்கு சிறுவயது முதற்கொண்டே காதலில் பிடிமானம் அதிகமாகிவிடுகிறது. ஏதோ சில காரணங்களால் அந்த வார்த்தைக்கு அதீத முக்கியத்துவம் மனதில் ஏற்பட்டுவிடுகிறது.

சிறுவயதில் கொஞ்சப்படாததால், ஒதுக்கப்பட்டதால் யாராவது தன்னைக் கட்டிக்கொள்ள மாட்டார்களா,

கொஞ்ச மாட்டார்களா என்று மனம் ஏங்குகிறது. வயதான பின்னும் ஆசைப்படுகிறது.

சிலசமயம் வயதாக வயதாக இந்த ஆசை அதிகரிக்கிறது. காதல் என்பது காமத்தின் நாகரீகம்தான். ஒரு அற்புதமான விஷயம்தான். ஆனால் அது இன்னொரு மனிதரின் மனம் சம்பந்தப்பட்டு இருப்பதால், இன்னொருவர் வாழ்க்கை பற்றி சம்பந்தப்பட்டு இருப்பதால், மிக கவனமாக கையாளவேண்டும்.

நாகரீகமான உலகத்தில் காதலைப்பற்றி எத்தனையோ விதமாக தலைமுறை தலைமுறையாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இவைகளோடு நெருக்கமான பரிச்சயம் ஏற்படுவதாலும் மனதுக்குள் இடைவிடாத காதல் குதித்துக் கொண்டிருக்கும்.

காதலை மனைவியிடம் எதிர்பார்த்து, சரியானபடி கிடைக்காத கணவருக்கு மத்திம வயதில் காதல் பூக்கக் கூடும்.

காதலுக்கு அடிப்படை பொருளாதார வசதி. ஓடியாடி உழைத்து, காசு சம்பாதித்து, வீட்டுக்கு கொண்டு போய் கொடுத்து உண்டு, தூங்கி, உயிர் வாழ்வதே வாழ்க்கை என்று சில பெண்கள் இருக்க, அவர்கள் 'முதிர்கன்னி' பருவத்திலும் காதலுக்கு ஆசை வந்து விடுகிறது.

ஆணும், பெண்ணும் அருகருகே வாழ்கின்ற சமூகங்களில், கலந்து பழகுகின்ற கால கட்டங்களில் இந்த வயசாளிக் காதல் சகஜம், நன்கு முதிர்ந்த பிறகு காதலிப்பதால், அந்தக் காதலில் ஒரு நிதானம் இருக்கும். நிறைய தத்துவங்கள் பேசப்படும். அழுகை, ஆத்திரம், குற்றம் சாட்டுதல் போன்ற வேதனைகள் இருக்காது.

மாறாய் ஒவ்வொரு பார்வையும் அர்த்தப்படும். ஒவ்வொரு செயலும் முழுமையாக இருக்கும். ஆனால் இந்தக்



காதலின் முடிவென்ன என்பதுதான் புரியாத புதிராக இருக்கும்.

இந்தக் காதல் திருமணத்தை நோக்கி காட்டாறாக விரையாது. மாறாய் காதல் காதலாக இருந்து போகட்டும் என்று குளம், குட்டையாகத் தேங்கும். இந்த காதற்குளமும் பன்னெடுங்காலம் அல்லியும், தாமரையுமாய் பூத்துக் குலுங்கும். குளம் முழுவதும் மூடியிருக்கும். தேங்கின நீர் யாருக்கும் தெரியாது.

இன்றைய சமூகத்தில், பெரிய பட்டணங்களில் கூடாக்காதல் அதாவது சேராக் காதல் அதிகம் இருக்கிறது. ஆணின் அருகாமை கண்ட வியப்பும், அவன் ஆதரவு தந்த சுகமும், பெண்ணின் இதமும், புத்திசாலித்தனமும் பரஸ்பரம் கவிழ்த்துப் போட, கள்குடித்த குரங்கு போல் மனம் கூத்தாடும்.

இந்த விதமான காதல் வர...வர எண்ணிக்கையில் அதிகரிப்பதால் இது பற்றி எழுத நினைக்கிறேன், இது சரி. தவறு என்கிற வாதம் என்னிடம் ஏதுமில்லை. சரியென்றும் தவறென்றும் வாதிட புத்திசாலித்தனம் போதும்.

முதிர் கன்னி வயதில் காதல் ஏற்பட்டால், அதைக் கையாளுதல் எங்ஙனம் என்பது பற்றியும், நாற்பது வயதில் மனம் இன்னொரு பெண் மீது ஆசைப்பட்டால் கவனமாக இருக்க வேண்டிய அவசியம் பற்றியும் முடிந்த அளவு யோசிக்க நினைக்கிறேன்.

காதலுக்கு வாய்ப்பில்லாத பலர், காதல் செய்ய துணிச்சல் இல்லாத பலர் சமூக கேலிக்கு அஞ்சி தன்னை ஒழுக்கப் போர்வையால் மூடிக்கொண்ட பலர் சேராக் காதலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பார்கள்.

சமூகம் ஏற்றுக் கொள்ளாத விஷயத்தைச் செய்வானேன்? அது கேவலமல்லவா? என்று நீதி தேவன்

வேஷம் போடுவதைக் காட்டிலும், இது என்ன என்று ஆராய விரும்புகிறேன். கவனமாய் கையாள, காயப் படாமல் இருக்க, சொல்லித்தர விரும்புகின்றேன்.

தவறு என்று குற்றம் சொல்லுவதைவிட, எது சரி என்பதை விளக்குவது நல்லது.

இதற்கு ஒரு கதை சொல்லி, இவர்கள் கையாண்ட விதம் இப்படி என்று உவமானம் சொல்வது உத்தமம்.

ஒருவர் வாழ்க்கை மற்றவருக்கு உவமானம்தான். மற்றவர் காதலை உற்றுக் கவனித்தால், அது நமக்கு பாடமாக அமையும். இதை கோபப்படாது, ஆத்திரப்படாது கவனித்தால் நம் புத்தி நமக்கு தெளிவாகும்.

''எனக்கு இன்னாத்துக்கு இந்தக் கண்றாவி எல்லாம். எவனோ கூறு கெட்டவன், எவளோ கூறு கெட்டவளை லவ் பண்றானாம். இந்தக் கதை எனக்கு என்னாத்துக்கு? எவரேனும் அலட்டக்கூடும்.''

வாழ்க்கை என்பது தொடர்பு கொள்வது, சக மனிதர்களோடு தொடர்பு கொள்வது. தொடர்பு கொள்வதற்கு தன்னையும், பிறரையும் அறிதல்வேண்டும்.

தனக்கு பிடித்தது ஏன் இவருக்குப் பிடிக்காமல் போகிறது? இவருக்குப் பிடித்தது ஏன் பிடிக்கலில்லை? என்று ஆராய வேண்டும்.

எல்லாம் அறிந்தவன் என்ற மமதை இருந்தால், ஆராய்தல் முடியாது. எல்லாம் அறிந்த இடம், ஏகடியம் பேசாது. ஆ· ால் மமதை நிறைய பேசும். மமதை அறியாமையின் குழந்தை.

மமதை அழுத்தம் திருத்தமான மாறாத சட்டங்கள் போடும், சட்டங்களே வாழ்க்கை என்று வாதாடும்.



மனிதனின் எல்லா விஷயங்களும் மாறுபாடு அடையக் கூடியவை. திருத்தத்துக்கு ஆளாகுபவை. எனவே கடுமை காட்டுவதில் கவனமாக இருக்கவேண்டும்.

இப்படி கடுமை காட்டுகிற மதம் அல்லது சமூகம் காதலுக்கு எதிரி காதல் கலந்த ஆண் பெண் உறவில் ஒரு சமூகத்திற்கு குறைவாகக் கிடைத்தது எனில் அந்த சமூகம் முட்டி மோதி சாகும். தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு அழியும்.

சந்தோஷமாக இருப்பதற்காகத்தான் வாழ்க்கை விதிகள். இந்த விதிகளுக்குப் பொருந்தாமலும் சில சமயம் சந்தோஷங்கள் கிளர்வதுண்டு. ஏனெனில் வாழ்க்கை விசித்ரமானது. மனிதர்கள் விசித்ரமானவர்கள். எல்லா விதிகளும் எல்லோருக்கும் பொருந்தாது.

அவருக்கு வருவாய்த்துறை அலுவலகத்தில் முக்கிய பணி. எடுத்த உடனேயே அரசாங்கத்தில் நல்ல பதவியில் இருந்து விட்டு நாற்பத்தி மூன்று வயதில் வருவாய்த்துறை அலுவலகத்தில் உயர் பதவியில் இருந்தார்.

பொருளாதாரம் ஒரு வறட்சியான விவகாரம் என்பது அவரளவில் பொய்யாகிவிட்டது இந்திய பொருளாதாரம் மட்டுமல்லாது. உலகப் பொருளாதாரம் குறித்தும் அவர் பார்வை தெளிவாக இருந்தது.

அவர் பெயர் கணேசமூர்த்தி அவரை ஜி,எம். என்று எல்லோரும் அழைப்பார்கள். எப்போதுமே ஒரு உற்சாகமாக இருப்பதற்கு அவர் கற்று வைத்திருந்தார். அரசாங்க அலுவலகத்தின் சோம்பலை உரித்துப் போட முயற்சி செய்து கொண்டிருந்தார்.

''எட்டு மணி நேரம் வேண்டாங்க. நாலு மணி நேரம் நல்லா வொர்க் பண்ணினீங்கன்னா போதும், நாலு மணி

நேரம் உண்மையா வேலை செய்துட்டா நீங்க அரை மணி நேரம் முன்னாடியே போலாம். அல்லது அரை மணிநேரம் தாமதமா வரலாம். நான் ஒண்ணும் கண்டுக்க மாட்டேன். மத்த மூணரை மணி நேரம் என்ன பண்றதுன்னு கேட்கறீங்களா? அப்படி நின்னு கடல் பாருங்க போதும்.

ஒரு ஒரு மணி நேரம் கடல் பாருங்க. ஒரு ஒரு மணி நேரம் வாரப் பத்திரிகை தினசரி படிங்க. இன்னொரு ஒரு மணி நேரம் நம்ம பொருளாதாரம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் பேப்பர் படிங்க. இன்னொரு அரை மணி நேரம் இருக்கே என்ன பண்றதுன்னு கேட்கறீங்களா? என் கூட பேசுங்க. நம்ம நிர்வாகம் பத்தி பேசுவோம். அண்டை மாநிலம் நிர்வாகம் பற்றி பேசுவோம். அமெரிக்க மாநில நிர்வாகம் பத்தி பேசுவோம்.''

அவருக்கு கீழுள்ள அதிகாரிகளை உற்சாகப்படுத்திக் கொண்டார்.

''என்னை யாரும் எதுவும் பண்ண முடியாது. என்னை எங்க தூக்கிப் போட்டாலும் அது பத்தி எனக்கு கவலையில்லை, அப்படின்னு சொல்றவங்கள, நான் வேற டிபார்ட்மெண்டுக்கு அண்ட் டெபுடேஷனுக்கு தூக்கிப் போட்டுடுவேன்.

ஒரு இடத்துக்கு வேலைக்கு வர்றோம். உள்ளே நுழையும் போதே இன்னிக்கு கோபமில்லாம இருக்கணும்னு வேண்டிக்கங்க. வீட்டு கோபத்தை ஆபீஸ் கொண்டாராதீங்க. வீடுன்றது பிரச்சினையான விஷயம் தான். எல்லார் வீட்லயும் பிரச்சினை இருக்கத்தான் செய்யுது. அந்த பிரச்சினை அங்க இந்த பிரச்சினை இங்க. அப்படி வெச்சுக்கிட்டா நல்லா இருக்கும்.''

ஆனால் மாலதியால் அப்படி இருக்க முடியவில்லை. அவள் புருஷன் அன்று காலை எட்டே முக்கால் மணிக்கு 'பளீர் பளீர்' என்று கன்னத்தில் அடித்து. கீழே தள்ளி



இடுப்பில் எட்டி உதைத்திருந்தான். இது மாலதியின் அம்மாவின் முன்னாலேயே நடந்தது. மாலதியின் அம்மாவுக்கு அந்த வீட்டில் இருக்க முடியவில்லை. மாப்பிள்ளையைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அவள் பெட்டி படுக்கையோடு பத்தே கால் மணிக்கு மாலதியோடு மாலதியின் அலுவலகம் வந்துவிட்டாள்.

கணேசமூர்த்தி இதை ஜன்னல் வழியே பார்த்தார்.

அவர் மாலதியின் வாழ்க்கை பற்றி கேள்விப்பட்டிருந்தார். இன்று அவள் இறங்கிய விதம் அவருக்கு அவள் மீது அனுதாபத்தைக் கொடுத்தது. வீட்டு வேதனையோடு ஒருவர் அலுவலகத்தில் வந்து வேலை செய்வது எவ்வளவு கடினம் என்பது அவருக்குத் தெரியும்.

ஏனெனில், இன்று காலை அவர் வீட்டிலும் ஒரு சண்டை நடந்தது.

''அரசாங்கத்தில வேலை செய்துகிட்டு லஞ்சம் வாங்கத் தெரியலைன்னா, நீயெல்லாம் ஒரு மனுஷனா?'' அவர் மனைவி கேட்டதற்கு அவர் பதில் சொல்லவில்லை.

லஞ்சம் வாங்கச் சொல்லும் மனைவியை அவருக்குப் பிடிக்கவில்லை.

## 12

சமூக மரபுகள் மாற, பொருளாதாரம் காரணம். வீட்டோடு அடங்கியிருக்கும் பெண்கள் வேலைக்குப்போக, காசு பணமே காரணமாயிற்று. பெண்கள் வேலை செய்தால் கூடுதலான சவுகரியங்கள் பெறலாமென்று ஆண்கள்

நினைத்தார்கள். 'அதற்காகவே பெண்களை அவர்கள் படிக்க வைத்தார்கள்.

''எஸ்.எஸ்.எல்.ஸி, படிச்சுட்டு, டைப்பு, ஷார்ட் ஹேண்டுன்னு ஏதாவது கத்துகிட்டியானா, கவர்மெண்ட்ல ஏதுனா வேலை கிடைக்கும். பத்துமணி ஆபீஸ், சனி, ஞாயிறு லீவு. பொம்பளைங்களோட பொம்பளையா போனது, வந்தது தெரியாம சம்பாதிக்கலாம்.

பிள்ளை பேறுக்கெல்லாம் கவர்ன்மெண்ட்ல நிறைய லீவு தர்றான். கால் வலிக்குது, கை வலிக்குதுன்னா அப்படியே ஆபீஸ்ல ஒரு ஓரமா உக்காந்துக்கலாம். ஒண்ணும் பெரிசா கேக்கமாட்டாங்க. பொம்பளைங்களுக்கு அரசாங்க உத்யோகம்தான் அம்சம்.''

அவளுடைய இளமையில் சொல்லப்பட்டது.

மாலதி தன் இருபது வயதில் முதல் சம்பளமாய் ரூபாய் எழுநூற்றி எண்பது வீட்டில் கொண்டு வந்து கொடுத்த போது, வீடு அதை வாங்கி சில கடன்களை அடைத்தது. மெல்ல மெல்ல சில வசதிகள் செய்து கொண்டது. ஏழு வருடங்கள் மாலதி தனக்கென்று ஒரு ரூபாய்கூட எடுத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையும் வீட்டிற்கே கொடுத்தாள்.

''ஆபீஸ் வேலை ஆபீஸ் வேலைன்னு உட்காந்திராதடி சமைக்க கத்துக்கோ''

வாழ்க்கையில் அவள் பொறுப்பு இரட்டிப்பாகியது. அவள் சமைக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். வருவாய்த் துறை கணக்கையும் அப்பழுக்கன்றி எழுத வேண்டும்.

''நல்ல டிபார்ட்மெண்ட்ல ஜாயின் பண்ணியிருக்கீங்க. பி.காம் படிங்களேன். பிரமோஷன் சுலபமா வாங்கலாம். இப்பல்லாம் தமிழில் பி.காம் எழுதலாம்மா. மொள்ள மொள்ள ஒரு நாலு வருஷத்தில் பாஸ் பண்ணிடுவே.''



''அடியே எதிர்வீட்டு சின்னப் பொண்ணு ஒரு நெத்திலி குழம்பு வைக்கிறா பாரு. அவ்ளோ நல்லாருக்கு. என்னா கை வேலை, எவ்வளவு பின்னலு, எத்தினி விதமான கோலம்? அவங்க ஆத்தா எல்லாருக்கும் கூப்பிட்டு கூப்பிட்டு காமிக்கறா... உன்னைவிட ஒரு வயசு சின்னவ. ஆனா, வரன் மேல வரன் வருது'' அம்மா சொன்னாள்.

''லேடிஸ்லாம் டக்குனு அஞ்சே காலுக்கு கிளம்பி போயிடணுமா? ஒன் அவர் இருங்கோ. நாங்கள்லாம் ஆம்பளைங்க ராத்தங்கி வேலை செய்யறோம். நீங்ககூட ஒரு மணி நேரம் வேலை செய்யக்கூடாதா? நம்ம டிபார்ட் மெண்ட்க்கு லேடிஸ் வேணாம்பா.'' அலுத்துக் கொண் டார்கள்.

மாலதி என்கிற அந்த பெண் மீது சுமை மேல் சுமை யாய் விழுந்து அழுத்தின. மாலதி நெத்திலி மீன்குழம்பு வைக்கக் கற்றுக் கொண்டாள். மருதாணியில் படம் வரைய கற்றுக் கொண்டாள்.

எதிர்வீட்டு சின்னப் பொண்ணைப் போல் கோலம். கை வேலைகள் கற்றாள். அலுவலகத்தில் சொன்னது போல பி.காம். தமிழ் சேர்ந்தாள். வருஷம் தவறாமல் பரீட்சை எழுதினாள். ஒரு மணி நேரம் தாமதமாய் அலுவலகம் விட்டுக் கிளம்பினாள். ஒரு மணி நேரம் முன்னதாக வந்து வேலை செய்தாள்.

அப்பாடா என்று நிம்மதியாய் ஒருநாள்கூட வாழாமல் இலக்கில்லாமல் போராடிக் கொண்டிருந்தாள். எதிர் வீட்டு சின்னப் பொண்ணுக்கு தமிழ்கூட சரியாக படிக்கத் தெரியாது. அவளைப் பாராட்டிய வாய், இவள் பி.காம். முடித்ததைப் பாராட்டாது.

''படிச்சு முடிச்சுட்டியா. இனிமே படிக்க வேணாமா? ஒழிஞ்சுது போ. என்னால முடியலை. கொஞ்சம் கூடமாட வேலை செய்.''

''இப்பவும் செய்துகிட்டு தானேம்மா இருக்கேன்''

''மொத்த சமையலும் பாத்துக்கடி, நாளைக்கு கல்யாணம் ஆகிப்போனா, நீ தானே எல்லாம் செய்யணும் வயசு ஏறிக்கினே போவுதே''

அவளுக்கு ஆதரவாய் குரல் கொடுத்தவர் உலகில் மிக குறைவு. அலுவலகத்தில் இவளைப் போலவே பாவப் பட்ட சில பெண்கள் இருந்தார்கள். முப்பத்திரண்டு வயது வைதேகி திருமணத்திற்கு காத்திருந்தாள். முப்பது வயது ஃபிலோமினா திருமணமே வேண்டாமென்று முடிவு செய்திருந்தாள். இருபத்தி ஒன்பது வயது வரலட்சுமி வரன் எதிர்பார்த்திருந்தாள்.

''கல்யாணம் வேணான்டி. நம்ம டிபார்ட்மெண்ட்ல ஒவ்வொரு லேடியும் படற அவஸ்தைய பார்த்தா. கல்யாணம் கட்டினவ வேலைக்கு போகக் கூடாது. வேலைல இருக்கிறவ கல்யாணம் கட்டக்கூடாது.''

''நம்ம சூப்பிரண்டெண்டென்ட் மரகதம்மாவ பாரு. காலைல நாலரை மணிக்கு எழுந்திருக்காங்களாம். ராத்திரி படுக்கறதுக்கு பத்து பத்தரை ஆயிடுதாம். புருஷன் கோவக்காரன். பசங்க சரியில்ல. டிபார்ட்மெண்ட்ல, ஏகப்பட்ட கேள்வி-பதில் நாப்பத்தியேழு வயசுக்கு 'தொண்டு கிழமா' ஆயிட்டாங்க்.

மத்தியானம் சாப்பிட்டு கைய அலம்பின உடனே லேடிஸ் ரூம்ல போய் தூங்கிடறாங்க. அந்த ஒரு மணி நேரம் ஒண்ணரை மணி நேரம்தான் சந்தோஷமே அது பொறுக்காம எவனோ மொட்டைக் கடுதாசு எழுதிப் போடறான்,''

''கல்யாணம் பண்ணிக்கலாம்' ''வரலட்சுமி தொண் டையைச் சரி பண்ணிக் கொண்டாள்.



''புருஷன் கொஞ்சம் புரிஞ்சு நடக்கிறவனா இருந்தா ரொம்ப நல்லா வாழ்க்கை நடத்தலாம்.''

''கவிதா புருஷன் ரிசர்வ் பேங்க். பெசன்ட் நகர்ல இருந்து புருஷன்கொண்டு வந்து,மோட்டர் பைக்லவிட்டுட் டுப்போறார். திரும்ப அஞ்சரை மணிக்கு கூட்டிட்டுப் போறார், அவரே வாஷிங் மெஷின்ல துணியைப் போட்டு, துவைச்சு, உடுத்திகிட்டு வர்றார், காய்கறி நறுக்கித் தர்றாராம். அவங்க மாமியாரும் வேலைக்குப் போறதால, குழந்தையை இவ அம்மா வீட்ல விட்டுடறா ளாம்.''

''பிரச்சினை இருக்கதான் செய்யறது. காசு, உடம்பு படுத்தறது, ஆபீஸ் வேலைப் பளு அப்படின்னு பிரச்சினை யெல்லாம் வரும். நாங்க அதை சண்டையா மாத்திக்குற தில்ல. கோபமா பேசறதில்ல. இதுக்கு காரணம் எங்க மாமியார். தான் புருஷன்கிட்ட ரொம்ப கஷ்டப்பட் டோங்கிறதால, என்னை எங்க வீட்டுக்காரர் எதுனா சொன்னாலும், டக்குனு ஒரு வர்த்தையில அடக்கிடு வாங்க.

எங்க வீட்டுக்காரருக்கும் கோபப்படக்கூடாதுன்னு உடனே புரிஞ்சுடும். ஸாரிம்மா தெரியாம கத்திட்டேன்னு அடங்கிடுவாரு.''

ஆனால், இது ஆயிரத்தில் ஒரு குடும்பம். இல்லை லட்சத்தில் ஒரு குடும்பம். இதுபோல தனக்கும் அமையும் என்று ஏங்கி திருமணத்தில் மாட்டிவிடக்கூடாது. இப் போதே வீட்டில் வேலைகள் அதிகரித்திருக்கின்றன. திரு மணம் ஆனால் இன்னும் வேலைப் பளு அதிகரிக்கும். திரு மணம் வேண்டாம் என்றிருப்பதே உத்தமமான காரியம்.

ஒரு தவறான ஆள் புருஷனாக வந்துவிட்டால். மொத்த வாழ்க்கையும் சிரமமாக போய்விடும்.

வாழ்க்கையைப் பற்றி பல்வேறு அலசல்கள் அவளுக்குள் ஓடிக்கொண்டிருக்க, அவளுக்கு திருமணம் நடந்தது.

''வேலை செய்யற பொண்ணுதான் வேணுமாம். அதுவும் கவர்மெண்ட்ல வேலை செய்யற பொண்ணுதான் வேணுமாம். என்ன முடியுமோ அதை பண்ணச் சொல்றாங்க. இருநூறு முன்னூறுபேர் மனுஷாள் வருவாங்க. எல்லோருக்கும் சாப்பாடு போடுங்கன்னு மட்டும் சொன்னாங்க.''

கல்யாணம் மட்டும்தானே, மற்றபடி பெரிதாய் வரதட்சணை ஏதுமில்லையே என்று வீடு ஒத்துக்கொண்டது.

அந்த வரனுக்கு நகரத்தின் வெளியே உள்ள ஒரு கம்பெனியில் வாரிகள் உற்பத்தி செய்யும் பிரிவில் ஸ்டோர் கீப்பர் வேலை. நல்ல கம்பெனி. நல்ல சம்பளம். ஆனால், இரவு, பகல் என்று டியூட்டி வரும். 'ஓவர்டைம்' வரும். அந்தமாதிரி கம்பெனியில் உள்ளவர்களுக்கு அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்கள் மனைவிகளாதல் நல்லது.

புருஷன் எப்போதும் அருகில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வராது. வாழ்க்கை போரடிக்கிறது என்ற அலுப்பு வராது. அதேசமயம் அவசியமானால் லீவு போட்டுக்கொள்ள முடியும் என்று அவர்கள் பக்கத்து நியாயம் சொன்னார்கள்.

இன்னொரு பிரமோஷன் எதிர்பார்ப்பதால் திருமணத்தை சற்று தள்ளி வைத்துக்கொள்ளச் சொன்னார்கள். நான்கு மாத இடைவெளி கொடுத்து திருமண தேதி குறிக்கப்பட்டது.

திடீரென்று அவர்கள் வீட்டிலிருந்து யாராவது வருவார்கள். ''எத்தினி சவரன் போடப்போறீங்க?'' என்று கேட்பார்கள்.



''அந்த நேரம் எவ்ளோ முடியுமோ அவ்ளோ போடறம்.''

''எவ்வளவுன்னு சொல்லுங்க''

''பத்துன்னு வெச்சுக்கங்களேன்''

''இது ரொம்ப குறைச்சல்''

''பாக்கு வெத்தல மாத்தறபோது ஒண்ணும் வேணாம் ஒண்ணும் வேணாம்னு சொல்லிட்டு. இப்ப ரொம்ப குறைச்சல்னா என்ன அர்த்தம்?''

''பட்டும் பீதாம்பரமுமா உடுத்திக்க வேணாம்னா, துணியே இருக்கக் கூடாதுன்னு அர்த்தம்? ஒரு நைலக்ஸ் புடவையாவது கட்டியிருக்கணுமில்ல. நீங்க சொல்ற பத்து சவரன், துணியே இல்லாதமாதிரி''

''என்னா சொல்றீங்க. நூறு சவரன் போடணுன்றீங்களா?''

''நாப்பது சவரனாவது போட வேணாமா?''

''நாப்பதா, நாப்பதா, நாப்பது சவரனா?'' வீடு பதறியது. 'என்னடி இது பகல் கொள்ளை' என்பதுபோல் அலை பாய்ந்தது.

''சரி கொஞ்சம் குறைச்சுக்கங்க''

பத்து என்பது பதினைந்து ஆகியது.

''சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து திருவொற்றியூர் போயிட்டு இருக்கான். ஏழேகால் ஷிப்ட்டுக்கு அஞ்சே முக்கால் பஸ் புடிக்கணும். ஒரு மோட்டார் சைக்கிள் கொடுத்தீங்கன்னா உங்க பொண்ணுக்கு சவுகரியமா போயிடும்.''

''அவனுக்கு ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்தா எங்க பொண்ணுக்கு சவுகரியமா போய்டுமா?'' இவள் வீடு இரைந்தது.

''ஆமா, வீட்டுக்காரன் அஞ்சே முக்காலுக்குப் போகணும்னா, இவ நாலரை மணிக்கு எழுந்திரிக்க வேணாமா? வண்டி இருந்தா அவன் லேட்டா போவான். இவளும் லேட்டா எழுந்திரிப்பா, ஏதோ உங்க பொண்ணு சவுகரியத்துக்காக சொன்னேன். கேட்டா கேளுங்க, கேட்காட்டி போங்க.''

அவள் தன் கைக்காசு போட்டு, வண்டிக்கு முதல் தவணை கட்டி, மற்ற கடனும் அவளே ஏற்று வண்டியின் நிறம் கூட பார்க்காமல் அவனிடம் கொண்டு போய் கொடுக்கச் சொன்னாள்.

வண்டியோடு வந்து நன்றி சொல்வான் என்று மெல்லியதாய் ஆசைப்பட்டாள்.

அவன் வரவுமில்லை. அவனிடம் நன்றியுமில்லை.

திருமணத்திற்கு முன்பே புருஷனாய் வரப் போகிறவன் பற்றி ஒரு மோசமான அபிப்ராயம் அவளுக்குள் படர்ந்துவிட்டது. பதிமூன்று வருடங்கள் ஆனபின்பும் அந்த அபிப்ராயம் மாறவில்லை.

புருஷனால் ஆண்கள் பற்றி வெறுப்பு ஏற்பட்டது. ஆண்கள், மீது அலட்சியம் ஏற்பட்டது ஆண்கள் ஒரு அருவருக்கத்தக்க பிறவிகள் என்கிற நினைப்பே மேலோங்கியது.

அந்த எண்ணத்தில் அந்த கோபத்தில் அவளுடைய மேலதிகாரியை ஒரு அல்ப விஷயத்திற்காகத் திட்டித் தீர்த்தாள். அவன் அதிர்ந்து போனான்.

அவனுக்கு பெண்கள் பற்றி அவ்வளவு மரியாதையான எண்ணம் இல்லை.



# 13

கணேசமூர்த்தியின் வீட்டுப் பெண்கள் மிருதுவானவர்கள். எளிமையானவர்கள். புதிய உடை கட்டிக் கொண்டால், நிறைய பூ வைத்துக்கொண்டால் யாராவது ஏதாவது பரிசளித்தால், அதீதமாய் வெட்கப்படுகிறவர்கள் அந்த வெட்கம் மிக அழகாக இருக்கும். ''அட, பட்டுப் புடவையா. கொஞ்ச நேரத்துக்கு யாருன்னே எனக்கு புரியல போயேன். நம்ம வீட்டுக்கு யாரோ விருந்தாளிங்க வந்திருக்காங்கன்னு நெனச்சிகினு சட்டை பட்டன் சரியா இருக்கா, தலைமுடி சரியா இருக்கான்னு சரிபண்ணிகிட்டு இருந்தேன். கிட்ட வந்து பார்த்தாதான், அது நம்ம வீட்டு பசுமாடுன்னு தெரியுது. இன்னும் கிட்ட வா. நல்லா பார்த்துட்டு எப்படி இருக்குனு சொல்றேன்''

அப்பா கூப்பிட, அம்மா தூத்தெறி, என்று கத்துவாள்.

''நான் புடவைய சொன்னேன்டி''

அம்மா சமையலறையிலிருந்து நடுஹாலுக்கு வருவதற்கு பத்து நிமிடம் எடுத்து கொள்வாள்.

பன்னிரெண்டு வயசு அக்கா, பத்து வயது கணேசமூர்த்தி, எட்டு வயது தங்கை எல்லோரும் அம்மாவின் வெட்கத்தை கைகொட்டி ரசிப்பார்கள்.

'பெண் அதிர்ந்து பேசக்கூடாது. உரத்து கத்தக் கூடாது. பெரிதாய் சிரிக்கக் கூடாது. வீட்டிலேயே இதை பழகிவிடு. அப்போதுதான் வெளியிலும் அடக்கமாய் இருக்க முடியும்.'

பெண்ணைப்பற்றி நிறைய பேர் அக்கறைப்படுகிறார்கள். ஒரு பெண்ணை எல்லோரும் கூர்ந்து பார்க்கிறார்கள். அதனால், அலட்டல் இல்லாமல் இருப்பது அவசியம்.

பெண்ணை வைத்து வீட்டை எடை போடுகிறார்கள், அதனால், அமைதி என்பது முக்கியம். பெண் அடிமை அல்ல. ஒரு பெண் அழுதால், நல்ல ஆணின் உடம்பு நடுங்கும். மனம் பேதலிக்கும்.

வேறு எதுவும் செய்யத் தோன்றாது. அவள் அழுகையை தீர்ப்பதே வேலையாகும்.

அம்மா அழுதால், அப்பாவுக்கு தாங்காது, அக்கா அழுதால், அவனுக்கு தாங்காது, தங்கை அழுதால், யாருக்கும் தாங்காது.

வீடு அன்பால் கட்டிக்கிடந்ததுதான் தப்பாய் போயிற்று. அனல் வீசுகிற வார்த்தைகளை கேட்கிற போது திகைப்பு தாக்கியதே தவிர, திருப்பி பேசத் தெரியவில்லை.

ஆனால் அவள் அனலில் பிறந்து அனலாய் வளர்ந்தவள். அவள் அப்பாவுக்கு ஐம்பத்திரண்டு வயதாகும் போது, ஆளும்கட்சி இளைஞரணி தலைவரானார்.

''ஏன்யா, கட்சில வேற ஆளா இல்ல. மேடை ஏறிச் செல்லவே மூச்சு வாங்குது. இவனப்போயி இளைஞரணி தலைவரா போட்டுருக்கீங்களே?''

''எவன் அப்படி சொன்னவன்? இளம் பரிதியா? வண்டி எடு. நான் இளைஞன்னு அவனுக்கு காட்டறேன்.''

ஒரு வீட்டிற்குள் நுழைந்து ஒரு பொருளைக்கூட உருப்படியாக விடாமல், உடைத்தெறிந்தார்.



''நான் மூச்சு வாங்கறவன். என் வேலைய காட்டிட்டேன். நீ மூச்சு வாங்காதவன். என் வீட்டு வாசப்படிய மிதி பார்க்கலாம். கால் இருக்காது. கதவைத் தொட்டே கை இருக்காது. உள்ள வந்தே தலையே இருக்காது.

அடிச்சா பதிலுக்கு அடிக்கறவன்தான் இளைஞன். அவன்தான் தலைவன்.'

எதிர்த்தவன்-காலில் விழுந்து மன்னிப்பு கேட்க, உடைத்த எல்லா பொருட்களையும் அவர் வாங்கிக்கொடுத்தார். அவனைத் தனது வலது கையாக்கிக் கொண்டார்?

''அடி கேடு கெட்டவளே. நீ யாரென்று எனக்குத் தெரியாதா?'' சந்துமுனை பொதுக்கூட்டத்தில் ஆவேசமாய் பேசினார்.

''உனது அரசியல் வாழ்க்கை ஆரம்பித்ததே என்னால் தானேடி. உனக்கு குதிரையேற கற்றுக்கொடுத்ததே நான்தானேடி. இன்றைக்கு எம்.பி. ஆகிவிட்டால், எல்லாம் தெரிந்தவள் ஆகிவிடுவாயா?

உனது அறுபத்தியொன்பதாம் வருடத்து அந்தரங்கத்தை அவிழ்த்து விடட்டுமா'' அவர் தொடர்ந்து பேச, கட்சிக்காரர்களே தலையிலடித்துக் கொண்டார்கள்.

''அண்ணே. போதும்ணே. பப்ளிக் நெளியுது'' என்று கண்டித்தார்கள்.

அவர் வீடு எதையும் கத்தித்தான் பேசும்.

''ஏய், குடிக்க தண்ணி கொடு'' [என்று சின்ன விஷயத்தையும் அதட்டும்.

''அதென்ன, மூணும் பொண்ணா பெத்து வெச்சிருக்கே. ஒரு ஆம்பளப்புள்ளைய கடன் வாங்கியாவது வளர்க்கக் கூடாதா?''

''எதுக்கு கடன் வாங்கறது? நான் பெத்த மூணு பொண்ணுங்களும் பத்து ஆம்பளைக்குச் சமானம். என் ரெண்டாவது பொண்ணு சோடா பாட்டில் அடிச்சிருக்கா தெரியுமா?

வீட்டுக்குள்ள பூந்து என்னைக் குத்திட்டுப் போயிட்டான். குத்தின கத்திய எடுக்காத, பின்பக்க சுவரு தாண்டி, அடுத்த வீட்டுக்கு எடுத்துட்டு போயி, அங்கிருந்து அடுத்தத் தெரு போயி லாரி வெச்சு ஆஸ்பத்திரிக்கு கொண்டுகிட்டு போயிட்டாங்க. கார்ல போனா கண்டு பிடிச்சுடுவாங்கன்னு. மணல் லாரியில படுக்க வெச்சு ஆஸ்பத்திரில கொண்டுகிட்டு போயிட்டாங்க.

என்னை லாரியில ஏத்தற வரைக்கும் என் மூத்தப் பொண்ணு வாசல்ல நின்னு, ஐயோ யாராவது போலீஸ்ல சொல்லுங்களேனு, போலீஸ்ல சொல்லுங்களேனு அழுது டிராமா போட்டிருக்கா.

நான் ஆஸ்பத்திரி போயிட்டேன்னு போன் வந்ததும், கொதிக்கிற எண்ணெய் எடுத்து மூணு பேர் மூஞ்சுல கொட்டியிருக்கா.

போலீஸ் வந்தபோது ஜாக்கெட் புடவையெல்லாம் கிழிச்சுகிட்டு நின்னு, ஆறு பேர் கெடுக்க வந்தாங்க, எங்கப்பா தடுக்க வந்தாரு, அவரைக் கத்தியில குத்திட்டாங்க அப்படின்னு கதை விட்டிருக்கா.

தப்பிச்சுக்கறதுக்காக கொதிக்கிற எண்ணெய அவங்க மூஞ்சில ஊத்திட்டேன்னு ரீல் விட்டிருக்கா. உங்க ஊட்டுப் பொண்ணு செய்யுமாய்யா? பொண்ணு இருக்கட்டும். உங்க ஊட்டுப் பையன் செய்வானா அதை. நம்ம பொண்ணுங்க செய்யும். அவங்க வளர்ப்பு அப்படி.

எங்களுக்குள்ள சண்டை போட்டுக்குவோம். எங்க கிட்ட சண்டைக்கு வந்தா ஒண்ணாயிடுவோம்.''



ஆனால், அவர்கள் வீட்டு சண்டையும் உச்சகட்டமாகத்தான் இருக்கும். சோடா பாட்டிலும், கொதிக்கிற எண்ணெயும் தவிர, மற்ற எல்லாவித வேகமும் அந்தச் சண்டையில் இருக்கும்.

''நீ பதவியில இருக்கிறபோதே கல்யாணம் பண்ணி வெச்சுடுப்பா. உச்சத்தில் இருக்கிறபோதே எல்லா பொண்ணுக்கும் நல்லது பண்ணி முடிச்சுடு.''

இளைஞரணி தலைவரின் அம்மா கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர் உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார்.

கல்லூரியில் முதல் வருடம் பி.ஏ. பொருளாதாரம் படித்துக் கொண்டிருந்த சாமுண்டீஸ்வரிக்கும், கணேசமூர்த்திக்கும் திருமணம் நடந்தது.

''பதினெட்டு வயசுதான உனக்கு?'' அவளுக்கு மேக்-அப் போட்ட அழகியல் பெண்மணி கேட்டாள்.

''யப்பா. முழு பொம்பளையா இருக்கியே. எப்படி?'' வியந்தாள்.

கணேசமூர்த்தி சருக்கினதும் அங்குதான். வளமான உடம்பு, தமிழறிந்த குடும்பம், செல்வாக்குள்ள பதவி, செலவுக்கு அஞ்சாத செல்வம் என்று யோசித்து தலையசைத்தான்.

எதுவுமில்லை என்பது இரண்டு மாதத்தில் தெரிந்தது.

''என்னா மொய்யி எழுதுனாங்கப்பா. கூப்பிட்டு, கூப்பிட்டு காசு வாங்கினாரே, டேய், ஆயிரம் ரூபா கொடுறா, டேய் ஐயாயிரம் ரூபா குடுறா அப்படின்னு காசு வாங்கினாரே.''

''நீ இன்னா பண்ணிட்டே. ஆயிரமும் ஐயாயிரமும் கேக்கறதுக்கு?''

''எதுனா கேட்டா, நான் ஜெயிலுக்குப் போனேன், ஜெயிலுக்குப் போனேன்றே, கொலைக் கேசுல ஜெயிலுக்கு போனவன்லாம் என்ன தியாகியா? கட்ட பஞ்சாயத்து பண்றவனைக் கட்சி தலைவனாக்கிட்டு, நமக்கில்ல அசிங்கமா இருக்குது. அவன முதல்ல இறக்குங்க தலைவரே.''

நூறு பேர் மனு கொடுத்து இறக்க வைத்தார்கள்.

கல்யாணம், கல்யாணம் என்று அவர் பலரிடம் கடன் வாங்கியிருந்தார். எல்லா கடனுக்கும் எளிதாய் கை விரித்தார்.

''கல்யாணத்துக்கு கடன் வாங்குனா, திருப்பி கொடுப் பாங்களா? உங்கிட்ட துட்டு வாங்கி நான் என்ன வியா பாரமா பண்ணேன்? செலவு பண்ணிட்டேம்பா. செலவு பண்ணிட்ட துட்ட கேக்கறே?

மேடையில தலைவருக்கு சால்வை போட்டா திருப்பிக் கேட்பியா? அசிங்கம் பண்ணாத. எடத்த விட்டுபோயிடு.''

பட்டை நாமம் சாற்றினார்.

ஊர் அவரைப் பரிகசித்தது. அதைப்பற்றி அவர் கவலையே படவில்லை.

''ரெண்டு கிலோ கோழி கொண்டாந்திருக்கேன். எதுனா பண்ணிப் போடும்மா. அரை கிலோ சாப்ஸ் போடு. அரை கிலோ குழம்பு வை. மிச்சம் தேங்கா அரைச்சு போட்டு குருமா செய்.

''மாமா இன்னிக்கு சனிக்கிழமை இல்லியா?''

''அதனால என்ன?''

''இன்னிக்கு போய் கவுச்சி சாப்பிடறீங்களே?'' கணேசமூர்த்தி ஆச்சரியத்தோடு வினவினான்.



''நான் என்ன பண்றது...இந்தக் கோழி சனிக்கிழமை தான் செத்துப் போச்சு.''

''என்ன சொல்றீங்க மாமா.''

''சனிப்பொணம் தனியாப் போவாதுன்னுவாங்க.''

''அதான் தேங்கா மசாலா குருமாவோட போவுது.'' அவனுடைய மாமனார் வாய்விட்டு சிரித்தார்.

கணேசமூர்த்திக்கு வருத்தமாக இருந்தது.

''இனிமே நம்ம வீட்ல சனிக்கிழமை மாமிசம் செய்யக் கூடாது'' மனைவியிடம் சொன்னான்.

''செய்தா என்ன தப்பு. இதெல்லாம் மூடநம்பிக்கை.' அவள் எதிர்த்துப் பேசினாள்.

''இது வெறும் நம்பிக்கை. இதுல எந்த மூடத்தனமும் இல்லை. தினம் மாமிசம் சாப்பிடாம சனிக்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் தள்ளி வைக்கறது நல்லது. அப்ப ஞாயித்துக்கிழமை சாப்பிடற மாமிசம் நல்ல செரிமானம் ஆவும்.''

''எங்களால தினம் கறி சாப்பிடாம இருக்க முடி யாது.'' அவள் கத்தினாள்.

அவன் அவளைக் கோபித்துக் கொண்டான்.

அவன் மாமனார் எழுந்து வந்து அவன் கன்னத்தில் அறைந்தார்.

''என் பொண்ணை எதிர்த்து பேசினே...கைய காலை உடைச்சிருவேன்'' எச்சரித்தார்.

கணேசமூர்த்திக்கு மனைவி பற்றிய மதிப்பு செத்துப் போயிற்று.

அவன் மனைவிக்கு அவனைப் பற்றிய அலட்சியம் அதிகரித்தது.

அவன் வீட்டுப் பெரியவர்களிடம் முறையிட்டான்' அறிவுரை சொல்ல வந்த எல்லோருமே அவமானப்படுத்தப் பட்டார்கள்.

''உங்கப்பாவ நியாயம் சொல்ல இட்டாறியா. அந்தாள் மூணு தடவை என் மார்ல கை வச்சிருக்கான், தெரியுமா. அவனை வீட்டுக்கு கூட்டிவா கேக்கறேன்.'' அவன் மனைவி கத்தினாள்.

அவன் அடங்கிப் போனான்,

''கூறாமல் சன்னியாசம் கொள்'' என்று ஔவைக் கிழவி சொல்லியிருக்கிறாள். மனைவியின் நடவடிக்கை சரியில்லை என்றால் அவள் அடங்காப்பிடாரியாக இருந் தாள் என்றால் இல்லறத்திலிருந்து விலகிவிடு என்று அறிவுறுத்தியிருக்கிறாள்.

அவன் அவ்விதமே இல்லறத்திலிருந்தபடியே துறவியாக இருந்தான். அலுவலகத்தில் அவன் மதித்த ஒரு பெண்ணும் கூச்சலிட மனம் நொந்தான். மௌனமானான்.

உண்மை தானாக தெரிய வரட்டும் என்று அடங்கிப் போனான். தவறு அவன் மீது இல்லை என்று தெரிய வந்ததும் அவள் கைகூப்பி மன்னிப்பு கேட்ட விதம் அவனுக்குப் பிடித்திருந்தது.

# 14

அந்த சண்டைக்கு ஆபீஸ் ஆயுத பூஜை காரணமாக இருந்தது.



அந்த அலுவலகத்தில் ஒரு தமிழ்த்தாய் பொம்மை இருந்தது. ஏதோ ஒரு அதிகாரி, ஏதோ ஒரு அமைச்சரை சந்தோஷப்படுத்த இரண்டாயிரம் ரூபாய் செலவில் அப்படி யொரு பொம்மை செய்திருந்தார்.

ஆட்சி மாறியபிறகு அமைச்சரை அவமானப்படுத்த பொம்மையை அலுவலகத்தின் வாசலிலிருந்து எடுத்து பின்பக்கத் தோட்டத்தில் போட்டு விட்டார்கள்.

அது மூன்றடி உயரமுள்ள நிற்கும் சிமெண்ட் பொம்மை. இடக்கையில் சுவடியும். வலக்கையில் அருளா சியுமாய் பொம்மை அழகாக இருந்தது. மூக்கும் முழியு மாய் மின்னியது.

அதை எடுத்து சுத்தம் செய்தால், எவர் பொல்லாப் பேனும் வருமென்று ஊழியர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தார் கள்.

''அந்த கட்சி பொம்மைக்கு பாலிஷ் போடறியா? ச பாத்துக்கறோம்'' வெறுமே மிரட்டுவார்கள்.

ஆனால், அந்த ஆயுத பூஜையின்போது மாலதி அந்த பொம்மையை இரண்டு ஆட்கள் உதவியோடு தூக்கிக் கொண்டு வந்து ஒரு தனி மேஜையில் நிறுத்தினாள். சுத்தம் செய்தாள். வர்ணம் ஏற்றினாள். விலை குறைவான பள பளக்கும் துணியில் பாவாடை ஜாக்கெட் தைத்தாள்.

விக்ரஹம் உருப்பெற, பல பெண்கள் உதவிக்கு வந் தார்கள்.

''மைலாப்பூர் கிரி டிரேடில் கடைல நகைசெட் விக் கறாங்க. ரொம்ப நல்லாருக்கும்.'' யாரோ சொல்ல, போன் போட்டு விசாரித்தார்கள்.

பெண்கள் மட்டும் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று காசு போட்டார்கள். அளவு சொல்லி கிரீடம் வாங்கி வந்தார்கள்.

சிறிய வீணை பொம்மையை ஒரு பெண்மணி தன் வீட்டிலிருந்து எடுத்து வந்தாள்.

மாலதி காகிதக் கூழில் கரும்பு செய்தாள். நெட்டி அட்டையில் பெரிய தாமரைப்பூ செய்தாள்.

பெரிய தாமரைப்பூவில் அமர்ந்து, கரும்பு வில்லும் முக்கண்ணும், வீணையும், ஓலைச் சுவடியுமாய் ஒரு பெண் தெய்வம் உட்கார்ந்திருந்தது.

''அடடா, என்னா கற்பனைடி உனக்கு. சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி மூணு அம்சமும் இதில அடங்கிப் போச்சே.''

மாலதி, சவுரி வெச்சு, தலைப்பின்னல் பின்னி, சின்ன குஞ்சம் போட்டு நெடுக முத்து தெச்சுடுவோம்.''

ஒரு பெண்மணி சொன்னாள்''இடுப்பாண்ட புடவைய இறுக்க கட்டி, ஒட்டியாணம் போடு. அழகு தூக்கிடும்'' இன்னொருவள் அழகேற்றினாள்.

''அடடா ரொம்ப நல்லாருக்குங்களே'' ஒரு என்ஜினியர் வியந்தார்.

''என்கிட்ட ஒரு சுழல் பலகை இருக்கு. அதுல அம்மனை நிக்க வைச்சுடுங்க''

அம்மனை அசையாது நிற்க வைத்து, பத்து விநாடிக்கு ஒரு சுற்று வீதம் அவளை சுழல விட்டார்கள்.

ஒளி விளக்கில் சுழலும் அம்மன் சிரிப்பது போலவே இருந்தது. பின்னல் நெளிந்தது. தலைமுடி படர்ந்தது.

எல்லா பிரிவிலிருந்தும் ஆண்களும், பெண்களும் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்.

''அட, அழகாயிருக்கே'' கணேசமூர்த்தி, இரண்டு நாள் வெளியூர் கேம்ப் போய்விட்டு வந்து, பொம்மை பார்த்து பரவசமாய் வியந்தான்.



''யார் செய்தது? மாலதியா, டக்கர் மேட்டர்'' பாராட்டினான்.

எந்த பொம்மை, யாருடையது, எங்கிருந்து எடுத்து செய்யப்பட்டது என்று எதுவும் தெரியாமல் மாலதி வீட்டிலிருந்து கொண்டு வந்த பொம்மை என்று நினைத்துக்கொண்டான்.

அங்கு வழக்கமாய் வைக்கப்படும் கடவுட் சரஸ்வதி படமும் வைக்கப்பட்டிருந்தது. அதற்கும் மலர் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

''மாலதி'' கணேசமூர்த்தி உரக்க அழைத்தான்.

''உங்களது பின்பக்கத்தைவிட, முன்பக்கம்தான் அழகு அள்ளுது. பின்னல் அப்படியும், இப்படியும் அசையுது பாருங்க''

''என்ன சார் சொல்றீங்க,'' மாலதி கடுப்பானாள்.

கணேசமூர்த்திக்கு அதுபுரியவில்லை.

''பின்பக்கம் ரொம்ப அட்ராக்டிவா இருக்கு'' அவன் அவளை சுற்றிக் கொண்டு பொம்மையிடம் நெருங்கினான்.

ஒரு பத்து பேர் குபீரென்று வாய்விட்டு சிரித்தனர்.

நெல்முனையளவு கூட கணேசமூர்த்தியிடம் ஆபாசம் இல்லை. பொம்மையை தவிர, அவன் கண்ணுக்கு வேறெதுவும் தெரியவில்லை.

ஆனால், மற்ற ஊழியர்கள் மாலதியின் முன் புறத்தையும், பின்புறத்தையும் பார்த்தார்கள்.

பெண் ஊழியர்கள் சிடுசிடுத்தார்கள்.

''என்னடி உளறுறான்'' ஒருத்தி கத்தினாள்.

''இதுக்குதான் இந்த வம்புலயெல்லாம் நான் இறங்குறதே இல்ல· ஆபீஸுக்கு வந்தமா, போனமான்னு

போயிடறது. குனிஞ்சு நிமிந்து ஏதாவது செய்தா, நம்ம ஆபீஸ் ஆளுங்க அசிங்கமா பேசறாங்க. விடாதடி சுள்ளுனு ஒரு வார்த்தை கேளு'' இன்னொருத்தி தூண்டிவிட்டாள்.

''மிஸ்டர், என்ன கொழுப்பா?'' மாலதி சட்டென்று யுத்தம் துவங்கினாள்.

''ஏன் என்ன?'' கணேசமூர்த்தி திகைத்தான். வேறு யாரையோ சொல்கிறாளா என்று திரும்பிப் பார்த்தான்.

''இஷ்டத்துக்குப் பேசறீங்களே உண்டு இல்லனு பண்ணிடுவேன்''

''என்ன பேசிட்டேன்?''

''முன் பக்கத்தவிட, பின்பக்கம் அழகுன்னு பேசினியேப்பா, அத்த சொல்றாங்க''

''ஆமா, பின்பக்கம்தான் அழகா இருக்கு'' அவன் மறுபடி மாலதியை சுற்றிக் கொண்டு வந்தான்.

மாலதி கத்தத் துவங்கினாள். உடன் மூன்று பெண்கள் சேர்ந்து கொண்டார்கள்.

''உங்களது முன்பக்கத்தவிட, பின்பக்கம் அழகா இருக்குனு சொல்லிட்டய்யா. அது தப்பா அர்த்தம் ஆவுது. இந்த பொம்மை அவங்களது இல்ல. ஆபீஸுது. ஒரு ஆபீஸ்ல இப்படி உளறினா நல்லாவா இருக்கும். நூத்தி இருபத்தியஞ்சு லேடிஸ் வேலை செய்யற இடத்துல பார்த்து பேசணுமில்ல'' யாரோ விளக்கினார்கள்.

கணேசமூர்த்தியின் முகத்தில் பயம் பொங்கியது. ஆனால், பெண்கள் அதை உணராமல், உரக்க பேச ஆரம்பித்தார்கள்.

''பொறுக்கி பன்னாடைங்கள்லாம் ஆபீஸ்ல வேலை செய்ய வந்துடுச்சு'' ஒருத்தி பேச, ஆண்கள் வரிந்து கொண்டு சண்டைக்கு வந்தார்கள்.



''வரலக்ஷ்மி நிறுத்திக்கங்க. நான் அப்புறம் அசிங்கமா ஏதுனா பேசுவேன்''

''என்ன பேசுவே, என்ன பேசுவே? பேசிப்பாரு, செருப்பு பிஞ்சிடும்''

''ஏய் திமிராடி உனக்கு?...'' விதவை என்ற சொல்லை அவன் கேவலமாக பேசினான்.

நெருப்புக் கங்கில், பெட்ரோல் டின் கவிழ்ந்தது போல, குபீரென்று பெரிய சண்டை பற்றிக் கொண்டது.

''இதென்ன அரசாங்க ஆபீஸா? இல்ல பஜனை மடமா? என்னமோ பூ அலங்காரம் பண்ணிகிட்டு மினுக்கறீங்களே?'' பஜனை மடம் என்று அந்தாள் உச்சரித்த விதம் ஆபாசமாக இருந்தது.

தமிழில் பல நல்ல வார்த்தைகளை, கெட்ட வார்த்தைகளாக பொது மக்கள் மாற்றிவிட்டார்கள். இரட்டை அர்த்தம் தொனிக்கும்படி, நிறைய சிலேடைகளை உருவாக்கிவிட்டார்கள்.

மனிதர் தரம், இடம் இவைகளுக்கேற்ப, இந்த சொற்கள் அர்த்தம் மாறுகின்றன.

ஒரு பெண்மணி செருப்பைக் கழட்டி, உயரத் தூக்க, ஆண்கள் அந்த இடத்திற்கு ஓடி வந்தார்கள்.

''நீ அடிடீ பாக்கலாம். நீ அடிடீ பாக்கலாம்'' பேயாய் கத்தினார்கள்.

''தயவு செய்து சொல்றேங்க. நம்புங்க. என் தாய் மீது சத்தியமா சொல்றேன். நான் உங்களை தப்பா சொல்லல. நான் பொம்மையத்தான் சொன்னேன்''

''ச்சீ, போடா அந்தாண்ட. ஒழுக்கங்கெட்டவன்லாம் ஆபீஸுக்கு வந்து ஆட்டம் காட்டறானுங்க''

''என்னா கணேசமூர்த்தி. என்னா சொல்றா அந்த பொம்பளை? அவ்ளோ பெரிய வார்த்தை சொல்றாங்க. நீ ஏன் மண்ண நோண்டிக்கிட்டு இருக்கே?'' ஒருவர் எகிறினார். பெரிய அதிகாரிகள் விரைந்து வந்தார்கள். சமாதானப்படுத்தினார்கள். பகிரங்கமாய் கணேசமூர்த்தியை மன்னிப்பு கேட்க வைத்தார்கள்.

''யாருக்கு வேணும் இவங்க மன்னிப்பு. வீட்லதான் நிம்மதி இல்லன்னாலும் ஆபீஸ்லயும் இல்ல''

பெண்கள் கூட்டம் விதவிதமாய் அலுத்துக் கொண்டது.

கணேசமூர்த்தி திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தான்.

அரைகுறையாய் ஒருபூஜை நடத்தி, அவல்பொறி வாங்குவதே ஆயுத பூஜையின் முக்கிய அம்சம் என்பதாய் பண்டிகை முடிந்தது.

கணேசமூர்த்தி சம்பவத்தின் சுமைதாங்காமல், நடைப் பிணமானான்.

மூன்று நாள் லீவுக்குப் பிறகு ஆபீஸ் மறுபடியும் துவங்கியது. ஊருக்குப் போன பலபேர் திரும்பவில்லை, மிக குறைவான அலுவலர்களே வந்திருந்தார்கள்.

கணேசமூர்த்தி நேராக மாலதியை நோக்கிப்போனான். மாலதி மேஜை டிராயர்களைத் திறந்து கொண்டிருந்தாள்.

''நான் பேசுனது தப்புங்க மாலதி. ஆனா, எந்த அர்த்தத்தில் பேசினேன்னு நான் தெரியாம பேசிட்டேன். பூமித்தாய் சத்தியமா, இயற்கை அன்னை சத்தியமா, எங்க அம்மாமேல ஆணையா, என் மூத்தப் பெண் குழந்தைத் தலைமேல சத்தியமா நான் உங்கள தப்பா பாக்கவு



மில்ல, தப்பா பேசவுமில்ல. பத்துபேர் சிரிச்சதால அந்த வார்த்தை தப்பா போயிடுச்சு.

ஆனாலும் ஒரு லேடிய நூறுபேருக்கு முன்னால, தவறான அர்த்தம் வரும்படி பேசினது தப்புதான். திரும்பத் திரும்ப அந்த வார்த்தைய நெனச்சு பாக்கறபோது ஐயய்யோனு நான் பதறிப் போனேன்.

பத்து பேருக்கு முன்னாடி, பொண்டாட்டிகிட்ட கூட இத சொல்ல முடியாது. கூட வேலை செய்யற உங்கள பாத்து சொல்வேனா? உளறிட்டேன்.

உங்கள மனசார பாராட்டணும்னு நெனச்சி தப்பா உளறிட்டேன்.

ஒரு லேடிக்கு எவ்வளவு பெரிய அவமானம் அது. தயவு செய்து என்னை மன்னிச்சுடுங்க''

நடு அலுவலகத்தில், கணேசமூர்த்தி, கிஞ்சித்தும் வெட்கமின்றி அவள் காலில் விழுந்தான்.

அவள் எழுந்து விலகினாள். முகம் பொத்தி, 'ஐயோ' என்று கத்தினாள்.

'பத்து பேர் உங்கள பாத்து சிரிச்சாங்கள்ல. பத்து பேர் என்னை பாத்து சிரிக்கட்டும்.''

மற்றொரு முறையும் காலில் விழுந்தான். மாலதி ஆடிப்போனாள்.

# 15

மனிதர்கள் எல்லோருமே பொய் முகங்களோடு வளைய வரும்போது, வெளிப்பார்வைக்கு மரியாதையும்,

உள்ளே கேலி, கிண்டலுமாய் வாழ்பவர்கள் முகமன் சொல்லுகிறபோதே, ஆள் பற்றி வக்கிரமாய் சிந்திக்கிற வர்கள்.

இந்த கபட நாடகம் ஓரிரண்டு மனிதர்களிடம் வெளிப் பட்டுவிட, மற்ற மனிதர்கள் மீது சம்பந்தப்பட்டோருக்கு, கடும் அவ நம்பிக்கை வந்துவிடுகிறது. யாரை, எதற்கு நம்புவது என்று தெரியாமல் போகிறது.

வெளியுலகில் வேலை செய்யுமிடத்தில், இப்படி முன் பின்னாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் கணவன், மனைவி, தாய், தந்தை, சகோதர, சகோதரி போன்ற இடத்தில், இம்மாதிரியான உறவுகள், இவ்விதம் உள் ளொன்று வைத்து புறமொன்று பேசும் அவ நம்பிக்கை யான எண்ணம் இருப்பின், வாழ்க்கை மிக வேதனையாகி விடும்.

இந்த புருஷனை நம்பி எதுவும் செய்ய முடியாது என்று மனைவிக்கு ஒருநிலை ஏற்பட்டால், அதைவிட கொடுமை ஏதுமில்லை. இந்த மனைவியை நம்பி எதை யும் சொல்ல முடியாது என்றநிலை ஒரு புருஷனுக்கு ஏற் பட்டால், அவனுடைய இடம் தனிமைதான்.

மாறாய், இவர்களை நூற்றுக்கு நூறு நம்பலாம். எதையும் மனந்திறந்து பேசலாம். எது பற்றியும் ஆலோ சனை கேட்கலாம். கழுத்தை அறுத்தாலும் தன்னை காட்டிக் கொடுக்கமாட்டான் என்கிற எண்ணம் தோன்றி விட்டால், நல்ல மனிதரைத்தேடி ஏமாந்தவருக்கு, அங்கே உடனே ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிடும். அந்த பிடிப்பு காத லாக மாறவும் வாய்ப்பிருக்கிறது.

ஏனெனில், காதலென்பது ஒரு நம்பிக்கை. ஆழ்ந்த நம்பிக்கையின் இன்னொரு பெயர் காதல். நான் உன்னை ஒரு காலும் ஏமாற்றமாட்டேன் என்று எழுதப்படாத



சத்தியம் அது. என்னை நம்பலாம் என்கிற வாக்குறுதி அது.

இந்த நம்பிக்கை தகர்க்கப்பட்டால், இந்த வாக்குறுதி மீறப்பட்டால், அதற்கு பெயர் காதலல்ல. காதல் என்ற போர்வையில் நடக்கும் இன்னொரு கபட நாடகம்.

பல ஆண்களும், பெண்களும் இந்த கபட நாடகத்தில் தான் அதிகம் காயம் பட்டுவிடுகிறார்கள். ச்சீ என்ன வாழ்க்கையிது என்று வெறுத்து மிரண்டு போகிறார்கள். இனி மரணபிரியந்தமும் எனக்கு எவரும் வேண்டாம். நான் தனிதான் என்று சூளுரைக்கிறார்கள்.

ஒரு மனதைக்கூட ஜெயிக்க முடியவில்லை. ஒரு மனி தரிடம்கூட உண்மையாக இருக்க முடியவில்லை என்கிற வெறுப்புதான் வாழ்க்கையின் மிகப் பெரிய தோல்வி.

பணம், காசு, பட்டம், பதவி, அழகு, வித்தை போன்ற எந்த விஷயங்களில் ஜெயித்தாலும், நம்ப ஆளில் லாதபோது வாழ்க்கை நரகம்தான்.

மாறாய், நம்ப ஒருவர் கிடைத்து விட்டால், நம்பிக் கையான ஒரேயொரு சிநேகிதம் ஏற்பட்டு விட்டால், இந்த பூ உலகம், சம்பந்தப்பட்டவர்க்கு அர்த்தமுள்ளதாகி விடும்.

''என்ன, என்னா இது. ஒரு ஆபீஸ்ல கால்ல விழுந்து கிட்டு?'' அவள் சிடுசிடுத்தாள்.

''நான் உங்கள ரகசியமா லவ் பண்ணிகிட்டு இருந் தேங்க. மாலதி இன்னிக்கு என்ன கலர் புடவை. மாலதி இன்னிக்கு யாரோட பேசுது. எங்க உட்கார்ந்து சாப் பிடுது. என்ன மூட்ல இருக்குதுன்னு பாத்துக்குவேன். நீங்க சிரிக்கறத பார்த்து சந்தோஷப்படுவேன். நீங்க ரொம்ப அமைதியா இருந்திங்கன்னா, வருத்தப்படுவேன்.

ஏன், என்னாச்சுன்னு எனக்குள்ளயே கேட்டுக்குவேன். வேற யார்கிட்டயும் இது பத்தி பேசமாட்டேன்.

பேசி தப்பாயிடுச்சுன்னா? மாலதிய பாக்கக்கூட முடியாது போயிடுச்சுன்னா? உங்கள பிடிக்குன்ற விஷயத்த வெளிய சொல்லவே மாட்டேன், இப்படி மனசுக்குள்ள பூஜை பண்ற உங்களோட சண்டை போட்டுட்டமேன்னு ரொம்ப சிரமமாயிடுச்சு, மொத்தத்தியும் யோசனை பண்ணிப் பார்த்தா, யார் மேலயும் தப்பில்லன்னு தெரிஞ்சுது. இது விதி. போறாத வேளை.

நான் உங்கள தப்பா சொல்லலை அப்பிடிங்கற விஷயத்தை, உங்க மனசுல பதியும்படியா, உங்களுக்கு சந்தேகமே வராதபடியா நான் சொல்லியாகணும். அதுக்கு இது தவிர வேற வழி எனக்கு தெரியலை.

என்ன, இது அவமானம். ஆம்பளை, பொம்பளை கால்ல விழறது கேவலம். இருந்துட்டுப் போகுது. நான் மனசுக்குள்ள மாலதிய லவ் பண்றது நெஜமாயிருந்தா, இத செய்துட்டுப் போறது அப்படின்னு யோசனைபண்ணி, ஆபீஸ்க்குள்ள நுழைஞ்சேன். கால்ல விழுந்தேன். மறுபடி சொல்றேன், நான் தப்பா சொல்லலை. சொல்றது என்ன தப்பா நினைக்கக்கூட இல்லை. என் மனசு திறந்து சொல்லிட்டேன், இதுக்கப்புறமும் நீங்க தப்பா நெனைச்சா, அது என் தலையெழுத்து. என் விதி. வாழ்க்கைல, கணேசமூர்த்திக்கு யாருமே இல்லேங்கிற விதி. இருந்துட்டு போகுது.''

அவன் நகர்ந்து, தன் இடத்துக்குப் போய், அமர்ந்து கொண்டான். அவள் ஆடிப் போனாள். அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் மறுபடி நினைவுக்கு கொண்டு வந்து யோசித்தாள். திகைத்துப் போனாள்.

ஒரு சிறிய சீட்டில், எல்லாம் மறந்துவிட்டேன் என்று எழுதிக் கொடுத்தாள். அவன் நன்றி சொன்னான்.



உடனே பேசிக் குலாவ பயமாக இருந்தது. பரஸ்பர அவ நம்பிக்கை மட்டுமல்ல, சுற்றுப்புறச் சூழ்நிலையை உத்தேசித்தும் மௌனமாக இருக்க வேண்டியிருந்தது.

''என்னாங்கடா இது. ஆயுத பூஜை அன்னிக்கு வெட்டுப்பலி, குத்துப்பலியா பேசுனீங்க. இன்னிக்கு ஒரே காபிய ரெண்டு பேரும் குடிக்கறீங்க?'' அலுவலகம் கேள்வி கேட்கக் கூடும்.

இதை கருத்தில் கொண்டும் மௌனமாக இருக்க வேண்டியிருந்தது.

வாய்தான் பேசவில்லையே தவிர, கண்கள் பேசிக் கொண்டன.

''ஹலோ, குட்மார்னிங்'' அவள் பேசாது, கண்களை சுருக்கி விரிப்பாள். அவன் அழகாக தலையசைப்பான்.

''எப்படியிருக்கு என் புடவை?'' அவள் ஒரு சின்ன நெளிவில் கேள்வி கேட்பாள்.

''கடவுளே, கொல்றீங்க மாலதி'' அவன் மயக்கம் வந்தவனைப் போல நடிப்பான்.

''காலைல டிபன் சாப்பிட்டீங்களா?''

''ஆச்சு''

''காபி சாப்பிட கேண்டீன் போலாமா?''

''ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. இந்த போன் பேசிட்டு வந்துடறேன்''

அவள் காத்திருப்பாள். அவன் நகர, அவளும் நகர்வாள். கேண்டீனிலும் பேசிக் கொள்வதில்லை பத்து கஜ தூரத்தில் நிற்பார்கள்.

நெல் முனையும், யாருக்கும் அவர்களைப் பற்றி எந்த சந்தேகமும் வரவில்லை.

''இந்தாளு நல்லா கதை எழுதறான் இல்லே. படிச்சிருக்கீங்களா?'' ஒரு புத்தகம் காட்டுவாள்.

''இவனா, தலை நோவு. ஏதோ வந்தோம், போனோன்னு எழுதாம, முறுக்கி எடுப்பான்.''

''தப்பு. அப்படி பேசக் கூடாது'' அவள் பதிலுக்கு கண்டிப்பாள்.

''இந்தக் கதை மட்டும் படிச்சுப் பாருங்க'' புத்தகத்தை அவனிடம் தருவாள்.

அவன் பண்டக சாலைக்கு எழுது பொருட்கள் வாங்கப் போய், அங்கேயே அமர்ந்து அரை மணியில் படித்து முடித்து விடுவான்.

''எப்படி புத்தகம்?''

''சூப்பர்...''

''இன்னொன்னு படிக்கறீங்களா?''

''எங்கனா, போயி உட்கார்ந்து பேசலாமே?''

''என்னை வெட்டி பொலி போட்டுறுவாங்க. நான் உசுரோட இருக்கறது புடிக்கலியா? புடிக்கலேன்னா சொல்லுங்க. தூக்கு மாட்டிகிட்டு செத்துப் போயிடறேன்''

''தயவு செய்து இப்படி பேசாதீங்க மாலதி''

ரெண்டு மணி நேரத்திற்கு ஒரு வார்த்தை. அரை நாளுக்கு ஒரு வாக்கியம் என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

''உங்களுக்கு அதிரசம் கொண்டாந்திருக்கேன். என் சீட்ல இருக்கு'' என்று அவள் சொன்ன இரண்டு மணி நேரத்திற்கு பிறகு, அவள் சீட்டுப் பக்கம் போய், பிளாஸ்டிக் பையை வாங்கி வருவான். பகல் பொழுதில் நிதானமாய் சாப்பிடுவான்.



அன்று பிற்பகலில் டீ குடிக்கும் போது, ''ரொம்ப ரொம்ப நல்லாயிருந்தது'' என்று சொல்வான்.

எல்லா துன்பங்களுக்கும் நடுவில், இந்த நட்பு பலப்பட, வாழ்க்கை இனித்தது.

''கடவுளே சனி ஞாயித்துக்கிழமை வருதே. திங்கட்கிழமை வேற லீவாமே?'' அவள் பதறிப் போவாள்.

'திங்கட்கிழமை நான் வேலைக்கு வரேங்க'' அவன் நிதானமாக பதில் சொல்வான்.

''என்னால வர முடியாது. டிபார்ட்மெண்ட்ல சந்தேகப்படுவாங்க. எங்க மாமியார், நாத்தனாரோட ஞாயித்துக் கிழமை நாலரையிலேருந்து ஆறுக்குள்ள, விளக்கு போடறதுக்கு, சிவன் கோவிலுக்கு வருவேன். நீங்க வர முடியுமா?''

' நான் எங்க வேணா வரமுடியும். வந்து?''

''வந்து இதே மாதிரி பார்த்துகிட்டு இருக்க வேண்டியதுதான்...''

''எனக்கு பேசணுங்க''

''கடவுளே, எனக்கும்தான். ஆனா ஒரு நூல் தப்பா போச்சுன்னாலும், ரெண்டு பேரும் அடிபடுவோம். அனாவசியமா அவமானப்படுவோம். இருக்கிற ரோதனை போதாதுன்னு, இது வேறயா?''

சிவன் கோவிலில் அவள் பரபரத்தாள். அதிகம் சிரித்தாள். அவரு என்னா சாமி? இவரு என்னா சாமி? என்று நாலா புறமும் பார்த்தாள். அவனைப் பார்த்ததும் உச்சி குளிர்ந்தாள். நீர்பட்ட நெருப்பு போல அடங்கிப் போனாள்.

வயிறு நிரம்ப சாப்பிட்டது போல, தாகம் தீர நீர் குடித்தது போல, அடித்துப் போட்டாற்போல, தூங்கியது போல, அவனைப் பார்த்ததும் ஒரு நிம்மதியான சந்தோஷம் பரவியது.

''கடவுளே, அவன் நல்லாருக்கணும்'' என்று வேண்டினாள்.

இந்த நட்பு சரியா? நியாயம்தானா? இது நல்லதா? இல்லை கெடுதலா? எந்த கேள்வியும் அவர்கள் கேட்டுக் கொள்ளவில்லை.

கேட்டால், மனசு பயமுறுத்தும் என்று அவர்களுக்குத் தெரியும். தடை போடும் என்று அவர்களுக்குப் புரியும். 'என்னா கொழுப்பெடுத்து அலையறீங்களா ரெண்டு பேரும்' என்று ஆபாசமாய் திட்டுமென்று தெளிவாய் தெரியும்.

எனவே மனதை அவர்கள் இருவரும் கேட்டுக் கொள்ளவே இல்லை. மனதை ஆராயவில்லை. மனம் தன்னைத் தானே இப்படித்தான் ஏமாற்றிக் கொள்கிறது.

ஒருவர் தன்னுடைய மனதை அறிய மிகுந்த பயிற்சி வேண்டும். அந்த பயிற்சிக்கு அனுபவம் அவசியம். நல்ல அனுபவங்கள், அவமானத்தோடு சம்பந்தப்பட்ட விஷயம்.

# 16

ஆனால், என்ன செய்ய? காதல் என்பது அத்தனை இனிப்பானது. மிகுந்த போதையானது. அளவில்லாத சந்துஷ்டி கொடுப்பது. புத்தியை, மனதை, உடம்பை மலரச் செய்வது.



இது வந்து குடியேறிய பிறகு வாழ்க்கையே மாறிவிடுகிறது. நட்பு, காதலாய் மாறிய தருணத்தை கண்டுபிடிப்பது மிகவும் கடினம்.

காதலிக்கவோ, காதலிக்கப்படவோ எல்லோருக்கும் ஆசை. இதற்கு வயது ஒரு தடையே இல்லை. வேறு எந்த யோக்யதையும் அவசியமில்லை.

பரபரத்து, கெட்டிக்காரத்தனமாய் அலையும் புத்தி. பல்வேறு பிரச்சினைகளால் அழுத்தப்பட்ட மனம், அக்கறையான மனிதர்களுக்கு ஆசைப்படும் சூழ்நிலை போன்றவை காதலைக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறது. மற்ற எந்த விதிகளும் இதில் எடுபடுவதில்லை.

சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட நெறிகளைப் பற்றி இது கவலைப் படுவதில்லை.

''இதுக்கு பேர் லவ்வா?'' என்று யாரேனும் சீறலாம்.

''அவனுக்கும் கல்யாணம் ஆய்டுச்சு. இவளுக்கும் கல்யாணம் ஆய்டுச்சு. அவனுக்கும் பசங்க இருக்கு. இவளுக்கும் பசங்க இருக்கு. இவங்க ரெண்டு பேருக்கும் நடுவுல லவ் வருதா?'' என்று யாரேனும் கூச்சலிடலாம்.

இன்னாரும், இன்னாரும் காதலிப்பதே காதல் என்று யாரும் தரக்கட்டுப்பாடு முத்திரை தர முடியாது.

சமூக விதிகள் மாறிக் கொண்டிருப்பவை. தெருவில் முத்தம் கொடுப்பது ஒரு இடத்தில் நாகரிகம். இன்னொரு இடத்தில் மரியாதைக் குறைவு. இன்னொரு இடத்தில் மரண தண்டனை.

ஒரு இடத்தில் பெண்கள், அரை நிக்கரும், திருப்பூர் பனியனுமாய் வலம் வரலாம். இன்னொரு இடத்தில், குறுக்கே ஒரு தாவணி போட்டுக் கொள்ள வேண்டும்.

இன்னொரு இடத்தில் உச்சியிலிருந்து, பாதம் வரை மூடியிருக்க வேண்டும்.

எது சரியான வழி? எது உயர்வான வாழ்க்கை? எது மனித குலத்தின் முன்னேற்றம்? அல்லது எந்த விதி மனித குலத்தின் அநாகரீகம்? அறுதியிட்டு உறுதியாய் யாரும் சொல்ல முடியாது.

''அப்போ, கல்யாணமானவங்க லவ் பண்றத சரின்றியா? இதுல தப்பேல்லன்றியா?'' திரும்பவும் கூக்குரல் வரலாம்.

சமூகம் என்பது விசித்திரமானது. நேற்று சரியென்று சொன்னதை இன்று தவறென்று சொல்லும்.

''விதவா விவாகமா? என்ன கேவலம்'' என்று நூறு வருடம் முன்பு சீறிய சமூகம், இப்போது விதவா விவாகத்தை மனப் பூர்வமாய் ஆதரிக்கிறது. இது சட்ட பூர்வமாகி விட்டது.

மனிதர்கள் மனசு மாறிவிட்டதால், இது சட்டமாயிற்றா? அல்லது சட்டமானதால் மனது மாறிவிட்டார்களா?

''அது வேற, இது வேற. நீ சொல்றத எந்த ஊர்லயும் ஒத்துக்க மாட்டான். அமெரிக்காக்காரன், ஐரோப்பாக்காரன் கூட ஒத்துக்க மாட்டான்.''

ஒருத்தனைக் கல்யாணம் கட்டிக்கிட்டு, இன்னொருத்தனுக்கு கண்ணு காட்டறதுக்கு பேர் அசிங்கம். நம்பிக்கை துரோகம். ஒப்பந்த மீறல். அதீத திமிர். உடல் கொழுப்பு. நான் என்ன வேணா செய்வேன் என்கிற ஆணவப் போக்கு என்று விதம் விதமாய் வர்ணிக்கலாம்.

ஆயினும், திருமணத்திற்குப் பிறகு வேறொருவன் மீது காதல் என்கிற விஷயம், திருமணம் என்கிற விஷயம் கண்டுபிடித்த நாளிலிருந்தே வந்து விட்டது.



ஏன் இது ஏற்படுகிறது என்று கேட்டால், திருப்தி இன்மை என்ற பதில் உடனே வரும். உறவில் திருப்தி என்பது உடல் விஷயமில்லை. மனோ விஷயம். ஆதரவான பேச்சு இல்லாத போது ஆதரவான பேச்சைப் பெற மனம் ஆசைப்படுகிறது. உண்மையான அன்பு உறவுகளிடமிருந்து கிடைக்காத போது, வேறு எவரிடமிருந்து கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ள புத்தி பரபரக்கும். ஆணும், பெண்ணும் இந்த நிலையில் சமம். ஏழை, பணக்காரன் எல்லோரும் இதில் ஒன்று. ஜாதி வித்தியாசம் இதில் இல்லவே இல்லை.

எத்தனை கட்டுப்பாடுகள் விதித்த தேசமாக இருந்தாலும், இது நிச்சயம் நிகழும்.

என்ன கண்றாவி. இதைத் தடுக்கவே இயலாதா? இப்படி மாறி மாறி போய்க் கொண்டிருந்தால் முடிவு என்ன?

இவனிடம் அன்பு இல்லையென்று அவனிடம் போய், அவனிடமும் அன்பில்லையென்று எவனிடமோ போய், என்னதான் முடிவு?

யார் ராட்சசி, யார் தேவதை? எந்த நெற்றியில் எழுதி வைத்திருக்கிறது? எப்படி கண்டுபிடிப்பது? நீ தேவதையென்று தொட்டது, ராட்சசி ஆகாதென்பது என்ன நிச்சயம்?

இவை மிக பிருமாண்டமான கேள்விகள். உயிரை உலுக்கும் கேள்விகள். ஆனாலும், இவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, காதல் விநோதங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும். இதைத் தவிர்க்கவே முடியாது. சரி, தவறென்பதற்கு அப்பால் போன விஷயமிது.

மனைவியை அதிகம் அடிமைப் படுத்துகிறபோது, கணவனை எள்ளி நகையாடி காயப்படுத்துகிறபோது, இது நிகழ வாய்ப்பிருக்கிறது.

''நீங்க என்ன சொன்னாலும், இத சரின்னு நான் ஒத்துக்கமாட்டேன்.'' கோபம் கொப்பளிக்க எதிர்ப்பார்கள்.

யாரும் இதை சட்டமாக்கச் சொல்லவில்லை. இது ஒரு அவலம்தான் என்பதை மறுக்கவில்லை. இது எங்கும் எவருக்கும் நிகழாமல் இருக்க வேண்டுமே என்கிற கவலை தான் மிக உயர்வானது.

அந்தக் கவலையோடு, ஐயோ இங்கே இப்படி நடக்கிறதே, சம்பந்தப்பட்ட இவர்கள் காயப்படாமல் வெளி வர வேண்டுமே என்ற தவிப்பு வருவது இயல்பு.

நீதி நெறிகளை உரக்க கூவுவதால், சமூக நெறிகள் மாறிவிடாது. சவுக்கெடுத்து, நடுவீதியில் அடிப்பதால், சட்டங்கள் நிறைவேறி விடாது. எல்லா இடத்திலும், எல்லா தேசத்திலும் சட்டங்களிலிருந்து தப்பிக்க, பிரும்மாண்டமான இடைவெளி உண்டு.

ஆனால், இப்போது சட்டங்களிலிருந்து தப்பிப்பது எப்படி என்று பேச்சு இல்லை. இந்தவித சம்பவங்களை என்ன செய்வது என்றே பிரச்சினை. இது காதலா, இல்லையா என்பதே கேள்வி. ஆமெனில், என்ன செய்வது என்பதே முக்கியமான விஷயம்.

'வெட்டிக் கொல்லுங்கடா' என்று வீராவேசமாகப் பேசலாம். 'நாங்க ஒழுக்கமா இல்லியா?' என்று சாராயம் குடித்துவிட்டு கத்தலாம்.

அவர்களைப் புறந்தள்ளிவிட்டு, பிரச்சினைக்கு ஆளானவர்களைப் பார்ப்போம்.

பதினோரு மணிக்கு மாலதியும், கணேசமூர்த்தியும் டீ சாப்பிட்டுவிட்டு திரும்பும்போது, டெல்லியில் உள்ள தலைவர் செத்துப் போய் விட்டார் என்று தகவல் வந்தது.

''என்னாவாம்பா?''



''ஒரு நாள் லீவு டிக்ளேர் பண்ணிட்டாம்பா''

அவரவர் கட்டுசாதக் கூடையை அள்ளியெடுத்துக் கொண்டார்கள். பதினைந்து நிமிடத்தில் அலுவலகம் காலியாகியது. மாலதி என்ன செய்வதென்று கணேச மூர்த்தியைப் பார்த்தாள். கணேசமூர்த்தி சற்று இரு என்று சைகை செய்தான்.

அவன் சொன்னவிதம் மாலதிக்கு, பயத்தையும், சந்தோஷத்தையும் ஏற்படுத்தியது.

''கணேசமூர்த்தி, ஆபீஸ்ல யாராவது இருக்கணுமே.'

''நான் இருக்கேன் சார்.''

''அஞ்சு மணி வரைக்கும் இருப்பீங்களா?''

''யாராவது இருந்துதானே சார் ஆகணும்.''

''கூட ஜேம்ஸ், சங்கர் யாராவது வெச்சுக்கங்க.''

''யாரும் இல்ல சார். போயிட்டாங்க.''

''கிளாஸ்ஃபோர் யாராவது இருக்காங்களா?''

''இருக்காங்க சார். போகணுன்றாங்க.''

''அப்ப யாரு கதவ சாத்தறது?''

''ரெண்டு கதவ விட்டுட்டு மத்ததெல்லாம் அவங்களை சாத்த சொல்லிடறேன் சார். போறபோது நான் கதவ பூட்டிகிட்டுப் போயிடறேன்.''

''நன்றி கணேசமூர்த்தி.''

''எதுக்கு சார். யாராவது ஒருத்தர் செய்துதானே ஆகணும்.''

''மாலதி, பைய குப்பைக்கூடைல வெச்சுட்டுப் போய் டீ சாப்பிடு.''

''இப்பதானே சாப்பிட்டேன்.''

''போய் சாப்பிடு.''

அவள் வருவதற்குள், எல்லா கதவுகளும் சார்த்தப்பட்டன. ஒரு கதவு மட்டும் திறந்து வைக்கப்பட்டது. கதவு சார்த்தும் தோழர் விடை பெற்றுப் போனார். அவர் போன பிறகு, மாலதி உள்ளே நுழைந்தாள்.

''நீயும் நானும் ஓர் அறையில் அடைக்கப்பட்டோம்.' கணேசமூர்த்தி ஹிந்தி பாட்டுப் பாடினான்.

''கடவுளே, இதுக்குதான் என்னைப் போயி டீ சாப்பிட சொன்னீங்களா? யாருக்காவது தெரிஞ்சா என்கதி என்னாகும். கவுறுதான்'' அவள் சுருக்கிட்டு காண்பித்தாள்.

''உக்காந்து பேசுனா, இந்த தேசத்துல தூக்குல போட்டுவாங்களா என்ன?''

''என்ன இருக்குது பேச?''

''பேச முடியாதபோது, பேசணும் பேசணும்னு தோணுது. பேச சந்தர்ப்பம் கிடைச்சா, பேசறதுக்கு ஒண்ணுமேயில்லன்னு போய்டுது.''

''பேச வேணாம். பாடுங்க'' அவள் உற்சாக மூட்டினாள்.

''பாடறதா, நானா, எனக்கு பாடவராதும்மா''

''உள்ள நுழையறபோது அம்மு, தும்முனு பாடுனீங்க''

''அது குறிப்பு உணர்த்தல். அன்பும், அழகும் கொண்ட தலைவி, எதிரே இருக்கிறாள். அவளுக்கு தலைவன் மீது பிரியமும் இருக்கிறது. தலைவனுக்கோ, அவளை அடைய வேண்டுமென்று தவியான தவிப்பு.



ஆனால், சமூகம் அந்த உறவை மறுக்கிறது. தலைவியும் வாடுகிறாள். இந்த நிலைமை எப்படி இருக்கிறது தெரியுமா?

நல்ல வெய்யிலில், பாறை உச்சியில் வெண்ணெய் உருகி ஓடிக் கொண்டிருக்கிறது. இரண்டு கால்களும் இரண்டுகைகளும் அற்ற முடவன் ஒருவன் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறான், என்பது போல் இருக்கிறது.''

''நாம பண்ற கண்றாவிக்கு சங்கப்பாடல் உதாரணம் வேறயா?''

''விழியே கதை எழுது, கண்ணீரில் எழுதாதே. மஞ்சள் வானம், தென்றல் காற்று, உனக்காகவே நான் வாழ்கிறேன்.'' கணேசமூர்த்தி மெல்ல பாடினான்.

''என்னை சாவடிக்கறீங்க போங்க'' அவள் வலக் கையால் முகம் பொத்திக் கொண்டாள்.

கணேசமூர்த்தி மெல்ல அவள் கையைப்பற்றினான்.

# 17

இந்த தொடலைத்தான், அவள் பதினெட்டு வயதில் கனவு கண்டாள். இந்த பார்வையைத்தான் அவள் பதினாறு வயதில் எதிர்பார்த்தாள். இந்த மாதிரி பாடல்கள்தான் அவளுக்கு உள்ளே புகுந்து, வாழ்வைப்பற்றிய கனவுகளை பூதாகாரமாக்கியது.

குறுஞ்சிரிப்பும், குறுகுறுப்பான பார்வையும் விரல்களால் கேசம் அலைவதும், மெல்ல மெல்ல உடம்போடு உடம்பு வைத்து அழுத்துவதும்' மிகச்சில அத்துமீறல்களும்

கொண்ட அவள் கனவுகள், திருமணமாகி நடைபெறவேயில்லை.

வாழ்க்கை, கற்பனைகளுக்கு மாறாகவே இருந்தது. புருஷன் அவள் அரை நிர்வாணத்தைப் பார்த்துவிட்டு வாய்விட்டு சிரித்தான். அந்த சிரிப்பு அவளை அவமானப் படுத்தியது. குழல் விளக்கு வெளிச்சம் அவளை மனம் கூசவைத்தது.

திடீரென்று நிர்வாணமான ஆணின் உடம்பு அவளுக்கு அதிர்ச்சி தந்தது. சரி, இது தலையெழுத்து, என்று பல விஷயங்களை, பல்கடித்து சகித்துக் கொண்டாள்,

உன் விருப்பமென்ன என்று ஒருவரும், ஒருநாளும் கேட்டதேயில்லை. சொன்னபோதும் புரிந்து கொண்டதில்லை.

'வலிக்குதுங்க' என்று சொன்னபோது, 'எனக்கென்ன அதுபத்தி' என்று பதில் வந்தது. காமத்தை கண்ணீர் அனுபவமாகக் கொண்டபல பெண்களில், மாலதியும் ஒருத்தி.

ஊமைப் பெண்ணாய், அவள் கண்ட பயங்கரக் கனவாய் வாழ்க்கை ஓடிக்கொண்டு இருந்தது. எதையும் பரிமாற முடியவில்லை. எதையும் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

அலுவலகம் பெரிய விடுதலை என்று ஆரம்பத்தில் நினைத்தாள். அது இன்னொரு சிறை என்று போகப் போக புரிந்தது.

''அவளுக்கு இன்னும் வலிக்கறதாண்டி'' யாரிடம் ரகசியமாக பகிர்ந்து கொண்டாளோ, ஆறுதல் தேடினாளோ, அவளே அலுவலகம் முழுக்கபற்ற வைத்தாள். ஆண்களுக்கெல்லாம் இந்த செய்தி போனது. அவள் தாண்டும்போது, என்னப்பா வலிக்குதா?'' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள்.



இது புரிந்தபோது, செத்துப் போய்விடலாம் போலிருந்தது.

''நீ ஏன் இதையெல்லாம் வெளிய சொல்ற. உனக்கு அறிவில்ல. உன்னை விடநூறு மடங்கு துக்கம் எனக்கு. ஒரு கடலைப்பருப்பு துக்கத்தை வெளிய சொல்லியிருப்பேனா? பவுடர்போட்டு மினுக்கிண்டு அலையல? சொல்லக் கூடாது. சொன்னா, சிரிப்புதான்.

ஏன் உன் மூஞ்சி வாடியிருக்குன்னு யாராவது கேட்டா, அவ வம்புக்கு அலையறாள்னு தெரிஞ்சுக்க, அவளுக்கு உன் வாழ்க்கைப் பத்தி அக்கறையில்லன்னு புரிஞ்சுக்க. எனக்கா, ஒரு பிரசினையுமில்லைன்னு சுத்தமா ஒதுக்கிடு. அதே மாதிரி ஆபீஸ்ல சந்தோஷம்னு சொல்லாத.

சேந்தா மாதிரி நீ நாலு புடவை வாங்கிட்டேன்னு தெரிஞ்சுது, இவளுக்கு ஏது காசுன்னு கூசாம கேட்பாங்க. இவளுக்கு ஏதுகாசுன்னு கேட்கறத்துக்கு உள் அர்த்தம் தெரியுமா? யோசனை பண்ணி தெரிஞ்சுக்க.'' அனுபவப் பட்டவள் உபதேசித்தாள்.

ஆபீஸ், ஆறாயிரம் ரூபாய் காசுக்காகப் போராடும் இடமாயிற்று. வெறும் சேற்று நிலமாயிற்று. நாற்றங்கால் பறித்து நடுவதுபோல, ஒரே மாதிரியான வேலை இருந்தது. நாற்றுக்கு நடுவே, வேரும், பூவுமாய் ஒரு செடி தெரிய அவள் திகைத்துப் போனாள். யாருக்கும் தெரியாமல், நாற்றுகளுக்கு நடுவே அதையும் நட்டாள். செடிவேர் பிடித்தது. பூ கண் சிமிட்டியது. அவளைச் சுற்றி வளைத்தது.

''ப்ளீஸ், ஏன் தொடறீங்க'' மாலதி கணேசமூர்த்தியை விலக்காமல் பேசினாள். கேட்டுவிட்டு, ஒரு ஆண் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் என்று அவளே யோசித்தாள்.

''என் மனசுல பொங்குற அன்பை, வேற எப்படி காட்டறதுன்னு தெரியலை. அதனால தொடறேன். தொலைவில உக்காந்து அன்பு காட்ட முடியலை. கம் பீரமா விலகி நிக்கறமாதிரி பொய் சொல்ல முடியல. ரொம்ப சுலபமா சொன்னா, எனக்கு பிடிக்குது, தொட றேன். தொட்டாதான் நிறைவா இருக்குது.''

அவன் எல்லா பதில்களிலும் உண்மை இருந்தது. இது தவிர, ஒரு ஆண் என்ன சொல்ல முடியும்.

''நான் தொடறது பிடிக்கலேன்னா, தள்ளி நிக்கி றேன். கஷ்டப்பட்டு கை கட்டிக்கிறேன்'' அவன் தொடர்ந்து உண்மை பேசினான். அவள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள்.

அவளுக்குள்ளும் மனசு இந்த தொடலுக்கு ஏங்கியது. ஆனால், தொட்டதற்கப்புறம் என்ன செய்வது? இது எங்கு போய் முடியும்? வெளியே தெரிந்தால், என் கதி என்னவாகும் என்றெல்லாம் ஆயிரம் கேள்விகள் எழுந் தன.

'இல்லை. இது தொடர முடியாது. இது நிரந்தர மல்ல. இதனால் ஏற்படும் சிக்கல்களை மனது தாங்காது. குழந்தைகளை கரையேற்ற முடியாது.

இவன் காதல் அரசனாக இருந்தாலும், இந்த அர சனை நம்பி, புருஷனை கைவிட முடியாது. இந்த ஆறு கரை சேர்ந்தாலும் சேர்க்கும். கண்மாய் சேற்றில் சொரு கினாலும் சொருகும். எதற்கு இந்த விஷப்பரிட்சை.

வீட்டில் அடி வாங்கினால், தனிமையில் அழுவதற்கு அலுவலகமாவது இருக்கிறது. அலுவலகத்தில் பத்து பேரிடம் சொல்லடி வாங்கினால், எதிரேயிருக்கும் வங் களா விரிகுடா கடல்தான் கதி.

எனவே, இது வேண்டாம், இது போதும். இந்த ஜன் மம் எடுத்தற்கு இவன் காட்டிய அன்பு போதும். இதற்கு



பெயர்தான் காதல். எனக்கு தெரிந்து விட்டது. இதற்கு பெயர்தான் அன்பு. நான் அறிந்து கொண்டேன். இது கொடுக்கும் பரவசங்கள் தெரியாமல் நான் சாகவில்லை. இது கொடுக்கும் அனுபவங்களை ரசிக்காமல் நான் அழிய வில்லை.

வாழ்வின் உன்னதங்களில் காதல் ஒரு விஷயமெனில், எனக்கு அதுபற்றி தெரியும். காதல் என்பதை நான் நன்கறிந்தவள்.

எங்கு காதல் பாட்டுப் பாடினாலும், அது முழு வேகத் தோடு என் நெஞ்சில் வந்து தைக்கும். இவன் முகத்தைக் காட்டும். இந்த அலுவலகத்தைக் கிளறும்.

இதற்கு மேலும் வாழ்க்கையில் அவமானங்கள் வரலாம். வறுமை தாக்கலாம். புதிய புதிய பிரசினைகள் முளைத்து கழுத்து நெறிக்கலாம்.

ஆனாலும், நாக்கு நுனியில், அன்னத்தில் ஜீரா இனிப்பு போல, இந்த காதல் சுகம் இருந்து கொண்டுதான் இருக்கும்.

இந்த விரல் தொட்டது போதும்.

இவன் தலை தடவியது போதும்.

இவன் காதலோடு பார்த்தது போதும்.

ஆனால், இவனுக்கு போதுமா?

இவன் உண்மை எவ்வளவு அழகாக இருக்கிறது. இவன் அண்மை எத்தனை சந்துஷ்டியாக இருக்கிறது இவ னுக்கும் என்னைப் போல் இடிபாடு உள்ள வாழ்க்கை. புரிதலில்லாத உறவு. இவனும் ஏங்கித் தவித்திருப்பான். தலை தடவி, 'விழியே கதை எழுது' என்ற பாட்டிற்கு ஏங்கியிருப்பான். இவனும் அவமானப் பட்டிருப்பான்.

''ஒவ்வொருத்தர் அரசாங்க உத்தியோகத்துல என்னா லஞ்சம் வாங்கறாங்க. இவரு கத்தை கத்தையா காகிதம் கொண்டாந்து வீட்ல உக்காந்துகிட்டு வேலை செய்ய றாரு. இனிமே இங்க கவர்மெண்ட் பேப்பர் வரக்கூடாது. எனக்கு அந்த நாத்தம் பிடிக்கலை. மீறி வந்தது. பத்து பேப்பரை புடுங்கி பாய்லர்ல போட்டுடுவேன். 'உரக்கக் கத்தினாளாம்' அதெல்லாம் தப்பும்மா'' இவன் பதிலுக்கு சொன்னானாம்.

''என்ன தப்பு? ஏற்கனவே பத்து பேப்பர் புடுங்கி வெச்சிருக்கேன்'' என்று ஒரு கத்தை காட்டினாளாம். கெஞ்சிக் கூத்தாடி, அந்த காகிதங்களை வாங்குவதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டதாம்.

எனவே வீட்டிற்கு தூங்குவதற்கு மட்டுமே போகின்ற பழக்கம் வந்து விட்டது. வீடு சந்தோஷமே இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் என் மீது நாட்டம் வந்து விட்டது. இங்கேயாவது நல்ல உறவுகளை ஏற்படுத்தி கொள்ள வேண்டுமென்று காலில் விழும் முடிவு எடுக்கப் பட்டது.

என் நட்பு உயர்வு என்றுதானே காலில் விழுந்தாய். என் சிநேகம் வேண்டுமென்றுதானே மன்னிப்பு கேட்டாய். என்னோடு மனம்விட்டுப் பேச வேண்டுமென்றுதானே பார்த்துப் பார்த்து, காத்துக்கிடந்தாய். நான் முக்கியம் என்றுதானே என்னை மதித்தாய். பிரியம் காட்டினாய்.

எடுத்துக்கொள். என்னை எடுத்துக்கொள்.

உனக்கும் கிடைக்கவில்லை. எனக்கும் கிடைக்க வில்லை. இரண்டு பேருக்கும் பசி. அன்புப் பசி.வா ஒரு முறை சாப்பிடுவோம். இது சோறு அல்ல. அமிர்தம். பொய் கலப்பே இல்லாத விஷயம். ஒரு முறை சாப்பிட் டால் போதும். இந்த ஆயுசுக்கும் போதும்.



அருகில் வா. என்னைத் தொடு. என் முகம் திருப்பி, கன்னத்தோடு கன்னம் இழை. விரல்களைப் பின்னி பிணைந்திரு. தோளில் சாய்ந்து கொள். இறுக்க அணைத்துக் கொள். தடவு. உஷ்ணம் பரிமாறு. உயிர் எங்கே இருக்கிறது என்று தேடு. எதோடு பிணைந்து கொண்டிருக்கிறோம் என்று யோசனை செய்.

உடம்பை உடம்பு தடவுகிறதா, உயிரை உயிர் கவ்வு கிறதா என்று சிந்தி. செயல்படு.

அன்பின் உச்சி நிலையில் என்ன பாடுவாய்? என்ன பேசுவாய்? பாடவும், பேசவும் ஏதுமில்லை நண்பனே. பேச்சு ஓர் போலித்தனம். பாட்டு ஓர் நடிப்பு. மொழி ஒரு இடையூறு.

நிகழ்ச்சி நடக்கும்போது மொழி தேவை இல்லை. நடந்ததை நினைக்கும்போதுதான் தேவை. 'நண்பனே, வா' அவள் அகல கைகளை விரித்தாள். அவனை வா என்று கூப்பிட்டாள்.

# 18

இவன் திகைத்தான். 'ஏன் மாலதி திடீர்னு?' விழி களால் கேட்டான். அவனுக்கு அவள் அழைப்பு பிடித் திருந்தது. ஆனாலும் பயமாக இருந்தது.

''யாராவது பார்த்துட்டா. நான் ஆம்பளை உத றிட்டு நின்னுடுவேன். நீ நாசமாயிடுவே மாலதி. உன்னை தொடமாட்டமான்னு எனக்கும் ஏக்கம்தான். ஆனால். எனக்காக தலைகொடுத்துட்டு நீ அடிபடறதை நான் விரும்பலை. உனக்கு என்னால உதவி செய்ய முடி யுதோ இல்லயோ உபத்திரவமா இருக்க முடியாது. நான்

மனசார நேசிக்கிற லேடிய நானே அழ வெச்சிடக்கூடாது. உன்னைவிட என் ஆசை ஒண்ணும் முக்கியமில்ல.''

அவன் வாய்திறந்து நிதானமாக அவளிடம் பேசினான்

அவள் அவனை உறுத்துப் பார்த்தாள்.

நேசிப்பு, நேசிப்புன்னு வாயோட சொல்லிட்டா போச்சா? உன்னை ரொம்ப பிடிச்சிருக்குன்னு சொன்னா நிறைஞ்சுடுமா? ஒரு முழம் மல்லிப்பூ வாங்கித் தரவேண்டாமா? உங்களுக்கு நான் ஒரு சட்டைத்துணி எடுத்து தரவேணாமா? அப்போ நிறைஞ்சுடுமான்னு கேக்கறீங்களா? நிறையாது. நான் இப்ப உங்கள கட்டி கொஞ்சறது ஒரு சட்டைத்துணி போலதான். ஒரு முழம் மல்லிப்பூ போல தான்.

நான் ஒண்ணும் உங்களை மயக்கத்துல கூப்பிட்டுடலை. எல்லாத்தையும் உதறிட்டு நீங்கதான்னு ஓடி வந்துடப் போறதில்ல. என் புருஷனோட ஒண்டிக்கு ஒண்டி கத்தி சண்டை போட்டு கொன்னுட்டு, என்னை அந்தப்புரத்துக்கு கூட்டிட்டு போங்கன்னு சொல்லல. அப்படி செய்தீங்கன்னாதான் நீங்க ஆம்பிளைன்னு வெறுப்பு ஏத்தலை.

என்னால உங்களுக்கு ஒரு கஷ்டமும் வரக்கூடாது. ஒரு அவமானமும் வரக்கூடாது. உங்களுக்கும், உங்க மனைவிக்கும் ஒரு சண்டையும் வரக்கூடாது.

எனக்குள்ள ஒரு பெரிய சந்தோஷம். அதைக் கொண்டாடறேன். இந்த ஜென்மத்துல என்னையும் ஒருத்தன் மதிச்சு, லவ் யூன்னு சொன்னான். அதைக் கொண்டாடறேன்.

அப்பா சொல்லல. அம்மா சொல்லல. உடன் பொறந்தவங்க யாரும் சொல்லல. தாலி கட்டின புருஷன்



சொல்லல. நெஞ்சு தழைஞ்சு, உச்சியில நரைக்க தொடங்கின நேரத்துல, முதமுத நீங்கதான் சொன்னீங்க. இதுக்கப்புறமும் வேற யாராவது சொல்வாங்களா? எனக்கு தெரியலை. சொன்னாலும் என் காதுல ஏறாது.

பத்து வருஷம் முன்னாடி சொல்லியிருந்தீங்கன்னு வெச்சுக்கங்க. ஊரைக் கூட்டி, உங்கள நாஸ்தி பண்ணியிருப்பேன். பத்து வருஷத்துக்கு அப்புறம் சொல்லியிருந்தீங்கன்னு வெச்சுக்கங்க, தலையில அடிச்சுகிட்டிருப்பேன். சரியான நேரத்துல என்னைப் பாத்து லவ்யூ சொன்னீங்க.

வாழ்க்கைல முத லவ் மறக்கவே மறக்காதாம். எனக்கு இதான் முத லவ். முப்பத்தி நாலுவயசுல முதமுதலா என்னை ஒருத்தர் லவ் பண்ணாரு. நானும் அவரை லவ் பண்ணேன். எங்கம்மா, எங்காத்தா, மகமாயி எனக்கு போதும்டி. எனக்கு போதும். உள்ளம் நிறைஞ்சு போச்சு.

இதுல பெரிய நிம்மதி என்ன தெரியுமா? இதுல எந்த ஏமாத்து வேலையும் இல்ல. எந்த நிர்பந்தமும் இல்ல. பத்தாயிரம் ரூபா நீங்க கடன்கொடுத்தீங்க, அதனால உங்களப் பாத்து லவ்யூ சொன்னேன்னு வரலை. நான் வெச்ச கண்ணு எடுக்க முடியாத அழகா இருந்தேன். அதனால நீங்க என்னைப்பாத்து லவ் யூ சொல்லல. நீங்களும் சாதாரணம். நானும் சாதாரணம். நமக்குள்ள இருக்கிற நல்லதை தேடிப்பிடிச்சு பாராட்டறோம். இது கிடைக்காத எத்தினி பொம்பளைங்க சாகறாங்கன்னு எனக்குத் தெரியும். மனசு மலராத, எத்தனை ஆம்பிளைங்க கடுமையாயிட்டாங்கன்னு எனக்குத் தெரியும்.

நீங்க லவ்பண்ணி, நான் லவ் யூ சொல்லி என்ன குறைஞ்சு போச்சு? கற்பா? ஒழிஞ்சுப் போகுது. நான் சொன்னா மழை பெய்யிங்கிற கர்வம் எனக்கு ஒண்ணும்

தேவை இல்ல. இந்த சந்தோஷம் ரொம்ப நாள் என் மனசுக்குள்ள மழைய பெய்யும். சாகறமட்டும் மழையா பெய்யும். இந்த மழை என்னை உசுரோட வைக்கும். என் மனசுக்குள்ள புல் வளரும். பூ பூக்கும். நாளைக்கு பொண்ணு லவ் பண்ணாக்கூட, யாரடி பண்றேன்னு கேட்பேனே தவிர, ஏண்டி பண்றேன்னு கேட்கமாட்டேன். ஜாக்கிரதைடின்னு சொல்வேனே தவிர, சண்டாளப் பாவின்னு கத்தமாட்டேன்.

ஒரு மனுஷாள் நல்லவரா இருக்க, நல்லவங்களோட தொடர்பு வேணும். நல்லதோட அனுபவம் வேணும். வாழ்க்கைல எதுவுமே நல்லதா நடக்காத பொம்பளை அல்லது ஆம்பளை. மத்தவங்களை நல்லாருக்க விடமாட்டாங்க. எனக்கு நல்லது நடந்திருச்சு. நான் எதுக்கு ஆசப்பட்டேனோ, அது கிடைச்சுடுச்சு.

என் பொண்ணுக்கு பன்னெண்டு வயசு. எப்ப வேணா உக்காந்துடுவா. பிள்ளைக்கு பத்துவயசு. இப்பவே எல்லாம் தெரியுது. அவங்கள இன்னும் நல்லா நான்வளக்கலாம். இந்த சந்தோஷத்தை மனசுல வெச்சு, லவ் பண்றது ஒண்ணும் தப்பில்லடான்னு அதுங்களுக்கு சொல்லித் தரலாம்.

இத தள்ளி உக்காந்தே சொல்ல லாமே. ஏன் மடில உக்காந்து கட்டிக்கறேன்னு கேட்கறியா? நீ கொடுத்த மல்லிப்பூவை தலைல சொருகிறமாதிரி விஷயம். ஒரு முழம் மல்லிப்பூவை எத்தினி நாள்சூடிக்க முடியும். சூடின நேரம் பரம சந்தோஷம். மண்டைசூட்டுல பூ மலர்ந்தப்போ, செம கிளுகிளுப்பு. மறுநா காத்தால அதஓரமா தூக்கிப்போட்டுட வேணுடியதுதான். அவ்வளவுதான். அதுதவிர, உன் நட்பு வேணும், அதனாலதான் உன்கால்ல விழுந்தேன்னு சொன்னியே, உன்னை இழக்க விரும்பல அதனாலதான் மன்னிப்பு கேட்டேன்னு சொன்னியே, இந்த குணத்துக்கு முன்னாடி கற்பு ஒண்ணும் பெரிசுஇல்ல.



புருஷன் ராமச்சந்திர மூர்த்தியா இருந்தா பொம்பளை கிழிசப்புடவையோட ராட்சசிங்களுக்கு நடுவ வாழலாம். நெருப்பு தாங்கலாம். என்னை மதிச்சு மரியாதை தராத வெளக்குமாறுக்கு நான் ஏன் கற்பு காப்பாத்தி சாகணும்?

கற்பு வைரமாலைதான், அத நான் உன் தட்டுல போட்டுட்டேன். நம்ம கதைய வெளிய சொன்னா, ரெண்டு குருப்பா பிரிஞ்சு அடிச்சுக்குவாங்க. சரி, தப்புன்னு சட்டம், நியாயம் பேசுவாங்க. வாழ்க்கை முழுக்க இன்னொருத்தர ஏமாத்தி, தந்திரமா வாழற ஆம்பிளை, என் மனசு ரொம்ப சுத்தம்னு சொல்ற பொம்பளை உரக்க கத்துவாங்க. சத்தியமா லவ் பண்ணியிருந்தா, உண்மையா நேசிச்ச அனுபவம் இருந்தா, அவங்களுக்கு இது புரியும்.

என் புருஷன் என்னை லவ் பண்ணியிருந்தான்னு வெச்சுக்கங்க. உங்க பேரே என் மனசுல பதிஞ்சிருக்காது. உங்க பொண்டாட்டி உங்களை கேலி பண்ணாம, காயப்படுத்தாம அணைச்சு ஆதரவா இருந்தா, அனுசரணையா இருந்தா, நான் பொம்பளைங்கறதே உங்களுக்கு உறைக்காது. குமாஸ்தாவாதான் பாத்திருப்பீங்க.

கிளி மாதிரி பொண்டாட்டி இருந்தாலும் நாய்மாதிரி அலையறவன் இல்லியா அப்படின்னு கேக்கலாம், நான் திருடனை மனுஷனா சேக்கலை. ராமர் மாதிரி ஆம்பளை இருந்தாலும், காலில்லாதவனை கண்ணடிச்சு வெறுப்பேத்தற பொம்பளை இல்லியா?

இந்த ஒருமணி நேரம் உங்களோட பின்னிக்கிடந்தது எனக்கு போதும். இனிமே திரும்பத் திரும்ப இதுதான் பண்ணப்போறம். ரெண்டாந்தடவைக்கு இதுல ஒண்ணும் இல்ல. அடிக்கடி நடந்ததுன்னா, இது காமம்தான், வேற ஏதோ வரவுசெலவு கணக்குதான். இத்தோட மறந்

துடலாம். தள்ளித் தள்ளி போயிடலாம். எப்பவாவது, எங்கியாவது பாத்தா, நல்லா இருக்கீங்களான்னு விசாரிச்சுக்கலாம். பசங்க பத்தி கவலைப்படலாம். பிறந்த நாள் வாழ்த்து அனுப்பலாம். சரஸ்வதி பூஜைக்கு முத நாள் நெனைச்சுக்கலாம்.

எல்லாம் சரி மாலதி. ஏன் அந்தாளைத் தொட்டே அப்படின்னு யாராவது கேட்டா, கேட்டவங்களை பைத்தியம்னுதான் சொல்லுவேன். மாலதியோட உடம்பு மட்டும்தான் உங்களுக்கு தெரியும். மாலதிக்கு மட்டும்தான் மாலதியோட மனசும் தெரியும்.

என்ன உடம்பு, என்ன மனசு? இதெல்லாம் தப்புன்னு சாஸ்திரத்துல சொல்லியிருக்குது அப்படின்னு அலட்டலாம். கண்ணை மூடிகிட்டு போறவங்களுக்குத்தான் சாஸ்திரம் வழி காட்டணும். மனசுக்குள்ள இருக்கிற கண் திறந்துட்டா நாமளா நம்ம வழிய தேடிகிட்டு போகலாம்.

யார் ஒழுக்கத்தப் பத்தி ரொம்ப அலட்டறாங்க தெரியுமா?

''மனசுல ஒழுக்கமில்லாதவங்க தான்.'' அவள் கண் மூடி பேசினாள். தொடர்ந்தாள்.

# 19

''நம்ம ஊர்ல ஒளவையார்னு ஒரு கிழவி இருந்தா. ரொம்ப விவரமான பொம்பளை.

போகாத இடந்தனிலே போக வேண்டாம்.பொட்டுல அடிச்ச மாதிரி சொல்லுவா. அடுத்த வரி இன்னும் சுருக்குனு வைப்பா, போகவிட்டு புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.



அப்படி யாராவது போனா, அதைப் பத்தி புறம் சொல்லித் திரியாதே. லபோ லபோன்னு கத்தாதே அப்படின்னு புத்தி சொல்லுவா. நம்ம ஊர்ல புறஞ்சொல்லித் திரிபவர்கள் அதிகம்.

பிறர் அந்தரங்கம் அறியும் ஆவல் இருக்கிறதே அது ஒரு நோய். வந்துவிட்டால், போகாது.

பிறர் அந்தரங்கத்தைப் பற்றி அறியும் பேராவல் யாருக்கிருக்கிறதோ, அவருக்கு அத்துமீறும் ஆவலும் இருக்கிறது என்று அர்த்தம். அத்து மீறும் ஆவலும், தாண்ட தைரியமும் இல்லாத காரணம்தான் புறம் பேசித் திரியக் காரணம்.

''அந்தப் பெண்ணா, அது கேசுப்பா'' என்று சொல்லற ஆண் தன் சுகத்துக்கு ஒரு கேசு கிடைக்காதா என்று ஏங்குபவன்.

''அந்த நடிகை காசு கொடுத்தா என்ன வேணா பண்ணுவாளாமே'' என்று பேசும் பெண்மணி உள்ளுக்குள் ஏங்குபவள்.

நம் முதுகை நாம் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். நம் மனதின் வக்கிரங்களை எடை போட்டு வெளியே எறிய வேண்டும்.

சொந்த வாழ்க்கையே சிக்கல். இதில் பிறர் வாழ்க்கை பற்றிய வம்பு எதற்கு என்று விலகிவிட வேண்டும்.

ஆனால், இது எளிதல்ல.

ஒருவர் பேச ஆரம்பித்தால்,பத்து பேருக்குத் தொற்றி விடும் வியாதி. இது பேச ஆரம்பித்தால், சிக்கிக்கொண்டு திண்டாட நேரிடும். மனம் இடையறாது இந்த ஒழுக்கக் கேட்டையே சிந்திக்கும். சின்ன காற்றடித்தாலும் சறுக்கிட நேரிடும். அதே ஒழுக்கக்கேடு உங்கள் வாழ்க்கையிலும் நிகழ்ந்துவிடும்.

இளம் வயதிலேயே குழந்தைகளுக்கு இது பற்றிச் சொல்லித்தர வேண்டும். வேலைகள் அதிகமிருந்தால் இந்த வம்புகளுக்கு வாய்ப்பே இல்லை. ஆனால், வேலைகள் இல்லாத பேய் மனது இந்த விஷயங்கள் சேகரிக்க ஆபாச மாக அமையும்.

வாழ்க்கையில் எல்லை தாண்டுபவர்களுக்கும் இந்த புத்தி இருக்கும். சிக்கிக் கொண்டு அடிபட்டு விட்டால் அந்த காயம் தீர வெகுநாள் ஆகும். காயம் தீராமலேயே கூட போகும். அடுத்த தலைமுறையின் வாழ்க்கையைக் கூட தாக்கும்.

மாலதிக்கு இந்த தெளிவு இருந்தது.

கணேசமூர்த்திக்கு தான் முத்தமா? எங்களக் கேட்டா, நாங்க தர மாட்டமா? கணேசமூர்த்தி சைவம், நான் அசைவம். ஒரு தடவை வரச் சொல்லு'' என்று கொக்கறிக்கிற ஆண்களைச் சந்திக்க நேரிடும்.

''என்னை அந்தம்மா பக்கத்து சீட்ல தயவுசெய்து போடாதீங்க சார். தயவுசெய்து வேற சீட் போடுங்க சார். அந்தம்மாவைப் பார்க்கிற மாதிரியே என்னைப் பாக்க றாங்க. எனக்கு உடம்பு அப்படியே குறுகிப் போயிடுது.'' தானாக கற்பனை செய்து கொண்டு, தானாக அலட்டிக் கொள்ளும். தான் தோன்றியாய் பேசும் பெண்களிடையே விழிக்க நேரிடும்.

''ஏய், செல்வி இங்க வாடி'' அவள் மகளை டீச்சர் கூப்பிடலாம்.

''உங்க அம்மா, உங்கப்பாவோட இல்லியாமே. நெசமாவா? வேற யாரோடயோ போயிட்டாங்களாமே. யாரது? நீ யாரோட இருக்க? புது அப்பாவோடயா, பழைய அப்பாவோடயா? பாத்துடி, மதமதன்னு இருக்கே, உன்னையும் சாப்பிட்டுடப் போறான்'' என்று பதின்மூன்று வயதுக் குழந்தை வார்த்தைப் பாறையால் நசுக்கப்படும்.



செய்யாத குற்றத்திற்கு சிலுவைசுமக்கும். அழும். தேற்றக் கூட ஆளில்லாமல் அழும்.

எவரைக்கண்டாலும் ஏற்படுகின்ற நடுக்கமே அவளுக்கு தாயார் கொடுத்த தனம்.

மாலதி, கணேசமூர்த்தியின் தலையைக் கோதினாள். முகத்தைக் கையிலேந்தி அவன் கண்களில் முத்தமிட்டாள்.

''போறுங்க. இது கிடைச்சதே பெரிய விஷயம். வீட்ல எத்தனை துக்கம் இருந்தாலும், ஆபீஸ் இனிமே சந்தோஷமா இருக்கும். காரணம் ஆபீஸ்ல நீங்க இருக்கீங்க. என்னை நேசிக்கிற ஆள் இருக்கிற இடத்துக்கு போறேன்ற நினைப்பிலேயே நான் சந்தோஷமா காலைல பஸ் ஏறுவேன். உங்ககிட்ட வந்து பிரியமா குட்மார்னிங் சொல்வேன்.

திருப்பியும் இப்படி ஒரு நேரம் கிடைக்காது. கிடைக்கும்னு எதிர்பார்க்கக்கூடாது. இதுக்கு மேல என்ன பண்ணப் போறோம்.

காதல் புத்தியைக் கெடுக்குமா? கெடுத்தா அது காதலா? வியாதி இல்லையா? காதல்ங்கிறது வியாதியா? இல்லியே. அது அமிர்தம். அதே சமயம் அளவுக்கு மிஞ்சினால், அமிர்தமும் விஷம். எனக்குப் போறுங்க. உங்களுக்கு?''

''இதுவே அதிகம். இது கிடைக்கும்னு நான் நினைக்கவே இல்லை.''

''அப்போ எழுந்து வீட்டுக்குப் போவோமா?''

கணேசமூர்த்தி விலகி, சரியென்று சொன்னான்.

''உங்களுக்குத் தெரியாதது இல்ல. இருந்தாலும் தெரிஞ்சுக்க சொல்றேன்.''

''நான் வம்புல மாட்டி அடிபட்டா உங்களுக்கு சந்தோஷமா?''

''இல்லவே இல்லை'' கணேசமூர்த்தி தலையாட்டினான்.

''நீ எக்கேடும் கெட்டுப்போ. எனக்கு சுகத்தைக் கொடுங்கறது காதலா?''

''ஒரு நாளுமில்லை.''

''லவ்வுன்றது இடைஞ்சலே பண்ணாது. லவ் வாழ வைக்கும். வதைக்காது. எப்ப வதைக்கத் துவங்கிடுச்சோ, அங்க லவ் இல்லேன்னு அர்த்தம்.''

''வீட்டுக்குப் போலாம் மாலதி.''

அவர்கள் பூட்டிக் கொண்டு கிளம்பினார்கள். மௌனமாய் பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தார்கள். அவள் பஸ் ஏறிய பிறகு, மறுபடி ஆபீசுக்குப் போய் வண்டி எடுத்துக் கொண்டு, கணேசமூர்த்தி வீட்டுக்குப் போனான்.

''மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே.'' அவள் அவனுக்கு வெள்ளி கீ செயின் கொடுத்தாள்.

''பொங்கலுக்கு புடவை எடுத்தாச்சா?''

''இல்லீங்க. இனிமேதான் எடுக்கணும்.

''நான் ரொம்ப தேடி தேடி ஒரு புடவை எடுத்தேன். என்னுடைய கீழ் டிராயர்ல இருக்கு. அப்புறம் எடுத்துக்கங்க.''

''கடவுளே, ஆயிரத்து ஐநூறு ரூபாய் விலையா? இதுக்கு வீட்டுக்கு எப்படி கணக்கு சொல்வீங்க? தயவு செய்து இந்த மாதிரி இனிமே வாங்காதீங்க. என்கிட்ட நல்ல புடவை இருக்கு. காஸ்ட்லி புடவை இல்லை.''



''அதே கடைல உன் பேர்ல சீட்டு சேர்ந்திருக்கேன். பன்னெண்டு முன்னூறு ரூபா செக்கு எழுதிக் கொடுத்துட்டேன். அடுத்த தீபாவளிக்கு நீ நாலாயிரத்து ஐநூறு ரூபாய் புடவை வாங்கிக்கலாம்.

''எனக்கு காஸ்ட்லி புடவை பிடிக்காதுப்பா.''

''எனக்குப் பிடிக்கும். தயவு செய்து கட்டிக்க...''

அவள் ஆயிரத்து ஐநூறு ரூபாய் புடவையை பொங்கல் விடுமுறை கழித்து கட்டிக் கொண்டு வர, அலுவலகம் பாராட்டியது.

அவள் தேனீர் இடைவேளையின் போது, அடிக்குரலில் கேட்டாள்.

''எப்படி இருக்கு?''

''எனக்கு அடுத்ததா ஒரு ஜென்மம் வேணும். அப்ப நீதான் பொண்டாட்டியா வரணும். அப்ப நிறைய காசு சம்பாதிக்கணும். உனக்கு நகையா, புடவையா வாங்கிக் கொடுத்துகிட்டே இருக்கணும். உன்னை அன்பால திணற திணற அடிக்கணும். அப்ப நீ என்ன செய்வே?''

''தாங்க முடியாத செத்துப் போயிடுவேன். மூணே மூணு வருஷம் குடித்தனம் பண்ணிட்டு, போதும் டாப்பா உன் அன்புன்னு மாரடைச்சு செத்துப் போயிடுவேன்.''

''நான் சாகமாட்டேன். இன்னும் நிறைய சம்பாதிப்பேன். உன் பேரால பள்ளிக்கூடம் நடத்துவேன். ஆஸ்பத்திரி கட்டுவேன். எல்லா இடத்திலும் பத்தடிக்கு பத்தடி உன் படம் மாட்டுவேன். நான் உயிரோட இருக்கிற காலம் முழுக்க எரியற மாதிரி அணையா விளக்கு ஏத்தி வைப்பேன்.

அவள் விலகி நகர்ந்தாள். வேற செக்ஷன் மாற்றிக் கொண்டாள். டீ குடிக்கிற நேரம் மட்டும் பார்த்து கொண்டாள்.

''ஒரு மாசம் லீவு.''

''ஏன்?''

''கர்ப்பப்பை எடுக்கறாங்க.''

''கடவுளே'' கணேசமூர்த்தி கூவினான். கவலைப் பட்டான்.

அறுவை சிகிச்சை அன்று, காலையில் போய் பார்த்து தைரியம் சொன்னான்.

''ஒரு வேளை நான் செத்துட்டா மூணு நாள் அணையா விளக்கு ஏத்துங்க போதும். உங்க வீட்ல ஏத் துங்க போதும்.''

அவள் பேச, தொண்டை அடைத்து, நின்றான்.

# 20

''எனக்கு உன் கட்டுரை ஒண்ணும் புடிபடல. பொண்டாட்டிக்கு அப்புறம் வேற ஒரு பொண்ணோட சங்காத்தம் ஏற்பட்டுதுன்னா வெச்சுக்கலான்றியா இப்ப வேணான்றியா?''

நாலு வார கட்டுரையைப் படித்துவிட்டு சட்டையைப் பிடித்து உலுக்கி யாருக்காவது கேட்கத் தோன்றும்.

பெருமைக்கும், ஏனைய சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் என்று ஒரேயொரு வாக்கியம் பதில் சொல்லி தப்பித்துப் போகலாம். இந்த மரபு மீறலை அனுபவக்கிறவர்களுக்கும், அனுபவிக்க ஆசையுள்ள வர்களுக்கும் இன்னும் சற்று விளக்கிச் சொல்ல ஆசைப் படுகிறேன்.



ஆண்களும் பெண்களும் நேருக்கு நேர் சந்தித்துப்பேசி, அருகருகே அமர்ந்து வேலை செய்து, ஒன்றாகப் பயணப் பட்டு, விட்டேத்தியாய் உணவருந்தி, தனக்கு நடக்கும் நல்லது கெட்டதுகளைப் பரிமாறிப் புழங்கும் இந்தக் காலத்தில் இது பற்றி உரக்க சிந்திக்கத்தான் வேண்டி இருக்கிறது. இதன் சாதக பாதகங்களை அலசி பேச வேண்டிய அவசியம் இருக்கிறது.

இதெல்லாம் தேவைதானா? என்று கத்துகிற ஆட் களிடம் இந்த கள்ளத்தனம் அதிகம் இருப்பதைப் பார்க்கிறேன்.

ஒழுக்கக்கேட்டின் உச்ச நிலையில் இருப்பவர்தான், ஒழுக்கக்கேடு தொடர் பற்றி ஓடிவந்து ரகளை செய்கிறார். மரபுகள் மாறிக் கொண்டே இருக்கின்ற இந்தக் காலத்தில் எதைப் பற்றியும் கூர்மையாகவும் பொறுமையாகவும் சிந்திப்பது நல்லது.

இருபது வருடங்களுக்குள் ஓரினச் சேர்க்கை சரியென்று இந்தியாவில் சட்டம் வந்துவிடக்கூடும். இதற்கு முகம் சுளிக்க வேண்டாம், விதவா விவாகம் இப்போது எவ்வளவு எளிதாகிவிட்டது. திருமணமான பெண்ணை எச்சில் என்று இந்த சமூகம் எவ்வளவு மடத்தனமாகப் பேசியது. பெண் திண்பண்டமா, பணியாரமா? மாங் காயா? ஆனால் ஆண்களுக்கு இந்த பட்டம் தருவதே இல்லையே.

பரத்தையிடம் போகின்ற ஆண் பற்றி இரண்டாயிரம் வருஷத்துப் பாடல்கள் இருக்கின்றன. புருஷனைவிட்டு இன்னொரு ஆணிடம் போகும் பெண் பற்றி ஏன் பாடல் களே எழுதவில்லை? ஒரு வேளை ஆணுக்கொரு மரபு. பெண்ணுக்கொரு மரபா? பெண் தாண்டினால் நரகம். ஆண் தாண்டினால் கம்பீரமா? ஆனால் அப்படித்தான் தமிழ், பாரத, உலக மரபு இருந்து வந்திருக்கிறது.

சென்ற நூற்றாண்டுகளில் ஆணாதிக்கம் உலகமெங்கும் கொடிகட்டிப் பறந்திருக்கிறது. பதினெட்டு முழப் புடவையும், பர்தாவும், இடுப்பு சுற்றி வளையம் கட்டின பெரிய கவுனும், நடக்க முடியாமல் கால்களை நசுக்கின கட்டைச் செருப்பும், மண்டியிட்டு மண்டியிட்டு வளைந்த முதுகும், மரபு மீறல் பிரச்சினைகளையே கொண்டு வர முடியாமல், அழித்து வைத்துவிட்டன.

குற்றம் சாட்டப்பட்ட குலப்பெண்கள் சூல இலைச்சினை இட்டுக்கொண்டு தேவரடியார்களாக மாறிவிட்டார்கள். பொது மகளிராகப் பணிபுரிந்தார்கள் என்று சரித்திரம் சொல்கிறது. கடைசி மூச்சுவரை யாராலும் காதலிக்கப்படாமலேயே, யாராலும் கருணையாய் கவனிக்கப்படாமலேயே பல பெண்கள் மரணமடைந்திருக்கிறார்கள்.

கிராமத்தின் வயல்களுக்கப்பால் உலகம் முடிந்துவிட்டது என்று நினைத்தபடியே செத்துப்போன பெண்கள் இருக்கிறார்கள். இனி இப்படி யாரும் இருக்கப் போவதில்லை. காலம் மாறிவிட்டது. நாற்பது சதவிகிதப் பெண்களுக்குப் பொருளாதார விடுதலை கிடைத்திருக்கிறது.

'சரி, விஷயத்தை தெளிவாகச் சொல், மனைவியைத் தவிர மற்றொரு பெண்ணைக் காதலிக்கலாமா கூடாதா?'

'ஆஹா. தாராளமாகக் காதலிக்கலாம். ஆனால் காதல் வந்தபிறகு என்ன செய்யப்போகிறீர்கள் என்பதே கேள்வி. காதல் என்றால் என்ன என்பது பற்றி தெளிவாக இருங்கள் என்பதே வேண்டுகோள்.

காதல் என்பது நட்பு. நல்லதொரு சிநேகிதம், எவரிடம் பூத்தாலும் அதற்கு இதுதான் அர்த்தம். பரஸ்பர உதவி, ஒருவருக்கொருவர் இடைஞ்சல் இல்லாத வளர்ச்சி என்பதே அர்த்தம்.



இது மனைவியிடமும் இருக்கலாம். மனைவி அல்லாத பெண்ணிடமும் இருக்கலாம்.

காதலிக்கிறவரை அதாவது நண்பரை ஏமாற்ற மனம் துணியுமோ? மனம் துணிந்தால் அது காதலோ? உன்னை மிகவும் பிடித்திருக்கிறது என்று உறுதி சொன்ன பிறகு பொய் சொல்லவும் ஏமாற்றவும் என்ன இருக்கிறது. பித்தலாட்டத்தில் என்ன நியாயம் இருக்கிறது. வாழ்க்கையில் எல்லோரிடமுமா இயைந்து போக முடியும் எல்லோரிடமுமா நெருக்கமாக இருக்கமுடியும். எல்லோரிடமுமா கொண்டாட முடியும்.

ஒரு நான்கைந்து பேரோடுதான் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள இயலும். அந்த நாலைந்து பேரில் மனைவியும் ஒருவராக இருந்தால், அது மிகப்பெரிய அதிர்ஷ்டம். இல்லாது போனால், அது பெரிய இழப்புதான்.

ஆனால் வேறு எங்கேனும் காதல் தோன்றினால், அந்த நட்பை மிக மரியாதையாக, கவனமாகக் கையாளும் திறன் வேண்டும்.

சீச்சீ என்று மறுத்தல் நலமல்லவா. எனக்கு வேணாம் சாமி என்று ஒதுங்கிக் கொள்வது விவேகம் அல்லவா?

இந்த எலி ஓட்ட வாழ்க்கையில் காதலிப்பதும், காதலிக்கப்படுவதும் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம். இதை விலக்குவது வீரமற்றது. தன்னை நேசிப்பவரை தானும் நேசிப்பதே கம்பீரமானது. உடற்கவர்ச்சி இதற்கு ஆதாரமாக இருக்கமுடியாது. மூன்று நாள் வயிற்றுப்போக்கு எப்பேர்ப்பட்ட உடற்கவர்ச்சியையும் முடிவுக்கு கொண்டு வந்துவிடும். ஏறெடுத்துப் பார்க்காவண்ணம் செய்துவிடும்.

காதலில் மனம்தான் கவர்ச்சி, மனத்தின் வெளிப்பாடு பேச்சு, செய்கை.

பேச்சுக்கு வயசே இல்லை. செய்கை நீங்கள் செத்துப் போன பிறகும் நிற்பது. இந்த வெளிப்பாட்டில் தோன்றும் காதல்தான் வெகுநாள் தொடரும். எனவே இந்தக் காதலை அதாவது நட்பை சம்பந்தப்பட்டவருக்கு காயம் நேராதவாறு காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

அடிக்கடி சந்தித்தால் பிரச்சினையா? வேண்டாமே. எப்போதேனும் சந்திப்போம். பரிசுகள் பரிமாறினால் இடைஞ்சல் வருமோ? பார்த்து கை கூப்பும் பரிசை விட வேறு ஏதேனும் பரிசு உண்டா?

''அப்படியானால் இந்தக் காதலுக்கு என்னதான் அர்த்தம்? சந்திக்க முடியாதபோது நினைத்துக் கொண்டு சிரமப்படுவானேன்? அறுத்து எறிந்துவிட வேண்டியது தானே.''

அறுத்தெறிந்தால் இன்னும் வலிக்கும். வெறும் வெறுமை சேரும். மனிதர்களைப் புறக்கணித்துவிட்டு நாயும், பூனையும் வளர்த்து கொஞ்சுவீர்கள். வாழ்க்கை வெறும் தீமிதி போல் ஆகிவிடும். காதலை நட்பாக்கிக் கொள்ளுங்கள். ஆண், பெண் நட்பு சாத்தியம் என்பதை உணருங்கள்.

காதலித்தவரின் சூழ்நிலை புரிந்து, அவர் சந்தோஷம் பற்றி கவனமாக இருங்கள். காதலென்பது சுயநலம் அல்ல. அது ஒரு கவனமான அன்புப் பரிமாற்றம். தெளிவான வாழ்க்கை.

மனிதன் பட்டைக் கட்டிக் கொண்ட குதிரை அல்ல. பதுங்கி ஒளியும் ஓநாய் அல்ல. நல்ல மனிதன் யானைக்கு



சமம். எவ்வளவு வலிவு இருந்தாலும், அதை வெளிக் காட்டிக் கொள்ளாது குழந்தையின் தலையில் கை வைத்து ஆசீர்வதிக்கும் யானையின் குணம். அதுதான் கம்பீரம்.

மாலதி செக்ஷன் மாற்றிக் கொண்டாள். அதே கட்டிடத்தின் வேறு கோடிக்குப் போனாள்.

''நீங்க எங்க போனாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. என் மனசுல இருக்கீங்க. உங்களால அந்த இடத்த விட்டுப் போகவே முடியாது. ஏன்னா, அது பூட்டி வெச்சிருக்கு''

அவள் காலையில் அந்த சீட்டுப் பக்கம் போய் குட் மார்னிங் சொல்வாள். ஏதேனும் மனக்குமுறல் இருப்பின் பிற்பகல் சொல்வாள்.

கணேசமூர்த்திக்கு சோர்வு வந்ததெனில்,

''டீ சாப்பிடலாம் வாங்க'' என்று போனில் அழைப் பாள்.

''எல்லாம் சரியாயிடும். விட்ருங்க. நங்கநல்லூர்ல சதுர அடி நானூறு ரூபாயாம். டக்குனு போயி ஒரு பிளாட் புக் பண்ணக் கூடாதா?'' அவனை உற்சாகப்படுத்துவாள். திசை திருப்புவாள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உண்டான கவர்ச்சியை முரட்டுத்தனமாக மறுக்கும்போது மனம் பேதலிக்கும். அவர்கள் ஓரினச் சேர்க்கை ஆட்களாகவோ, அல்லது வெறுப்படைந்து விஷம் கக்கும் மனிதர்களாகவோ மாறக் கூடும்.

அன்று ஒரு நாள் மாலதிக்கும், கணேசமூர்த்திக்கும் போதுமானதாக இருந்தது. அதற்குப் பிறகு உண்டான

எல்லா சந்திப்பிலும் மனம்தான் பேசியது. மனம் பேசாது உடல்தான் முக்கியம் என்று போயிருந்தால் விஷயம் வெகு சீக்கிரம் சந்தி சிரித்திருக்கும்.

காதல் என்றால் என்ன என்று அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். அதை அனுபவித்தார்கள். அதன் வளர்ச்சி கண்டு வளர்த்த அவர்களே வியந்தார்கள். இது தான் காதல் என்பதா என்று அவர்களே அதிசயப்பட்டார் கள். தான் தன் வாழ்க்கையில் நடந்து கொண்டே தன்னைப் பார்க்கின்ற சந்தோஷம் உலகில் வேறெதிலும் இல்லை.

முற்றும்

# ஞாபகச்சிமிழ்

# 1

உறவுகள் பற்றி சட்டென்று ஒரு சிந்தனை நேற்றிலிருந்து நெஞ்சில் புரள்கிறது.

உறவினர்கள் என்கிற அர்த்தத்தில் உறவுகள் என்பதை நான் சொல்லவில்லை. தொடர்புகள் என்பதாய் யோசிக்கிறேன். யார் யார் எனக்கு நெருங்கிய தொடர்பாய் இருந்திருக்கின்றார்கள் என்று சிந்தித்தேன்.

இவன்தாள் எங்கள் பள்ளிக்கூடத்திலேயே எனக்கு பெஸ்ட் பிரெண்ட் என்று அறிமுகப்படுத்தியவன் முகத்தை என் மூளைக்குள் தேடுகிறேன். நாடிமுத்து என்று அந்தப் பையனுக்கு பெயர். படிப்பில் மிகுந்த கெட்டிக்காரன். ஏழை. நான் மக்கு. நானும் ஏழை. அவனோடு பழகினால் எனக்கு படிப்பு வரும் என்று நானாகவே நினைத்து, நெருங்கிப் பழகி பள்ளிக்குப் போவதும் வருவதும் இருப்பதும் நாடிமுத்துவோடு என்று.வழக்கம் வைத்தும் எனக்குப் படிப்பு வரவில்லை. நாடிமுத்துவுக்குப் பாட்டு வந்து விட்டது. நான் மனனம் செய்து வைத்திருந்த திரைப்பட தேவார, திருப்புகழ், பாடல்கள் அவனுக்கும் மனனம் ஆகி விட்டது எஸ்.எஸ்.எல்.சி. வரை ஆறு வருட பழக்கம் கொண்டவன் முகம்கூட மறந்துவிட்டது. அதற்குப் பிறகு ஆங்கிலம் கற்றுக் கொடுத்த அலுவலக நண்பர் என்னை விடப் பத்து வயது பெரியவர். தன் தங்கையை எனக்கு

மணமுடிக்க விரும்பி என்னை தன் கட்டுப்பாட்டில் வைக்க ஆசைப்பட்டவர். நானும் அவ்விதமே ஐந்து வருடங்கள் இருந்தேன். அவர் பகல் உணவு உண்ணவில்லையெனில் நானும் சாப்பிடமாட்டேன். அவர் முகம் நினைவிலிருக்கிறது. இருப்பிடம் மறந்து விட்டது அக்கறை அகன்று விட்டது,

இருபது வருடங்கள் கழித்து இப்போது அந்த அலுவலக நட்பை நினைக்க பைத்தியக்காரத்தனமாய் இருக்கிறது.

அவர் தங்கைக்கு டெல்லியில் வேலையாய் இருப்பவரைத் திருமணம் செய்து வைத்து விட்டார். ஆறு வருட ஏழு வருட நட்பு கூட ரயில் ஸ்நேகிதம் போலக் காணாது போய் விடுகிறது. உயிருக்கு உயிரான நண்பர்கள் என்பதும் கூட ஒரு கால கட்டத்தில் உலர்ந்து போய் விடுகிறது.

வாரத்துக்கு இரண்டு முறை, நாலு வருடம் தொடர்ந்து வீட்டுக்கு வந்த ஒரு பெண்மணி என் குடும்பத்தோடு சகல உணர்வும் பகிர்ந்துகொண்டிருந்தவள் குழந்தைகளின் கேலிக்கு உணர்ச்சி வசப்பட்டு இப்போது வருவதேயில்லை.

சண்டையோடு பிரிந்தவர்கள், சண்டையின்றி சாதாரணமாய் மறந்து போனவர்கள் என்று ஒரு லிஸ்ட் போட்டால் நூறு பேர்களுக்கு மேல் போகும். மறுபடி எங்கோ என்றோ சந்தித்தால் பொய்யான மலர்ச்சி உதடு ஒட்டாத விசாரிப்பு என்று எனக்கும் அவருக்குமே ஏற்பட்டு விடுகிறது. மறுபடி ஒன்றாய் சில மணிநேரங்கள் கழிக்கும் நிர்பந்தம் ஏற்பட்டாலும் முந்தைய உணர்வு தாக்கம் வருவதில்லை.

இது ஏன்? உறவென்பது தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், மனைவி, மக்கள் என்பது தானா? நட்பு இதைவிட நல்ல உறவில்லையா?



நாற்பது வருடமாய் நண்பர்கள் என்று ஒரு ஜோடி சூழ்நிலை அவர்களைப் பிரிக்கவேயில்லை. பிரிய வாய்ப்பு வந்த போதும் அவர்கள் பிரியவில்லை. இது அபூர்வம் ஆனால் நிறையப் பேருக்கு இந்த நெடிய உறவு அமைவதில்லை. நீண்டகால நட்பு கிடைப்பதில்லை. யோசிக்க யோசிக்க எத்தனை நண்பர்கள் தெரியும். எப்படிப் பிரிந்தோம் என்று கணக்குப்போட வியப்புத் தான் ஏற்படுகிறது. வியப்புக்குக் கீழே ஒரு வேதனை வருகிறது.

நான் இப்போது எவரையும் உயிருக்கு உயிரான நட்பாய்க் கருதுவதில்லை. வருடக் கணக்கில் பழக நேரிடினும் நீயின்றி நானில்லை என்று நிற்பதில்லை. நீ சாப்பிட்டால் தான் நான் சாப்பிடுவேன் என்று உணர்ச்சிவசப்படுவதில்லை, மிக நெருங்கிய நண்பர் என்று இன்று எனக்கு எவருமேயில்லை. அவ்விதமாக எனக்கு எதிரி என்றும் யாருமில்லை. எவரையும் வெறுக்கும் சூழ்நிலை வரவில்லை. நான் நட்பற்று தனித்திருக்கிறேன். ஒரு வகையில் இது சுகம். சுதந்திரம்.

## 2

சமீபத்தில் ஒரு பெண்கள் கல்லூரிக்கு பேசப்போயிருந்தேன். கூட்டம் முடிந்து தங்குமிடம் திரும்ப, சில பேராசிரியைகளும், படிக்கிற பெண்களும் இன்னும் பேச வேண்டும் என்பதாய் காத்திருந்தார்கள். கூட்டத்தில் தான் கேள்வி பதிலாய் பேசிவிட்டோமே...இன்னும் என்ன பேச வேண்டும் என்று நான் கேட்க, கூட்டத்தில் பேச முடியாததை இங்கு பேசவேண்டும் என்று பதில் வந்தது.

எனது புகை வண்டிக்கு நேரமிருந்ததால் அவர்களுக்கு நடுவே உணவு எடுத்துக் கொண்டபடி பேசத்துவங்கினேன். சப்பாத்தியைப் பிய்த்து முதல் வாய் போட்டதுமே கேள்வி வந்து விட்டது.

''நீங்க ஏன் பாலா, சினிமாவுக்கு போனீங்க?''

''காசு சம்பாதிக்க'' நான் பதில் சொன்னேன்.

''காசு சம்பாதிக்க வேற வழியே இல்லையா? அந்த உழவு மிஷின் கம்பெனியிலேயே சிறிது நாள் வேலை செய்திருக்கக் கூடாதா?''

''நான் சினிமாவுல சேர்ந்ததில உனக்கு என்னம்மா கஷ்டம்?''

''நீங்க சினிமாவ கண்டிக்க முடியலையே... நீங்க சினிமாவுல இருக்கிறதானலயே அது ரொம்ப நல்ல விஷயங்கற மாதிரி பேசறீங்களே. சினிமாவில வர்ற முட்டாத்தனத்தெல்லாம் நீங்களும் ஆதரிக்க வேண்டியிருக்கே...''-ஒரு பெண் சீற்றத்துடன் பேசினாள்.

''சினிமா மேல இவ்வளவு கோபப்படற அளவுக்கு உனக்கு என்ன கெடுதல் சினிமா பண்ணுச்சு தாயி...''

''ஈவ் டீஸிங்'' பத்து பெண்கள் கோரசாய் பதில் சொன்னார்கள்.

''ஈவ் டீஸிங் ஒரு இயற்கை உபாதை. ஒரு வயதின் கோளாறு. சினிமாவோ, நாடகமோ இல்லாத காலத்தில் கூட ஈவ்டீஸிங் இருந்திருக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு தாஸியின் மார்பகத்தை பாக்குக் கொட்டை போலிருக்கிறது, இதை வைத்துக் கொண்டா இப்படி அலட்டுகிறாய் என்று ஒரு புலவன் கேலி செய்திருக்கிறான். வள்ளி இலைக்கறி விற்பாள்... இவள் மருங்குல் இன்று விடும் என்று முலைக்கு அறிவிப்பாரில்லையே என்றும் பாடியிருக்கிறான். இது ஒரு வகை ஈவ்டீஸிங்கோ



என்று எனக்குத் தோன்றுகிறது. இதை சாதாரணமாய் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் சினிமாவுக்கும், ஈவ் டீஸிங்கிற்கும் என்ன சம்பந்தம்?''

பெண்கள் நிறைய பாடலை, நிறைய வசனங்களை உதாரணம் காட்டினார்கள். அவைகளில் சில உடல் அழகை வர்ணிப்பதோடு நில்லாமல் கூடலுக்கு வா என்று அழைத்தன. அவை என்னென்ன, எந்தெந்த சினிமா என்று விவரிப்பது தேவையற்றது என்று நினைக்கிறேன்.

சரி... இதை மறந்து விடுவதுதானே... இவைகளை ஏன் சுமந்து திரிகிறீர்கள்? ஏன் ஒரு மனோ அவஸ்தையாய் இதை ஏற்றுக் கொண்டு பல்கடிக்கிறீர்கள்? என் எட்டு வயதில் ஒரு வாத்தியார் உள்ளங்கை சிவக்க பிரம்பால் அடித்தார். அவர் மீது நான் இன்னும் கோபம் கொண்டிருப்பது நியாயமா. ஆழயோசிக்க அவரை அறிவிலி என்று தான் ஒதுக்கத் தோன்றுகிறதே தவிர, பதிலுக்கு அவர் உள்ளங்கையைச் சிவக்க அடிக்க எனக்கு தோன்றவில்லையே என்று சொன்னேன்.

''உங்கள் உதாரணம் தவறு''-ஒரு பெண் தீவிரமாக மறுத்தாள். ''உங்களோடு இந்த லாபியில் பேசிக் கொண்டிருக்கிற சந்தோஷத்தை வெளியே போய் பஸ் பிடித்து நான் வீட்டுக்கு போவதற்குள் இழந்து வீடுவேனோ என்று பயமாயிருக்கிறது. பகல் பொழுதில் தள்ளி நின்று கேலி செய்கிறவர்கள் சற்று இருட்டியதும் மிக அசிங்கமாக நடந்து கொள்கிறார்கள், பஸ்ஸில் கூட்டம் என்பதை பயன்படுத்திக் கொண்டு கண்ட இடங்களில் கை வைக்கிறார்கள். ஆண் என்கிற ஆசையை அருவருப்பாய் மாற வைக்கிறார்கள். நாலுதரம் உரசினா, தானா படியும் என்று சொல்கிறார்கள். இட்லி, மெதுவடை என்றெல்லாம் சொல்கிறார்கள்''-அந்தப்பெண் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே விசும்பி, விசும்பி அழத்துவங்கினாள்.

என்னுள்ளும் ஒரு வேதனை பொங்கி தொண்டையை அடைத்தது. உடம்பெல்லாம் மலம் பூசியது போன்று கூனிக்குறுகி அந்த இளம்வயதுப்பெண் விம்முவது அதிர்ச்சியாக இருந்தது. மெல்ல அந்தப்பெண்ணின் விரல்களைப் பற்றி உலகத்திலுள்ள மிகப்பெரிய மகான்களை எல்லாம் நினைத்து, அந்த விரல்களை என் கண்ணில் ஒற்றிக்கொண்டேன். அந்த ஊரில் உள்ள எல்லா ஆண்களின் சார்பாகவும் என்னை ஸ்வீகரித்து, அந்த சின்னப்பெண்ணின் வேதனைக்கு மனசுக்குள் மன்னிப்பு கேட்டுக்கொண்டேன்.

நான் அவள் விரல்களைக் கண்ணில் ஒற்றிக் கொண்டது அந்தக் குழந்தைக்கு வியப்புக் கலந்த சந்தோஷமும்... 'நீங்க எதுக்கு என் விரலைக் கண்ல ஒத்திட்டு...' என்கிற வருத்தமும் தந்திருக்கக்கூடும். அந்தப்பெண் அழுகையை அடக்கி, என் எச்சல் தட்டை எடுத்துக் கொண்டுபோய் லாபியின் மூலையில் வைத்துவிட்டு, கை துடைக்கும் பேப்பர் வாங்கி வந்தது. கூஜாவிலிருந்து டம்ளரில் நீர் சரித்து எனக்கு குடிக்க நீட்டியது. ஒரு விநாடி நேரத்தில் அந்தப் பெண்ணின் முழு அன்பையும் நம்பிக்கையையும் நான் சம்பாதித்துவிட்டது தெரிந்தது.

யார் பெற்ற பெண்ணோ...எவர் குடும்பச் சொத்தோ... என் எச்சல் தட்டெடுத்து, எனக்குக் குடிக்க குளிர் நீர் கொடுத்து, கை துடைத்துக்கொள்ள காகிதம் நீட்டி... கேட்காமலேயே உபசரணை, கேட்காமலேயே நட்பு... எவ்வளவு சுலபமாய் வந்தது.

என் நரையும், வயசும் அவளுக்கு நம்பிக்கை தந்துவிடவில்லை. என் எழுத்தும் கவிதையும் அவளை புளகாங்கிதப்படுத்தவில்லை. அவள் வேதனையைப் புரிந்து கொண்டு முழுதாய் அங்கீகரித்தேனே. அதில் அந்தப் பெண் குழந்தை சட்டென்று மலர்ந்து விட்டாள்.



ஆம்பளையக் கண்டாலே அருவருப்பாய், பயமாய் இருக்கிறது என்றவள் உபசரிக்கத் துவங்கிவிட்டாள்.

தன்னை தாழ்த்திக்கொள்பவன் உயர்த்தப்படுவான்... தன்னை உயர்த்திக் கொள்பவன் தாழ்த்தப்படுவான் என்பது ஏசுவின் வாக்கு.

ஈவ் டீஸிங் என்பது தன்னை உயர்த்திக்கொள்ளும் திமிர். தன்னை சினிமாவில் ஒரு பேரழகனாய், வாலிபக் காளையாய், வட்டமிடும் பறவையாய், கொட்டிச் சிரிக்கிற தேனீயாய், எருமையாய், நாயாய் இன்னும் ஏதேதோவாய் தன்னை நினைத்துக் கொள்கிறவினை, வன்முறையால் வசப்படுத்தமுடியும் என்கிற திமிர்...நாலு நண்பர்கள் துணை இருக்கிறார்கள் என்கிற அகம்பாவம், கூடலைக் கனவிலேயே நிகழ்த்தி விடுகிற கழிவிரக்கம். நூன்ஷோ பார்த்தே வாழ்க்கை முழுவதும் ஒப்பேற்றி விடுகிற பகல் கனா.

இப்போதும் நான் சினிமாவைக் குற்றம் சொல்ல மாட்டேன். பாம்புக்கும்,கீரிக்கும் சண்டைவிட்டு,தாயத்து விற்கிறவன் விற்றுக்கொண்டுதான் இருப்பான். அந்தத் தகரக் குப்பி வண்டிமையை காசு கொடுத்து வாங்குகிறவன் தான் முட்டாள். துப்பட்டிக்குள் மாஞ்செடிகள் முளைத்துக் கொண்டுதான் இருக்கும். அதை விசிலடித்து கைதட்டி விட்டு இந்த தாயத்தைக் கழுத்துல கட்டு. கைல கட்டு. பொஜத்துல கட்டு ஆனா இடுப்புல மட்டும் கட்டாதே... என்கிற தாயத்து விற்பவன் வார்த்தையை வேதவாக்காய் எடுத்துக்கொண்டு வருபவன் அறிவிலி சொல்லிக் கொடுப்பவனை விட கற்றுக் கொள்பவனுக்குத்தான் ஞானம் வேண்டும். எதைக் கற்கிறோம் என்கிற தெளிவு வேண்டும். தன் தங்கையின் பிருஷ்டத்தை யாரேனும் தடவ இன்னும் நல்லா தடவு. அப்பத்தான் படியும் என்று தன்னால் சொல்ல முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

பல காணி நிலம் உழுது, பண்பட்ட கை பட்டு தலை காணி போலாச்சு மங்கை இவள் கொங்கை, என்று ஈவ் டீஸிங் செய்கிறவனது அம்மாவைப் பார்த்துப் பாடினால் பாடியவனுக்கு வெள்ளி டம்ளரில் பாயஸம் தர முடியுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அது தமிழ் பாட்டுத் தானே என்று தாயிடம் சமாதானம் பேச முடியுமா என்று சிந்திக்க வேண்டும்.

நீ ஈவ் டீஸிவ் செய்கிற பெண்ணும் எவனுக்கோ தங்கை, என்றோ ஒரு நாள் தாய், விற்பவனுக்கென்று நல்லதும் கெட்டதும் சந்தையில் மலிந்துதான் இருக்கும். வாங்குபவனுக்கு அறிவு வேண்டும். இந்த தேசத்துப் பெண்ணை ஜெயிப்பது ஒன்றும் கடினமான காரியமல்ல. தெளிவும், திடமும் உள்ளவனை பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு காதலிப்பார்கள்.

''உங்களுக்கு தெரியாது சார்...நாம கேலி பண்ண மாட்டமான்னு பொண்ணுங்க ஏங்குதுங்க. ஒரு நாள் பேசாத வந்தா, 'என்னாடி...மச்சினர் உர்ருன்னு வராரு... பஸ் டிக்கெட்டுக்குக் கூட காசு இல்லியாமா...' எல்லா சப்ஜெக்ட்டும் பனாலா...கன்னா பின்னான்னு பேசுதுங்க சார்...''

யாரேனும் எனக்கு எடுத்து அறிவுறுத்தக்கூடும். நான் மறுபடி சொல்கிறேன். ஒரு சந்தையில் நல்லதும் கெட்டது மாய் எல்லாமும் இருக்கும். தெருவில் கூடும் நாய்களைப் பார்த்துவிட்டு பாம்புப் புற்றுக்குள் முகம் பதித்து சாரை யும் நாகமும் என்ன செய்யும் என்று கவனிப்பாருண்டா? கவனித்தால் கொத்துப்பட நேரிடும். சிலரின் அழுகை பாம்பு கொத்துபோல. எங்கேனும் கடிபட்டுக் கதறப் போகிறீர்களே என்கிற ஆதங்கத்தில் சொல்கிறேன். தயவு செய்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

தன்னை உயர்த்திக் கொள்பவன் தாழ்த்தப்படுவான்.



# 3

அப்போது எனக்கு இருபத்து மூன்று வயசோ இருபத்தி நாலோ...நினைவில் இல்லை.

யூனிவர்ஸிடி எக்ஸாமினேஷன் ஹால் என்று அழைக் கப்படும் கட்டிடத்தின் முன்பு நானும் சீதாலட்சுமியும் நின்று கொண்டிருந்தோம்.

''இன்னியோட நாம சந்திக்கிறது கடைசி பாலா, அம்மா பயப்படறா. அப்பாகிட்ட உனக்காக நான் அடி வாங்கிச் சாக முடியாதுன்னு அழறா. எங்கம்மா நல்லவ பாலா. அவ அழறது என்னால தாங்கமுடியலை.''

''இதெல்லாம் முன்னால் யோசனை செய்திருக்கணும். ஒரு வருஷமா என்கூட பேசி சிரிச்சு பழகிட்டு பயமாயிருக் குன்னு நகர்ந்தா என் கதி என்ன...சொல்லு.''

''கஷ்டம்தான். தப்பு என்மேலதான். லவ் பண்ண ணும்னு ஆசை. நல்ல புருஷனா கிடைக்கணுமேங்கற கனா. ஐயோ, இதோ ஒரு நல்ல ஆம்பளைன்னு ஒரு குதியல். ஆனா இதெல்லாம் தாண்டி ஒரு பயம். அப்பா வுக்குப் புடிக்காதேன்னு ஒரு பயம். ஒழுங்கா ஆபீஸ் போய் ஒழுங்கா வீடு வந்தா, உன் பொண்ணு, நீ இந்த வீட்ல உசிரோட இருக்கலாம். ஏதாவது தப்பு தண்டா தெரிஞ்சுது. விறகுக் கட்டையாலேயே அடிச்சுக் கொல்லு வேன் ரெண்டு பேரையும்.''

அவள் அப்பா குரலை நாலுமாச முன்பே நான் காதாரக் கேட்டேன். எனக்கும் பயம். இந்த மனிதனை எப்படி சமாதானப்படுத்தி, இவரது பெண்ணை திருமணம் செய்து கொள்ளப் போகிறோம் என்கிற பயம். என் வீடு

அதிகம் முறைக்காது. முறைத்தாலும் விவரம் சொல்லி விளக்க என்னால் முடியும். அதேசமயம் சம்பிரதாயமான சடங்குகளுடன் திருமணம் செய்ய பெண்ணைப் பெற்ற வரைக் கேட்கும்.

''எங்க வீட்ல எனக்கு கல்யாணத்துக்கு பாக்கறாங்க சார்'' என்று ஒருமுறை சீதாவின் அப்பாவிடம் பேசினேன்.

''காபில சர்க்கரை வாரிக் கொட்டிருக்கா கடன்காரி... சர்க்கரை விக்கற விலைக்கு காபி குடிக்கறதையே வுட்ற லாம் போல இருக்கு'' என்று பதில் சொன்னார்.

திருமணம் காசு செலவழித்து செய்ய இயலாது. பெண் சம்பாதிக்கும் காசு முக்கியம் என்பது எனக்குப்புரிந்தது.

''நான் காத்திருக்க தயார், சீதா.''

''எங்கப்பா எப்போ சாவார்னா?''

''என்ன இது...ஒரு ஆறேழு வருஷம் கழிச்சு சரின்னு சொல்ல மாட்டாரா?''

''மாட்டார். அப்ப அவருக்கு வேலை இருக்காது. என் காசு இன்னும் தேவையா இருக்கும்.''

''பேசாம ரிஜிஸ்டர் மேரேஜ்...''

''வேணாம், அம்மா வீணா அடிபட்டு சாவோ...''

''அப்ப என்னதான் சொல்ற...?''

''போறும் பாலா. எனக்கு கொடுப்பினை இல்லை. அவ்வளவுதான். என் அம்மாவ விட உங்கம்மா பத்தியும் கவலைப்படறேன். உங்கம்மா டீச்சர். அவளுக்கு மதிப்பு இருக்கு ஊர்ல. உங்களுக்கு நல்லபடி கல்யாணம் செய்ய அவ ஆசைப்படறது நியாயம். அதுல அவளுக்கு சந்தோஷம். எங்க வீடு செய்யாது. நாமே ஓடறதும்,



ஒளிஞ்சு கல்யாணம் பண்றதும் எல்லாருக்கும் அவமானம் தரும். அவஸ்தை வரும் போறும் இது''

''என் கதி?''

''உங்க மனசு மாறும்...''

''வேறு யார் கூடயாவது சுத்த ஆரம்பிச்சுடுவடான்னு சொல்லாத சொல்றியா...''

''சுத்தினாலும் தப்பில்லை. சுத்தறது பெட்டர் சுத்தினா என்னை மறக்கறது ஈஸி.''

''உன் உபதேசம் தேவையில்லை.''

''யாருக்கும் உபதேசம் பண்ற யோக்கியதை எனக்கு இல்லை. தன் விஷயத்தை தான்தீர்மானிக்கிறவங்கத்தான் அடுத்தவங்களுக்கு உபதேசம் பண்ண முடியும். லவ்வுங்கற வார்த்தை சொல்லக்கூட சுதந்திரமில்லை எனக்கு. யாருகிட்ட போய் இப்படி பண்ணு. அப்படி பண்ணுன்னு சொல்ல முடியும். பிரார்த்தனை பண்ணிக்கலாம்.

''முடிவா என்ன சொல்ற சீதா?''

''மறந்துடலாம்.''

''சுலபமா அது.''

''ட்ரை பண்ணலாம் மறக்க.''

''உன்னால முடியுமா?''

''முடியும்.''

''எப்படிக் சொல்ற...''

''எட்டு வயசுல பட்டுக் குஞ்சத்துக்கு ஆசைப்பட்டேன் இப்ப மறந்து போச்சு. பதினைஞ்சு வயசுல நல்ல ஜாமெட்ரி பாக்ஸுக்கு ஆசைப்பட்டேன். இப்ப தேவை

யில்லாத போச்சு. பதினோரு வயசுல மேடைல கர்னாடிக் மியூசிக் பாடணும்னு ஆசைப்பட்டேன். இப்ப கேட்கறதே விட்டுப் போச்சு. நேரமின்மை. தேவையின்மை. பிடித்த மின்மைன்னு நிறைய விஷயம் வளர வளர வரும். அப்ப பழக மறந்து போகும். உன் பேர் என்ன எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கேன்னு நீங்க என்னை கேட்கறநாள் வரும்.''

''சரி, உன் வீடு எனக்குப் புரியறது. ஒரே ஒரு வேண்டுகோள். நல்லதா ஒரு பாட்டு பாடிட்டு போ.''

''என்ன செய்தாலும் எந்தன் துணை நீயே

என் அன்னையே உமையே

என்னை... நீ

என்ன செய்தாலும் எந்தன் துணை நீயே...''

## 4

அகிரா குரோசாவாவின் 'எஸவான் சாமுராய்' ஜப்பானிய தூதரக அலுவலகம் இலவசக் காட்சியாய் சென்னையிலுள்ள சோவியத் கல்சுரல் சென்டரில்திரையிட ஏற்பாடு செய்திருந்தது. வழக்கம் போல் நல்ல கூட்டம் சினிமா தெரிந்தவர்களின் கூட்டம்.

வெகு நாளைக்குப் பிறகு டைரக்டர் மகேந்திரனை அங்கே சந்திக்க நேர்ந்தது. ஆவலோடு அவர் கைகளைப் பற்றிக் கொண்டேன். அவருடைய முள்ளும் மலரும்; 'உதிரிப்பூக்கள்' போன்றவை என்னுள் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியவை. அமைதியாய் கதை சொல்லும் நேர்த்தியும், தைல ஓவியமாய் காமிராவை



நிறுத்தி வைக்கும் சாமர்த்தியமும், உணர்ச்சித் தூக்கலான இடங்களில் பேசாமல். நடிகர்களைப் பேசவைக்கும் சாமர்த்தியமும் அவர் மீது எனக்குப் பெரும் மதிப்பை ஏற்படுத்தியவை. ஆரம்ப குசலங்களுக்குப் பிறகு எங்கள் பேச்சு அவரவரின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றித் திரும்பியது. பாப்புலராக இருப்பது சொந்த வாழ்க்கையைப் பாதிக்கிறதா என்பது போன்ற கேள்வியை மகேந்திரன் கேட்டார்.

''இல்லை மகேந்திரன். பாதிக்கக்கூடிய அளவுக்கு நான் பாப்புலரில்லை. எழுத்தாளன் பத்து சதவீத மக்களுக்கே பரிச்சயமானவன். அந்த பத்து சதவீதமக்கள் பாதிப்பு ஏற்படுத்தாதபடிதான் பழகுகிறார்களே தவிர அவர்களால் தொந்தரவு ஏதுமில்லை.''

''உங்கள் எழுத்தை சமூக அந்தஸ்தால் எடைபோட்டு விடுவார்களே.''

''ஆமாம். என்ன இன்னும் மாருதி வாங்கவில்லையா என்று கேட்கிறார்கள்.''

''சபாஷ் இப்படிக் கேட்கிறபோது என்ன பதில் சொல்வீர்கள்.''

''வாங்கும் வசதியில்லை என்று ஒத்துக் கொள்வேன்''

''கேட்டவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்களே.''

''ஆமாம். கொஞ்சம் வினோதமாகத்தான் பார்க்கிறார்கள்.''

''இந்த வேதனை தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கிறது பாலா.''

''சிம்ப்ளிசிடி என்கிற வார்த்தையை ஏழ்மை என்று கொள்கிறார்கள். தெருவில் நடந்து போனால் ஏன் டைரக்டர் மகேந்திரன் நடந்து போனார் என்று கேட்

கிறார்கள். இருநூறு மைல் தொலைவிலுள்ள கேரளத்தில் இந்த சிம்ப்ளிசிடி மிகக் கண்ணியமாகப் புரிந்து கொள்ளப் படுகிறது. மிக இயல்பாக இருக்கிறது. பந்தா என்கிற வார்த்தை தமிழில் மட்டுமே இருக்கிறது என்று தோன்றுகிறது.''

''நான் இதை அலட்சியப்படுத்தி விடுகிறேன், மகேந்திரன் சார். என்ன செகண்ட் க்ளாஸ்லபோகிறீர்கள் என்று கேட்கிறார்கள். திருச்சிக்குப் போனாலும் எழுத்தாளன் விமானத்தில் தான் போகவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இவர்கள் எதிர்பார்ப்புகளுக்காக என்னை நான் மாற்றிக் கொள்வதில்லை.

''நானும் அவ்விதமே. ஆனால் இவர்கள் எதிர்பார்ப்பு ஒருவித எரிச்சலைக் கொடுக்கிறது. மனைவி நகையை அடகு வைத்து காருக்கு பெட்ரோல் போடுகிற கட்டாயத் தில் சிக்க வைக்க முயலுகிறார்கள். ஆட்டோ ரிக்ஷா மட்டம் என்று நினைக்கிறார்கள். இங்கு மட்டும் இந்த எதிர்பார்ப்பு ஏன் என்கிற ஆச்சரியம் எனக்கு அடிக்கடி தோன்றியதுண்டு. அதனால்தான் உங்களிடம் இந்தப் பேச்சைத் துவங்கினேன்.''

அவர் பேச்சைத் தொடர்ந்து நானும் யோசனை செய்ய ஆரம்பித்தேன். எளிமை என்ற வார்த்தை தமிழகத்தில் ஏழ்மை என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. கைகூப்பலைக் கூடக் கர்வமாகச்செய்யத் தான் நிறையப் பேர் பயின்று வருகிறார்கள். இது அரசியல்வாதிகளிடமிருந்து சினிமாக்காரர்களுக்கு வந்ததா அல்லது சினிமாக்காரர்ளிடமிருந்து அரசியல்வாதிகளுக்குத் தொற்றிக் கொண்டதா என்பது பட்டி மன்றத்திற்குரிய விஷயம். காமராஜரின் எளிமைதான் அவருடைய தோல்விக்குக் காரணம் என்று ஒரு பழுத்த அரசியல்வாதி பேசியது எனக்கு ஞாபகம் வந்தது. விழாக்களை வெற்றி கரமாக நடத்தித்தரவே சில செயல்வீரர்கள் உண்டு.



''உங்களுக்கு ஒரு விழா நடத்தணும். எப்ப நடத்தலாம்'' என்று எப்பொழுதும் என்னைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களை நான் அறிவேன். விழாவால்தான் என்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியுமெனில், என் எழுத்தின் மீது எனக்கே நம்பிக்கையில்லை என்றுதான் அர்த்தம். எளிமையாய் இருப்பதில் ஒரு இதமான விஷயம் என்னவெனில் அது எல்லோரோடும் ஸ்நேகம் கொள்ள வைக்கிறது. அந்த ஸ்நேகம் எனக்குப் புதுப்புது கதைகள் தருகிறது. என் கதைகளே என்னைக் கம்பீரமாக்கு கின்றன. நான் எளிமை என்கிற ஆயுதத்தை அறுத்துக் கொள்வதாய் இல்லை.

# 5

அன்று வியாழக்கிழமை பூஜை மாடம் துடைத்துக் கொண்டிருந்தேன். உள்ளே இருக்கும் சிறிய விக்கிரங்களை என் மனைவி, புளி போட்டுத் தேய்க்க எடுத்துப் போகும் போது, நான் படங்களை ஈரத்துணியில் துடைத்து நிர்மால்யங்களை அள்ளி தனியே வைத்து, மரமாடத்திற்கு பாலிஷ் போட்டேன். வாசல் மணி ஒலிக்க என் நண்பர் வந்தார்.

ஏதோ சந்தேகமாம்... பேச வேண்டுமாம்.

''வீட்ல அந்த வேலையெல்லாம் பார்த்துக்குவாங்க. வாங்க டீ சாப்பிட்டுகிட்டே பேசலாம்'' வற்புறுத்தினார்.

''வீட்ல இருக்கறவங்களுக்கு வேற வேலை இருக்கு தோழரே. இது என் வேலை. இருங்க அரை மணில வரேன்.''

நான் உடனே வராத கோபம். அவர் வாய்பேச்சை அதிகமாக்கியது.

''ஒரு ரைட்டரு. ஊரு உலகத்துக்குத் தெரிஞ்ச மனுஷன், இப்படியா லுங்கியும் துண்டுமா துடைச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கிறது.''

''எனக்கென்ன கொம்பா முளைச்சிருக்கு...ரைட்டர்னா அவன் எழுதிக்கிட்டே இருக்கணுமா?''

''இதே லேடீஸ் யாரும் வந்தா சட்டுன்னு சட்டை போட்டுக்கிட்டு பேச உட்காந்துருவல்ல?''

''இல்லை. என் வீட்டு வேலையை விட, என் மனைவிக்கு உதவி செய்யறதை விட எதுவும் முக்கியம் இல்லை''

''பந்தா இல்லைன்னா ஊரு மதிக்காது. இப்படி சமையல்காரன் மாதிரியா ஒரு ரைட்டர் நிக்கறது. அசிங்கமா இருக்குப்பா''

என் மனைவி என்னருகே வந்து ''நான் மாடம் துடைச்சுக்கறேன் நீங்க போங்க'' என்றாள்.

எனக்கு மனமில்லை. ''இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் வீட்டை விட்டு வெளியே வர'' என்று வேலை நேரத்தை அதிகப்படுத்தினேன். நண்பர் விடைபெற்று சட்டென்று வெளியேறினார். வெளியேறலில் ஒரு கோபம் தெரிந்தது.

நான் எவ்வளவு பெரிய கொம்பனாய் ஆனாலும் வீட்டை நேசிப்பதை விட்டு விலகியதில்லை. மற்ற வேலைகளுக்கு ஆட்கள் இருப்பினும், இம்மாதிரி வேலைகளை நாங்களே செய்வதில் எங்களுக்கு விருப்பம் உண்டு.

இது தவிர வீடு என்பதற்கே முதலிடம் என்பது என் அசைக்க முடியாத கொள்கை. மனைவியை தவிக்க விட்டு விட்டு நண்பர்களோடு அரட்டையடிப்பதும், நண்பர்களை



விருந்துக்கு வரச் சொல்லி, மனைவியிடம் விருந்து தயாரிப்பை விடுதலும் எனக்குப் பிடித்தமில்லாதவை. என் குழந்தைகளை வெளியே அழைத்துப் போகிறேன் என்று வாக்குறுதி அளித்து விட்டு, என் நண்பர் வர. நாளைக்கு போகலாம் என்று ஒரு வார்த்தையில் அவர்களை அதட்டிவிட்டு வெளியே போக என்னால் முடிவதில்லை.

எனக்கு என் வீடு முக்கியம். என் குழந்தைகள் முக்கியம். வீட்டைப் புறங்கணித்து விட்டு வெளியே உல்லாசமாய் இருக்க என்னால் இயலுவதில்லை.

வந்து கோபித்துப் போன நண்பர் உட்பட பல பேர் வீட்டை சோறு தின்று தூங்கும் இடமாகவே கொள்கிறார்கள். வீட்டிலுள்ளவர்களை விட வெளியே உள்ள மனிதர்களை மேன்மைப்படுத்துகிறார்கள். என்னால் வீட்டு வேலையெல்லாம் செய்ய முடியாது என்று ஆத்திரம் காட்டுகிறார்கள்.

மாறாய் எனக்கு என் வீட்டு வேலை மகிழ்ச்சியைத் தருகிறது. பரண் ஒழிப்பாதோ, புத்தக அலமாரி மீண்டும் அடுக்குவதோ, குழந்தைகளிடம் படம் வரையச் சொல்லித் தருவதோ, இரண்டு ஓவர் பந்து போடுப்பா என்றதும் பையனுக்கு பேட்டிங் செய்ய உதவியாய் பந்து போடுவதோ, மேல் தொட்டி கழுவ ஆள் கூட்டி வந்து அதை மேற்பார்வை செய்வதோ எனக்கு விருப்பமான விஷயங்கள்.

என் வீடு இதில் சந்தோஷமடைகிறது. என் அண்மையில், அக்கறையில் மகிழ்ந்து, என்மீது இன்னும் அன்பு காட்டுகிறது. அவர்கள் அன்பு செய்ய இன்னும் உதவிகள் செய்யும் எண்ணம் ஏற்படுகிறது.

பந்தா என்கிற வார்த்தையில் எனக்கு ஒப்புமை இல்லை. எப்போதுமே பளபளக்க நிற்பதில் ஒரு உயர்த்தி ஏற்படுகிறது. வெளிவேஷம் போடுவது என்னை நானே

அவமானப் படுத்துகிற விஷயமாய் தோன்றுகிறது. என் இயல்பு கெட்டுப் போகிறது. எனக்கும் என் வீட்டிற்கும் அன்னியனாய் நான் மாறுகிறேன்.

'வீடு என்பதை தலையில் தூக்கி வைத்து ஆடினால் வீட்டுத் தலைவன் மதிப்புக் குறையும். விட்டேத்தியாய் இருப்பதே விசேஷம்' என்று ஒரு வாக்குவாதத்தில் எனக்குச் சொல்லப்பட்டது. நான் வாய்மூடி அங்கே மௌனியானேன். அதிகாரத்தில், அலட்டலில் எதுவும் பணியாது. அன்பே உறுதியான கட்டு.

அன்று என்னிடம் கோபித்த நண்பர் இன்று என் எழுத்தை மட்டம் என்று வெளியே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஜெயகாந்தன் கால்தூசுக்கு ஆவானா பாலகுமாரன். அரைவேக்காடுப் பசங்களுக்கு அரைவேக்காடா எழுதறான் என்று பேசுகிறாராம். பேசவே வீடு வீடாய் போகிறாராம்.

எனக்குக் கவலையாய் இருந்தது.

என்னைப்பற்றியல்ல. அவர் சொல்லும் குறைகளை பற்றியல்ல. அவர் வீடுபற்றி அவர் குழந்தைகள் பற்றி...

# 6

எனக்கு நண்பர் ஒருவர் உண்டு. சொந்த வீடும், நல்ல உத்யோகமும் இரண்டு குழந்தைகளும், பிரியமான மனைவியும் அவருக்கு இருக்கிறார்கள். நாற்பத்தைந்து வயதாகும் அவர், நண்பர்களை மிகவும் நேசிக்கும் சுபாவமுடையவர். நேசிப்பு என்றால் சாதாரண நேசிப்பு அல்ல,



''சாப்பிட வாருங்கள், சாப்பிட வாருங்கள்'' என்று நச்சரிக்கும் நேசிப்பு, இன்றிரவு ஈரோடு போகிறேன். பின்னொரு சமயம் பார்த்துக் கொள்கிறேன் என்று மறுத்தால், எந்த வண்டி என்று கேட்டு காரெடுத்து ஸ்டேஷனுக்கு வந்து விடை கொடுக்க வருவார். எதற்கு இவ்வளவு சிரமம் என்று கேட்டால் இதில் ஒருசிரமமும் இல்லை என்றுவண்டி கிளம்பும் வரை பேசிக்கொண்டிருப்பார்.

ஒரு முறை நச்சரிப்புத் தாங்காமல் வீட்டுக்குப்போனேன். நான் மட்டும் தனியாகப் போனேன். நண்பரின் குடும்பத்தைத் தவிர மூன்று குடும்பங்கள் என் வரவுக்காகக் காத்திருந்தன. கிட்டத்தட்ட பதினைந்து பதினாறு பேர் சாப்பிட்டோம். எது பற்றியும் முழுமையாகப் பேசாமல், ஒருவரையொருவர் தெளிவாகப் புரிந்து கொள்ளமல் கொஞ்சம் பேச்சு, கொஞ்சம் சாப்பாடு. கொஞ்சம் சிரிப்பு என்று நேரத்தைக் கழித்தோம்.

''ரஜினி ஒரு படத்துக்கு எழுபத்தைஞ்சு லட்சமா வாங்கறார் என்ன சார் செய்வார் அந்த காசை?'' என்கிற மாதிரி கேள்விகள். அதற்கு என்னபதில் சொல்வதென்று தெரியாமல், என் தலையாட்டல்களாய் விருந்து கழிந்தது. விருந்துக்கு வந்த மற்ற குடும்பத்தினர் எவருக்கும் கதை படிக்கும் வழக்கமில்லை. நண்பர் கூப்பிட்டாரே என்ற கட்டாயத்திற்காக வந்தவர்கள். என் வரையில் மூன்றுமணி நேரம் முழுமையான வேஸ்ட், அந்த வீட்டு அம்மாள் கிட்டதட்ட ஏழு, எட்டு வகை உணவுகளுக்கு நாலு. ஐந்து மணிநேரம் செலவழித்திருக்க வேண்டும். அன்று அந்தக் குழந்தைகளுக்கு படிப்பு பாழாகியிருக்க வேண்டும்.

அன்று யாரும் அதைக் குறையாகச் சொல்லவில்லை. சொல்ல பயமோ என்னவோ, நண்பர் என்னோடு ஒரு முறை திருவண்ணாமலை வரவேண்டுமென்று ஆசைப் பட்

டார் உங்களுக்கு வேண்டுமெனில் நீங்கள் போங்கள். என்னுடன் வருவது வேண்டாமென்று சொல்லி வைத்திருந் தேன். ஆனால் அவருக்கு என்னோடு நெடுந்தூரப் பயணம் செய்யவேண்டுமென்று ஆசை, ஒருமுறை என் பிரயாணத் திட்டத்தை என் மகனிடம் கேட்டுக் கொண்டு என்னோடு மங்களூருக்கு வண்டியில் ஏறினார்.

என் மேல்பர்த் ஆளை தன் இடத்திற்கு மாற்றி, என் அருகே அமர்ந்து கொண்டார். வழியெல்லாம் பேச்சு, வகை தொகையேயில்லாத பேச்சு ஊர் புராணம், சினிமா கதை இன்னொருவரின் அந்தரங்க வாழ்க்கை, எதிர் சீட் ஆளிடம் பேச்சுக் கொடுத்து, அவர் ஹோட்டல் பிசினஸ் பற்றி நீண்ட விவாதம். எனக்கு அவர் சப்தம் தாங்கவே முடியவில்லை. என் மனசு ''ஹோ'' என்றிருந்தது. எதையுமே சிந்திக்காமல், கண்ணில்பட்ட பொருளோடு மனசு பின்னாமல் வெறுமே ஒரு நிசப்தத்தை நோக்கிமனசு போய்க் கொண்டிருந்தது, நண்பர் என் நிசப்தத்தை அடிக்கடி கலைத்தார். இந்த ஊரில் அது நன்றாக இருக் கும். அந்தஊரில் அது நன்றாக இருக்கும் என்று வழி யெல்லாம் தின்பதற்கு வாங்கிக் கொடுத்தார். நான் மங்க ளூரிலிருந்து குண்டூருக்கு பஸ்ஸில் செல்லும் போது ஹோட் டலைக் குறைசொல்லிக் கொண்டு வந்தார்.

''உங்களுக்கு எப்படி கதை எழுத வருகிறது'' என்று விசாரிக்க ஆரம்பித்தார். நான் மங்களூர் பக்கம் பலமுறை போயிருக்கிறேன். ஒரு திருப்பத்தில் பஸ் மெல்லப் போகும் என்று நான் யோசித்துக் கொண்டு அந்த திருப்பம் வரும் போது நான் பஸ்ஸிலிருந்து இறங்கி விட்டேன். என்னைத் தனியேவிட்டு விடுங்கள் என்று கூவினேன். நண்பர் அடுத்த ஸ்டாப்பில் இறங்கி பேருந்து பேருந்தாய் தேடுவார் என்று தெரியும். நான் எந்த பஸ் ஸிலும் ஏறாமல் பல கிலோ மீட்டர்கள் நடந்தபடியே அங்கங்கு தங்கி, சில இடங்களில் யாசகம் போலும் உணவு



வாங்கி மூன்று நான்கு நாட்கள் அலைந்தேன். ஐந்தாம் நாள் ஒரு கோவில் வாசலில் தூங்கிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து, என் பக்கத்தில் அமர்ந்து, நான் விழிக்கும் வரை காத்திருந்து, நான் விழித்த பிறகு வாய் விட்டு அழுதார்.

''நான் ஏதாவது மனசு நோகப் பண்ணிட்டேனா? இப்படி சட்டுனு உதறிட்டுப் போயிட்டியே'' என்று விம்மி னார். நான் அவரைப் பிரியத்துடன் அணைத்துக் கொண்டேன். ''ஏன் ஊருக்குப் போகவில்லை'' என்று கேட்டேன்.

''உன்னை விட்டுட்டு எப்படிப் போறது'' என்று கண் கலங்கச் சொன்னார்.

''நாலு நாளா என்ன பண்ணிட்டிருந்தே...''

''எப்படியும் இங்க வருவேன்னு தெரியும். நாலு நாளா காத்திருந்தேன்''

''என்ன பண்ணினே நாலு நாளா?''

''சாப்பிடறது, உட்கார்ந்திருக்கிறது, தூங்கறது...''

''அப்புறம்...''

''சாமி தரிசனம் பண்றது''

''அப்புறம்...''

''ஏன் என்னை விட்டுட்டுப் போயிட்டேன்னு யோசனை பண்றது''

''அப்புறம்...''

''ஒண்ணுமே பண்ணாத தனியா உட்கார்ந்திருந் தேன். கன்னடம் புரியலையா. பேசறதுக்கு ஆள் கிடைக் கலை.''

''எப்படியிருந்தது அது''

''எது?''

''பேசாம இருந்தது''

''முதல்ல பயமா இருந்தது. நேத்தும், இன்னிக்கும் பரவாயில்லை.''

''இப்படி இருக்கிறது உனக்குப் புடிக்குதா?''

''இப்ப புடிச்சிருக்கு''

''போ. ஆந்திரா பக்கம் போயிட்டு வா, பத்ராச்சலம் குண்டூர், நெல்லூர்னு போ. மூணு நாள் கழிச்சு ஊருக் குப்போ''

சென்னையில் அவர் வந்து சேர்ந்தது தெரிந்தது. ஒரு மாதம் கழித்து அவரை எதேச்சையாகப் பார்த்தேன். அவர் முற்றிலும் மாறியிருப்பது தெரிந்தது.

''அப்பா இப்போது நிறைய படிக்கிறார். யாருடனும் அதிகம் பேசுவதில்லை. அவரை என்ன செய்தீர்கள். எப்படி மாற்றினீர்கள்'' என்று அவர் குடும்பம் வியப்பாய் கேட்டது.

''நான் எதுவும் செய்யவில்லை. அவரே அவருள் கேள்வி கேட்டு மாறிப்போனார்'' என்று பதில் சொன்னேன். இந்தக் கட்டுரையை இரண்டு மூன்று முறை படியுங்கள். இதனுள் சொல்லப்பட்ட தனிமையைப் புரிந்து கொள்ளுங்கள்.



# 7

''நீங்க ஏன் சார் உங்க நாவல்ல கெட்ட வார்த்தைகள் அதிகம் எழுதறீங்க. குறிப்பா ஒரு கெட்ட வார்த்தை... அடிக்கடி...''

''மயிருன்னா...?'' நான் கேட்டேன்.

என்னைக் கேட்டவர் ரொம்ப சங்கடமடைந்தவர் போல் முகம் வைத்துக் கொண்டார். அவர் நடிக்கிறார் என்றே எனக்குத் தோன்றியது. அது இல்லாதும் இருக்கலாம். கெட்ட வார்த்தை பேசும் கோபம் வந்தால் அதிகபட்சமாய் கழுதை என்று மட்டும் அவர் சொல்லலாம்.

எனக்குக் கெட்ட வார்த்தைகள் பிடிக்கும். காரணம் அப்பா, அவர் அதிகம் சொல்வார். சின்ன வயதில் அது கேட்டது காரணமாய் இருக்கலாம். பிறகு டாஃபே டிராக்டர் கம்பெனி, அங்கே கெட்ட வார்த்தைகள் தொழிலாளி, குமாஸ்தாக்களிடையே சர்வசாதாரணம். சில அதிகாரிகளும் பேசுவதுண்டு.

புணர்தலை சர்வசாதாரணமாய் ஒரு வார்த்தையில் பலமுறை பேசும் உயர் ஜாதிக்காரர்களை நான் சந்தித்ததுண்டு.

ஏன் இப்படிப் பேசுகிறார் என்று ஒருவரைக் கேட்டதற்கு, ''கழுதைக்குக் காமம், கத்தினா தீரும்'' என்று தன்னைத்தானே சொல்லிச் சிரித்துக் கொண்டார்.

திரைப்பட உலகில் ரொம்பப் பெரிய நடிகர்கள், என் தமிழே என் தமிழே என்று உயிர் கொடுத்துப் பேசும் நடிகர்கள், சர்வ அலட்சியமாய் குறிகள் குறித்த வார்த்தைகள் பேசுகின்றார்கள். நான் காதாரக் கேட்டதுண்டு.

''என்ன பாலா, என்னடா இப்படி இவன் பேசறான்னு பாக்கறியா.'' கெட்ட வார்த்தை சொன்ன நடிகர் என்னிடம் கேட்டார்.

''நானும் பேசுவேங்க. எனக்கும் பழக்கம்தான்'' என்று பணிவோடு சொன்னேன்.

''அப்படியா, பேசு பேசு. எழுத்தாளன் கெட்ட வார்த்தை பேசி கேட்டதேயில்லையே'' என்றார்.

நான் பேசவில்லை. சிரித்தபடி சும்மா இருந்து விட்டேன். நானும் பேச அவரும் பேச அதன் பிறகு அங்கே கெட்ட வார்த்தை பட்டிமன்றம்தான் நடக்கும். வேலை கெடும்.

ஒரு திரைப்படக் கவிஞர் கெட்ட வார்த்தைகள் பேசுவதில் அபாரசாமர்த்தியம் உள்ளவர். வாழ்த்தோ, வசவோ, பாராட்டோ, திட்டோ எல்லாவற்றிற்கும் கெட்ட வார்த்தைகள் வரும்.

''கவிஞரே, மங்களகரமா எதுனா சொல்லக்கூடாதா. முத முத படம் டைரக்ட் பண்ணப் போறேள்.''

''போடா தக்காளிப்பழம். பெரிய பெரிய சித்தரெல்லாம் கெட்டவார்த்தைதான் சொல்வாங்க. அதான் ஆசீர்வாதம்.'' பதிலுக்கு கவிஞர் சொன்னார்.

''நீ குட்டிச் சுவராய்ப் போக. நீ அழிஞ்சுபோக. நீ அனாதையாப் போக. நீ செத்துப்போக'' என்பார் ஒரு சித்தர். எல்லாம் நல்ல வார்த்தைகள். 'நான்' என்கிற தன்மை உன்னிடமிருந்து அழியட்டும், 'நான்' சாகட்டும். தனிமை உனக்கு வரட்டும் என்பது இதன் அர்த்தம்.

'நான்' அழிவதே ஞானத்தின் பிறப்பிடம் என்று கவிஞர் விளக்கம் சொன்னார். அப்படியே வாழ்த்துச் சொல்லட்டுமா என்று கேட்டார். அந்த இளம் டைரக்டர்



துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடிவிட்டார்.

கதாபாத்திரங்களின் தன்மையை, மனநிலையை, அலட்டல், கர்வத்தைச் சொல்லவும், சில சமயம் கணவன் மனைவியரிடையே காமத்தைச் சொல்லவும் சில வார்த்தைகளை நான் பயன்படுத்துவதுண்டு.

உள்ளே சிரங்கும், வெளியே வெள்ளைப் போர்வையுமாய் உள்ளவர்களே இதற்கு அதிகம் கவலைப்படுவது, கவனித்திருக்கிறேன்.

''உங்கள் கதையில் ஏன் ஆங்கிலவார்த்தைகள் அதிகம் உபயோகப்படுத்துகிறீர்கள்? என்று ஒரு எம்.பில். செய்யும் பிள்ளை கேட்டான்.

''எங்கிருந்து வர்றீங்க தம்பி.''

''மதுரை சார்.''

''எதுல வந்தீங்க மெட்ராஸுக்கு.''

''பஸ்ல சார்.''

''எங்க இறங்கினீங்க?''

''திருவள்ளுவர் டெர்மினஸ்ல சார்.''

''காசு எங்க வச்சிருப்பீங்க?''

''பர்ஸ்ல சார். பத்திரமா இருக்கு.''

''ஏண்டா என்று ஆரம்பித்து நீ 'ஒரு கெட்டவார்த்தை' சொல்லிவிட்டு தமிழ் படிக்கிறவன். நீ இங்கிலீஷ்ல பதில் சொல்வே 'ஒரு கெட்ட வார்த்தை' நான் நாவல்ல எழுதினா உறுத்துதோ''-நான் சீறினேன்.

தமிழ் நாவல்களில் தமிழ் மட்டுமே...

என் நாவல் இன்றைய என் வாழ்வுச் சூழலைச் சொல்வது. இங்கே உங்கள் மனவிகாரங்களை அடுத்ததலைமுறைக்குக் காட்டுவது. நாவலாசிரியர் ஒரு சரித்திர ஆசிரியனும் கூட தமிழர்முகம் தமிழருக்குத் தெரிய வேண்டும். நான் சொன்னது பையனுக்கு விளங்கவில்லை. தமிழில் ஆங்கிலம் கலப்பது போலும், மொழி நடையில் கெட்ட வார்த்தைகள் கலந்து விட்டன.

அப்படியானால். இந்த இந்தக் கெட்ட வார்த்தைகள் ஏன் வரவில்லை என்று எனக்கு யாரும் லிஸ்ட் தரலாம். உங்கள் நாவலில் எழுதுங்கள். எனக்கு மறுப்பில்லை. எழுத்தாளனுக்கு என்ன எழுதுவது என்று கட்டளையிடாதீர்கள். என் எழுத்தில் என்னவரவேண்டும் என்று முடிவு செய்வது நானே. மற்றாருமில்லை.

ஆங்கில நாவல்களில் உள்ள உண்மை தமிழ் நாவல்களில் இல்லை. கெட்டவார்த்தை உட்பட.

'வீடெங்கும் திண்ணைகட்டி வெறும் பேச்க வெள்ளை வேட்டி...'

தமிழரை என்றோ ஒரு கவிஞன் அடையாளம் காட்டி போய்விட்டான். நாம் மேனாமினுக்கிகள் என்பது என் அபிப்பிராயம்.

கடைசியில் ரொம்பக் கோபமாய்...

''உங்க வீட்ல இந்தகெட்ட வார்த்தைய சொல்வியா' சில குடும்ப புருஷர்கள் கேட்பார்கள். அவர் வீட்டில்அவர் மனைவிக்கும் மகளுக்கும் ஒருகெட்ட வார்த்தையும் தெரியாது என்பதுபோல் கேட்பார்கள்.

என் வீட்டில் எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. அவர் மகளுக்குத் தெரியாத கெட்டவார்த்தைகள் என் மகளுக்கும், மகனுக்கும் தெரியும் என்பது எனக்குத் தெரியும்.



''இந்த பாலகுமாரன் செய்கிற அநியாயத்தைப் பார் கெட்ட வார்த்தை சொல்வது உத்தமம் என்று கட்டுரை எழுதுவதைப் பார், இவனை...'' யாரேனும் கெட்ட வார்த்தைகள் இறைக்கலாம் என்னிடம் நேரே பேசும் போது இவ்விதம் எழுதலாகாது நண்பரே என்று செந்தமிழ் பேசலாம்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.

# 8

ஒரு தேசத்தின் கலாச்சாரத்தை எது வெளிப்படுத்துகிறது. மதம், மதம்சார்ந்த மரபு. அம்மரபு சார்ந்த குடும்ப வாழ்க்கை. அக்குடும்ப வாழ்வைச் சார்ந்த குண நலன்கள். இவைதானே.

சரி, மதம் இல்லாது கலாச்சாரம் வெளிப்படாதா? வேறு வகை இல்லையா? உண்டே. ஒருஇனம். ஒரு கொள்கை. கொள்கையைச் சொல்லும் கட்சி, கட்சி சார்ந்த அரசியல். அரசியல் சார்ந்த மரபு. அம்மரபு சார்ந்த குடும்ப வாழ்க்கை சரியா?

ஆக மதத்திற்கு இணையாய். இது மதம் அல்ல என்கிற பெயரில் ஒருகூட்டு அமைப்பு. மதம் போலும் உள்ள கூட்டு அமைப்பு. மனித கலாச்சாரத்தை வெளிப்படுத்துகிறது. கடவுள் நம்பிக்கைக்குப் பதில் கட்சித்தலைவர்கள் முன்னோர்கள் பற்றிய நம்பிக்கை. வேதங்களுக்கு பதில் கட்சிக் கொள்கை. கோவிலுக்குப் பதில் எவராவது ஒருவருடைய சமாதி, பிறப்பிடம், வசிப்பிடம். ஆக மதமும் மதம் அல்லாத குழுவும் பெயரில் வித்தியாசப்பட்டாலும்

அமைப்பில் ஒன்றே. இரண்டிலும் நல்லனவும் உண்டு. தீயதும் உண்டு. இரண்டுக்கும் மூல கர்த்தாக்கள் உண்டு, பரப்பியவர் உண்டு. மதம்போல் இனமும் வளர்ந்து திசை மாறியதுண்டு மதம் இருப்பின் எனில் இனமும் இருப்பின் ச்சீ...ச்சீ...ச்சீ... இந்த இனமே தவறு என்று மக்கள்விழித்து எழுந்து உதறி புதிதாய், புறப்பட்ட நிகழ்வும் உண்டு.

எளியோர்க்கு இரங்கல், வலியோரை விலக்கல், எல்லோரும் பொது. சமம் என்று உரைத்தல் ஆகியவை நல்ல விஷயங்களின் அடிப்படை இரண்டிலும் உண்டு காலப் போக்கில் கெட்டனவற்றின் ஊடுருவில் உயர்வு. தாழ்வு. சர்வாதிகாரப் போக்கு, எல்லாவற்றிலும் வந்து விடுகிறது. மதம், கட்சி இரண்டுமே கொள்கை விட்டு மாறிப் போய் விடுகின்றன.

அப்போது மாறாதவை எவை? மாறக்கூடாது என்று மனிதர் நினைப்பவை எவை? அன்பு, சமாதானம், அமைதி, இவையால் வரும் மகிழ்ச்சி நிரந்தரமாக வேண்டும் என்பதே மனிதனின் கவலை. யுகம் யுகமாய் மனிதன் கொண்ட கவலை. இதன் பொருட்டே விதவித மான மதங்கள், விதவிதமான இனங்கள். எல்லாவற்றின் ஆரம்பமும் இவை குறித்துத்தான் என்றாலும் காலப் போக்கில் திசைமாறுவதை தவிர்க்க முடியவில்லை.

சரி. அன்பு என்பதை எப்படி வெளிப்படுத்துவது? அன்பு என்பது உணர்வாயின் செயல் எது? எல்லோருக்கும் அடிப்படைத் தேவைகள் தேவை என்று மனிதர் உணரும் நிலையே அன்பு. அடிப்படைத் தேவை எது? உணவு உறைவிடம், உடை. இதில் உயிர்வாழ, மிக முக்கியம் உணவு. இடும்பைக் கூட வயிற்றுக்கு இடைவிடாது சோறிடுதல், யார் யாருக்கு சோறிடுதல்? யாரிடம் உள்ளதோ அவர், யாரிடம் இல்லையோ அவருக்கு சோறிடுதல் உணவே இங்கு உயிர், அன்னமே ஆதாரம்.



அன்பு செய்ய ஆசைப்படுபவரின் செயல் சோறிடுத லாகத்தான் உலகின் எல்லாப் பகுதியிலும் இருக்கிறது. செர்பியத் தாக்குதலில் போஸ்னியா தவித்ததெனில் முதலில் செஞ்சிலுவைச் சங்கம் நேசப்படைகள் உதவி யுடன் ரொட்டியோடு தான் முதலில் இறங்குகிறது. ஸோமாலியாவில் பஞ்சமெனில் ஐரோப்பிய பால்பவுடர் கப்பலில் வருகிறது. அன்னதானம் இந்தியாவின் மரபு மட்டுமல்ல உலகத்தின் மரபு மனிதரின் குணம் தானம் தர விரும்பினால் தானம் பெறவும் ஒருவர் வேண்டுமே காற்றுக்கோ, நீருக்கோவா தானம் தரமுடியும்?

அன்பின் வெளிப்பாடாய் அமைந்ததே அன்னதானம் பிச்சையிடல் என்று இது கொச்சையாக்கப்பட்டாலும் இதற்கு அடிப்படை வறியவர்க்கு ஈதல்.

வறியவர் என்பது எதில் என்பதும் கேள்வி உணவுக்கும், உடைக்கும் வறுமையாய் இருப்பவன் தானத்தில் மிகுந்த செல்வந்தனாய் இருக்க வாய்ப்பு உண்டு என்பதை சரித்திர புராண ஆதாரங்களுடன் நிரூபிக்கலாம். அடுத்த வேளை சோறு பற்றிக் கவலைப் படாது தன்னை உணர தனியே இருப்பவர்கட்கு ஒருவாய் சோறு தந்துவிட்டு' அளவிலாப் பேரமைதியுடன் திரும்ப லாம். எனவே வறுமை என்பது உணவு,உடைஉறைவிடம் மட்டுமல்ல. இவை நிரம்ப உள்ளவனும் உள்ளத்தால் அமைதியின்மையினால் வறியவனாய்இருக்கலாம். எனவே ஒருவரிடம் சோறு போட்டு விட்டு உள்ளம் அமைதி பெற்றுத் திரும்பலாம்.

இந்தியாவில் பிச்சையெடுப்பதைத் தடை செய்ய வேண்டும் என்பது தற்கொலை முயற்சி, 'ஆன்மவிழிப்பு இல்லாதவரின் அறியாமை, அகம்பாவத்தின் ஆரவாரம் சோறு மட்டுமே வாழ்க்கை என்ற நிர்முடத்தனம்.

இறையும் இங்கே பிச்சையெடுக்கும். எளியரில் எளியராய் காட்சி தரும். எதையும் உதாசீனம் செய்தல் கூடாது என்பதற்காய் எடுத்த வேடம் நடத்திய பாடம்.

பிச்சை எடுக்காதவர் யார்? ஏற்காதவர் எவர் இங்கே. சிலருக்கு ஒரு கவளம் சோறு பிச்சை, சிலருக்கு விருது பணமுடிப்பு, எம்.எல்.ஏ.எம்.பி.சீட் மந்திரிப் பதவிஎன்று புத்திக்குத் தகுந்தாற் போல் பிச்சை கேட்கிறார்கள்.

ஓட்டுப் போடுங்கள் காலில் விழுகிறேன் என்று பிச்சை கேட்கிறார்கள்.

ஓட்டு வாங்கித் தின்று முடித்த திமிரில், ஏப்பம் விட்ட எக்காளத்தில் ஒரு கவளம் சோறு கேட்பவனை ஒழிப்பேன் என்பது ஆணவத்தின் உச்சக்கட்டம்.

அரசியல்வாதிகள் அறிவாளிகள் என்பதற்கு இச்சட்டம் ஒரு அடையாளம்.

# 9

இறை வழிபாடு, ஆன்மபலம் போன்றவற்றின் சிந்தனை நேற்று, இரவு முழுவதும் அதிகமாய் இருந்தது.

சென்ற டிசம்பர் ஒன்றாம்தேதி யோகி ராம்சுரத்குமார் அவர்களின் ஜெயந்தி, யோகிராம் சுரத்குமார் திருவண்ணாமலையில் வாழும் மகான். அவர் கடவுளின் குழந்தை. அடியார்க்கு நல்லான். ப்ரும்மம் அறிந்த ஞானி. முக்காலும் உணர்ந்த முனிவர்.

தன்னைப் பிச்சைக்காரன் என்று சொல்லிக் கொண்டாலும், பித்தன் என்று அழைத்துக் கொண்டாலும்



அவர் முக விலாசமும், அமர்வுமே, பார்க்கிறவரின் முதல் பார்வைக்கு அவரை முனிவர் என்று அறிமுகப்படுத்தி விடும், அச்சம் கலந்த அன்பு எவர்க்கும் தோன்றும்.

அன்பில் அச்சமுண்டோ, அச்சமிருப்பின் அது அன்போ. அவரைச் சந்தித்து வரும்போதெல்லாம் எனக் குள் கேள்வி வரும்.

மதித்தால் வருவது அன்பு. மதித்தலின் வளர்ச்சி அன்பு. ஆனால் வாழை குலைதள்ள அடிமரம் சாய்வது போல், அன்பு மிகுதியாக நெருக்கம் வர, மதித்தல் சில சமயம் வேரறுந்து போய்விடுகிறது. அலட்சியம் தலை தூக்குகிறது. அலட்சியம் அன்புக்கு எதிரான விஷயம், நமது நடைமுறைக் குடும்ப உறவுகளில் இந்த நிகழ்வை சர்வ சாதாரணமாய் பார்க்கலாம். அச்சம் கலந்த அன்பென்றால் என்ன. எவ்வகை அச்சம் அன்பு. அது மதத்தில் உயர்ந்த நிலை என்று எனக்குத் தோன்றுகிறது. அச்சம் இங்கே யோகியைப் பற்றி அல்ல. அவர் ஏதும் கோபித்துக் கொள்வாரே என்பது அல்ல. ப்ரும்மம் அறிந்த முனிவரின் சீற்றம் நம்மை என்ன செய்யுமோ என்கிற கலவரம் அல்ல. அந்த அச்சம் நம்மைப் பற்றி அன்பு என்கிற பெயரில் அசட்டுத்தனம் செய்துவிடக் கூடாது என்கிற கவலையோடு கூடிய பக்தி. அத்துமீறக் கூடாதே என்கிற நிதானம். அன்பில் ஆர்வம் அதிகரித்து ஆர்வம் ஆரவாரமாகக் கூடாதே என்கிற தன்னைப் பற்றிய சஞ்சலம். தன் நிதானம் குறித்த கவனம். அச்சம் இங்கே தன்னைப் பற்றிய விஷயம்.

அச்சம் கலந்த இந்த அன்புதான் இறை பக்தி என்று தோன்றுகிறது. தன்னைப் பற்றி எப்போதும் சந்தேகத் துடன் இருக்கும் அச்சம் அது. தான் அன்பு செய்தாலும், அந்த அன்பு பொய்யா, போலியா, எதிர் பார்ப்பா, என்று இடைவிடாது எடை போட்டுக் கொள்ளும் கவனம் இது.

அருபத்தை வணங்க மனசுக்கு தெரியாத போது, பழக்கமில்லாத போது, ரூபம் இந்த வணக்கம் செய்ய எளிதான பயிற்சியாகிறது. கையும் காலும் உள்ள மனிதரை கடவுள் அம்சம் என்று வணங்குதலில் அவரை அறியும் முயற்சியில் அருவழிபாடு எளிதாகிறது.

யோகி ராம்சுரத்குமார் உடம்பால் மனிதர்தான் மனசு நிர்மலத்தால், பிரபஞ்சம் முழுவதும் வளைத்த பெரிய அன்பால், சொல்லி விளக்கமுடியாத சூட்சும சக்தியை விரிவாக்கி சுடராய் விளங்குவதால் கடவுளின் ரூபமாகிறார். அருப வழிபாடு முடியாதவர்க்கு ரூபமாய் விளங்குகிறார். அவர் ரூபத்தை மனசால் நெருங்க நெருங்க அருபம் உள்ளே புரிகிறது.

அதென்ன அருபம் புரிவது. புரியாத விஷயமா இது. இல்லை. சொற்கள்தான் மிரட்சி தருகின்றன. இறை வழிபாடாய் குருவணக்கமாய் யோகி ராம்சுரத்குமாரை இடைவிடாது சிந்திக்க, சிந்திப்பதில் ஒரு அமைதி ஏற்பட்டு நமதுமனம், நமது புத்தி, செயல்படும் விதம் தெளிவாகிறது. உள்மனம் எங்கே எதை நோக்கி நம்மை உந்துகிறது என்கிற வேர் பிடிபடுகிறது.

இது செய்ய ஏன் குருவணக்கம்? யோகி ராம்சுரத்குமார் வழிபாடு? கோயில்கள் உண்டே? உண்டு. அதன் பொருட்டே ரூபவழிபாடு. கோயில் விழாக்கள். ஆனால் அச்சம் அழிந்து போய் அன்பு ஆரவாரமாகி கண்கூடாய் பார்க்கும் இடம் கோயில்கள். காலப் போக்கில் கோயில் போய். விழாவே முக்கியமாகிறது. வழிபாடு போய் கூச்சலே பிரதானமாகி விடுகிறது. என்ன செய்தாலும் கோயிலுக்குள்ளே உள்ள ரூபம் கண்டு கொள்வதில்லை. இதுவே உயிர்ப்பாய் மனித ரூபமாய் இருக்கும் போது. அச்சம் கலந்த அன்பு சுருதியாகி நிற்கிறது. சகலமும் அறிந்தவரின் சன்னதியில் நிற்கும்போது, அன்பு ஒரு தாளகதிக்கு உட்பட்டு இசையாய் பெருகுகிறது.



இந்த அச்சம் கலந்த அன்பே ஆன்ம பலம், இடையறாது நம்மை கண்காணித்துக் கொள்ளும் குணம். நம் உள் மனசு உந்துதல், அதன் உத்தி, புரிந்து போக நடந்ததும், நடப்பதும், நடக்கப் போவதும் பற்றி தெளிவு வருகிறது. வேண்டும் வேண்டாம் என்கிற பிரிவில்லாது விஷயங்களை கவனிக்கத் தோன்றுகிறது. இந்த கவனிப்பே ஆன்ம பலம். தன்னை அறியும் பலம்.

இது வர, ஆரவாரமில்லை. ஆரவாரமில்லாதபோது மன அமைதி சிதறுவதில்லை, மன அமைதி சிதறாதபோது எதிர்ப்படும் விஷயங்களுடன் போரிடுவதில்லை. போர் இல்லாத வாழ்க்கை சுகம். குருவே சுகம். சுகத்திற்கு வழிகாட்டி. குருவே கடவுள். குரு கடவுளின் சொரூபம்.

ஆன்ம பலம் அவர்தான் தர முடியும். ஆன்ம பலத்தின் லாபம் என்ன? அனுபவித்துப் பாருங்கள்.

# 10

புன்னகை மன்னன் படப்பிடிப்பு முடியும் தருவாயில் ஒருநாள் பாரதப்புழா அருவியாகி விழுமிடத்திற்குக் கீழே டைரக்டர் பாலசந்தர் போயிருக்கிறார். ரேகாவும், கமலஹாசனும் மலை விளிம்பில் உட்கார்ந்திருக்கிறார்கள். கீழிருந்து பச்சைக்கொடி அசைந்ததும் இருவரும் மலை விளிம்பில் தோன்றி தழுவிக் கொள்ளவேண்டும். பிறகு குதிப்பதுபோல் பாவனை செய்ய வேண்டும். அதற்கு பிறகு டம்மிகள் போடும் வேலை நடக்கும். டம்மி கமலஹாசன், டம்மி ரேகா அருகருகே கிடக்க நானும் நடிகர் கமலஹாசனும் பாறையில் உட்கார்ந்து ஓடும் ஆற்றைப் பார்த்துக் கொண்டிருந்தோம். யூனிட், உபகரணங்களுடன் போய்ச் சேர ஒரு மணி நேரமாவது ஆகும்.

''நீ ஏன் சினிமாவில் சேர்ந்தாய்?''

''நல்ல சினிமா எடுக்க''

''நல்ல சினிமா எடுக்க முடியவில்லையெனில்...'' நான் பதில் முடித்த உடனே கமலஹாசன் கேட்டார்,

''விலகி விடுவேன்...''

''விலகி...?''

''நல்ல நாவல்கள் எழுதுவேன்.''

''சினிமாவில் சேர்ந்தபிறகு விலக முடியும் என்று நினைக்கிறாயா?''

''கிரியேட்டிவான வேலைகள் செய்யாது, வெறுமே பிழைப்பாய் எதையும் என்னால் செய்ய முடியாது. நான் செய்யும் வேலையில் எனக்கு ஆர்வம் வர வேண்டும். திருப்தி இருக்க வேண்டும்.''

எது நல்ல சினிமா என்பது பற்றி பேச்சு திரும்பியது. கமல் சொன்ன சினிமாக்கள் தமிழில் வர இன்னும் நூறு வருடங்கள் ஆகலாம். அல்லது வராது போகலாம். அவருக்கும் நல்ல சினிமா பற்றின தீவிரங்கள் உண்டு என்பதை அன்றையப் பேச்சு காட்டியது. கீழிருந்து விசில் சப்தம் கேட்டது. டம்மி கமலஹாசனும், டம்மி ரேகாவும் குதித்து தற்கொலை செய்து கொண்டார்கள். திரும்பும் நேரத்தில் கமல் மீண்டும் ஒரு கேள்வி கேட்டார்.

''தமிழில் நல்ல கதைகள் எழுத முடிகிறதா? இப்பொழுது எழுதியதைவிட நல்ல கதைகள் எழுத முடியுமா?''

''நிச்சயம் முடியும். மிகக் கடினமான அத்வைத தத்துவங்களைக்கூட தமிழ்க்கதைகளில் சொல்ல முடியும். அவை விற்பனையும் ஆகும்''



''நல்ல கதை ஏற்க முடிந்த ஜனங்களால் நல்ல சினிமா ஏற்க முடியாதா?'' கமல் உரக்க யோசித்தார்.

''கடினம்தான்'' அவரே தொடர்ந்தார். ''சினிமா மாஸ்மீடியா. புத்தக விற்பனையும், சினிமா ஓட்டமும் வெவ்வேறானவை. இரண்டும் ஒரே நிலைக்கு வர பல வருடங்கள் ஆகும். இன்றைய தேதியில் பத்தாயிரம்பேர் சினிமா பார்த்தால் ஆயிரம் பேர் படிக்கிறார்கள். இது பெரிய வித்தியாசம்தான்'' என்று முடித்தார். நல்ல சினிமா இப்போதைக்கு இல்லையோ என்கிற ஏக்கம் அவர் பேச்சில் இருந்தது.

ஆனால், சில வருடங்களுக்குபிறகு 'குணா' படத்துக்கு என்னைக் கூப்பிட்டனுப்பியதும், அவர் சொன்ன முதல் வார்த்தை.

''ராஜ்கமல் கம்பெனி ஒரு நல்ல படம் பண்ணப் போகிறது. பாட்டுக்கூட வேண்டாம் என்று என் அபிப்பிராயம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் பாலா.''

நான் பாட்டு வேண்டுமென்று சொன்னேன். ஒரு நல்ல படத்தை பாட்டு பாழாக்காது என்று அபிப்ராயம் தெரிவித்தேன். நான் எதிராக ஓட்டளித்ததில் கமலுக்கு கொஞ்சம் கோபம். ஆனால் தமிழில் நல்ல படத்துக்கான காலம் இது இல்லை என்பது என் அபிப்பிராயம்.

படத்தில் எல்லாக் காட்சிகளுக்கான மொத்த வசனங்களும் எழுதப்பட்டு, லொகேஷனுக்கு கமல் அலைந்தது, நல்ல படத்திற்கான வெறியைத் தெளிவாகக் காட்டியது. கால் சறுக்கி நான் கீழே விழுந்தால் கூட நாலு கதைகள் வருமேயன்றி பெரிய குறை வந்து விடாது. ஆனால் ஒரு நடிகரின் உடம்பு அவ்விதமல்ல. தோல்

கூடக் கறுத்துப்போகக்கூடாது. பூச்சிகளும் வண்டுகளும், விஷ ஜந்துக்களும், காட்டெருமைகளும் உள்ள அந்த மலைக்காட்டுக்குள் கமலஹாசன்தான் முன்னே போனார். எழுநூறு அடி பள்ளத்துக்குள் அவர்தான் முதலில் இறங்கினார். சருகு மெத்தையும், சல்பர் நெடியும், மனிதர் காலடிபடாத குகைகள் என்று சுலபமாய் காட்டிக் கொடுத்தன. உச்சி வெயிலிலும் குகைகளில் இருட்டுத்தான் இருந்தது. திருப்பத்தில் எது தாக்குமோ என்கிற கலவரம் இருந்தது. பள்ளத்தில் இறங்குவது எளிது. ஏறுவது மிகக் கடினம் என்பது புரிந்தது. இருப்பினும் கமலஹாசன், ஐம்பது கெஜம் முன்னால் நடந்து, ''இங்க வாங்க, இந்த இடம் நல்லாயிருக்கு'' என்று கூவினபிறகுதான் எல்லோரும் போனோம். இருபத்தாறு கிலோமீட்டர் தொலைவில் ஒரு கப் டீ வேண்டுமென்றாலும் எழுநூறு அடிபள்ளத்துக்கு அரைமணி நேரம் கழித்துத்தான் வரும் என்கிற நிலையில மொத்த யூனிட்டும் முப்பத்தைந்து நாள் அங்கே முகாமிட்டது.

''ஒரு குகைல ஆணும், பெண்ணும் ஒளிஞ்சுக்கறாங்க. அவ்வளவுதானே? செட்போட்டுடலாமே'' என்று தான் சொல்வார்கள். கமல் நிஜத்தை நேசிக்கிற கலைஞன். இயற்கை தந்த முரட்டுத்தனத்தை, உயிர்ச்சிலிர்ப்பை செல்லுலாய்டில் கொண்டுவர ஆசைப்பட்ட கலைஞன்.

குணாவில் சுற்றிச் சுற்றி பேசுகிற வசனம் ஒரே டேக்கில் ஓ.கே. ஆயிற்று. இரண்டாவது டேக் ஒரு ஜாக்கிரதைக்காக எடுக்கப்பட்டது. 'குணா' வெற்றிப் படமில்லைதான். ஆனால் நல்ல படம். மிக நல்ல படம்.

சினிமா எக்ஸ்பிரஸ் அவார்டு சிறந்த வசனத்திற்காக, தமிழக முதல்வர் கையால் வாங்கி, கீழே இறங்கி வரும் போது 'நன்றி' என்று சொன்னேன். ஒரு நல்ல படத்தில்



என்னை வேலை செய்ய அழைத்ததற்காக வந்தனம் சொன்னேன். ''யூ டிஸெர்வ்திஸ்'' என்று கமல் தன் வலதுகை கட்டைவிரல் உயர்த்திக் காட்டினர். கூட்டம் முடிந்தபிறகு நான் பரிசு பெற்றதறகு கை குலுக்கிப் பாராட்டினார். நான் பரிசு பெற்றதில் என்னை விட கமலுக்கு சந்தோஷம்.

அந்தப் படத்தை பார்த்தால் அது தெளிவாகத் தெரியும்.

# 11

"இண்டியன்ஸ் ஆர் ஈஸிங் இன் பப்ளிக். ஈட்டிங் இன் ப்ரைவேட் என்று ஒரு ஐரோப்பிய மாது இந்தியாவின் சுதந்திரத்திற்கு முன்பு இந்த பரந்த நிலப்பரப்பைப் பார்த்துவிட்டு எழுதியிருப்பதாய் யாரோ, எங்கோ ஒரு மேடையில் சொன்னார்கள்.

சொல்லப்பட்டது இந்தியர்களை என்பதால், சொன்னது ஐரோப்பிய மாது என்பதால் கேட்டதும் ஒரு கோபம் வந்தது. ''அது தானே சரி'' என்கிற எண்ணமும் வந்தது. ஓடும் ரயிலில் முதல் வகுப்பில் உட்கார்ந்து கொண்டு, அந்த ஐரோப்பிய மாது இந்தியாவைப் பார்த்திருக்கலாமோ என்ற சந்தேகம் வந்தது. பனி தேசத்திலிருந்து வந்து ட்ராபிகல் கன்ட்ரியின் அழகைக் காணலாம் என்று ரயில் ஜன்னல் கதவுகளைத் திறந்த அம்மாளுக்கு வழிநெடுக ஜனங்கள் குத்திட்டு உட்கார்ந்திருக்கிற காட்சி அதிர்ச்சியைத் தந்திருக்கக்கூடும்.

ரொட்டி கிடைக்காவிட்டால் கேக் சாப்பிடுங்கள் என்கிற மேட்டுக்குடியின் முட்டாள்தனம் அந்த அம்மா விடம் இருந்திருக்கக்கூடும். ஆனால் அதுதானே சரி. தூசு படாமல் சாப்பிடுவதும், ஊரைவிட்டு தூரப்போய் மலம் கழிப்பதும் தானே சரி. குத்துச் செடியோரமாய் மலம் கழிப்பவர்களைப் பார்த்துவிட்டு, 'ஐயையோ', என்று கத்துவது என்ன நியாயம். பட்டணத்துத் தெருக் களில் பாதாள சாக்கடையைப் பதித்துவிட்டு வீட்டுக்கு வீடு வாசலுக்கருகே சின்ன மழைக்கும் தெருபுரண்டு ஓடும் கழிவுநீர்க் கால்வாயை மிதித்துப் போகும் வேதனையை விட பரந்த மைதான பப்ளிக் லாவட்ரி உத்தமமில்லையா? இரண்டு நாளில் மண்ணோடு மண்ணாகிவிடாதா?

மௌனமாய் சோறு தின்பது நல்லது என்பதை ஐரோப்பியர்களுக்கு யார் சொல்லித் தருவது. உயிர் வாழும் அளவுக்கு உணவுக்கு முக்கியத்துவம். உணவு ருசிப்பதற்கல்ல. விருந்து, பேசிச் சிரிப்பதற்கல்ல. உணவு முடித்து அதை ஜீரணிக்க ஒரு பிடி வெற்றிலையும் மென்று வெற்றிலைச்சாறு உள்ளே இறங்கும்போதுதான் நாங்கள் பேசிச் சிரிப்பது வழக்கம். எங்களுடையது பனிதேசமல்ல. நாங்கள் பச்சை மாமிசக்காரர்களும் அல்ல என்கிற யோசனை எனக்குள் ஓடியது.

மனசுக்குள் தத்துவம் கலந்த இந்திய வாழ்க்கை அறியாத ஐரோப்பியர்களை எதிர்த்துக்கொண்டு வந் தேன். இருட்டில் தலைபோல ஒன்றில் வண்டி ஏறி, இறங்கி, ஆடி அலமலந்து உயிரும், வண்டியின் பிரேக்கும் ஒரு கணம் கிறீச்சிட்டு நின்றன.

ஏறியது தலையல்ல. உடைந்த பூசணி, ஆயுத பூஜையை முன்னிட்டு கடை கடையாய் சிதறடிக்கப்பட்ட திருஷ்டிக் காய். ஆடு வெட்டுவதற்குப் பதிலாக அஹிம்



மசக்கு மாறிய ஹிந்துக்கள், பூசணியைக் குடைந்து ஓட்டைப் போட்டு, உள்ளே குங்குமச் சாறு ஊற்றி. ''தான் நல்லாருக்கணும். என்னைக் கண்டு எரிகிறவன் இதே கதியாப் போகணும்'' என்கிற வேண்டுதலுடன்ஓங்கி அறைந்து உடைத்த பூசணிகள்.

கடை நன்றாக இருக்க தெருவை அசிங்கப்படுத்தி யிருக்கிறார்கள். தான் நன்றாக இருக்க தெருவோடு போகிறவர்களை காலிடற வைக்கிறார்கள் உடைந்த பூசணியை ஓரம் போட்டிருக்கக் கூடாதாம். சிதறியது சிதறியபடியே கிடக்க வேண்டுமாம். அதில் சில்லறையை போட்டு நாலுபேர் அதைப் பிய்த்து, போட்ட சில்லறை யைப் பிடுங்கிக் கொள்வது ஒருவகை தானமாம்.

இது அடுத்தவர் மீது அக்கறையில்லாத செயல், ஊர் சுத்தம் பற்றி ஞானமில்லாத வாழ்க்கை கடை முழுவதும் தரைமெழுகி, சந்தனம் தெளித்து தெருவைப்பாழ்படுத்தும் சண்டாளத்தனம். பிறருக்கு இன்னல் செய்யவே பிறந்திருக் கிறோம் என்கிற இறுமாப்பு பிறருக்கு இன்னல் செய்கிறோமே என்கிற தெளிவுகூட இல்லாத பேதமை.

ஒருவேளை, ஈஸிங் இன்பப்ளிக் என்று அந்த ஐரோப்பிய மாது குறிப்பிட்டது இதைத்தானோ. வீட்டை சுத்தமாக வைத்துக் கொண்டு, வெளியே குப்பையை இறைக்கும் இந்தியர்கள் என்று இதற்கு அர்த்தமோ? அடுத்தவர்களைப் பற்றிய அக்கறையில்லாதவர்கள் இந்தியர்கள் என்கிற கோபமோ? உடைத்தவன்கால்தடுக்கி விழமாட்டானா? அடுத்தவன் உடைத்ததில் இவன் வண்டி சறுக்காதா? அப்படி சறுக்கி விழுந்தாலும் சரியென்று தூசைத் தட்டிக் கொண்டு போய் விடுவானா? அப்போதும் கோபம் வராதா? அவ்வளவு மர மண்டையா? குப்பை வாரத்தான் கார்ப்பரேஷன் இருக்கிறதே என்கிற தர்க்கமா? குப்பை போடவே பிறந்திருக்கிறேன் என்கிற

தற்குறித்தனமா? தன் கடை நன்றாக இருக்க தெருவைக் குப்பையாக்கிறவன் நாகரீகமுள்ளவன் தானா? இதுஎன்ன நியதி? யார் சொல்லித் தந்த அசிங்கம் இது? சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ள இந்தியர்களுக்கு ஏன் எந்தக் கடவுளும் சொல்லித் தரவில்லை. இந்தியர்கள் நிறைய மாறியிருக்கிறார்கள்? ஏன் இந்த சுற்றுபுறச் சுத்தம் மட்டும் தெரியவேயில்லை. மார்க்கெட் என்பது மிகப்பெரிய குப்பை மேடு என்று ஏன் மாறிவிட்டது. அழுகின காய்கறியை தன் கடை எதிரிலேயே கொட்டிக் கொள்வதில் என்ன ஆனந்தம், அத்தினிகாய் நஷ்டமாயிடுச்சுன்னு கண்ணெதிர்க்க தெரிஞ்சாதான் அடுத்ததுல லாபம் பாக்க முடியும்' என் மனைவியிடம் ரங்கநாதன் தெரு காய்கறிக்காரக்கிழவி சொன்னாளாம். லாப நஷ்டம் பார்க்க அவளிடம் கம்ப்யூட்டரில்லை. கண்கள்தான் இருக்கின்றன. கண்ணெதிரே சேறாக்கப்பட்ட அழுகின காய் இருக்கிறது. அந்த நஷ்டம் கடையிலுள்ள காயை லாபமாக்க வேண்டும் என்கிற வெறியை ஏற்படுத்துகிறது. ஒரு வேளை லாபம் வரலாம். ஆனால் லாபம் மட்டுமா வரும். நோயும் வருமே, அந்தக் கிழவிக்கு இதை யார் சொல்லித் தருவது. அழுகின காயில் ஆயிரம் பேர் மிதிக்க, மண்ணோடு அழுத்தி இன்னும் அழுகுமே. புழுக்கள் நெளியுமே. கொசுக்கள் மொய்க்குமே. லட்சேபே லட்சம் கிருமிகள் உற்பத்தியாகுமே. அதெல்லாம் கிழவியின் கண்களுக்குத் தெரியாது. கண்டதே காட்சி. கொண்டதே கோலம். நோய் வந்து சிழவி சுருண்டால் நேர்ச்சைக்கு மறுபடி பூசணி பலி. 'ஒஹோன்னு வியாபாரம் ஆச்சுல்ல, அதனாலதான் கண்திருஷ்டி' என்கிற காரணம். திருஷ்டிக்கும் இன்னொரு பூசணிச் சிதறல். இன்னும் அழுகல், இன்னும் நோய், எல்லோருக்கும் இடைஞ்சல், சிதறிய பூசணி சாக்கடையை அடைத்துக் கொண்டால், எல்லோருக்கும் வியாதி, சுற்றுப்புற சுத்தம் பற்றிய ஞானம் இல்லையென்று தான் அந்த ஐரோப்பிய மாது சொல்கிறாளோ?



பௌத்தம் ஜப்பானில், ஜென்பௌத்தம் என்று மாறிய பிறகு மக்கள் வாழ்க்கையில் பெரிய கலாச்சார மாறுதல்கள் ஏற்பட்டன. மக்களை மதம் அங்கு விவேகமாய் மாற்றியது. பல பழம் மரபுகள் உடைபட்டு' பெண் விடுதலையும் விஞ்ஞானத்தோடு கூடிய வாழ்வும் மலர்ந்தன.

நம்மில் எது மாறவேண்டும்? எது புதிதாக்கப்பட வேண்டும்? மதமா? மரபா? மதமரபு சார்ந்த வாழ்க்கையா? நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

## 12

ரஜினிகாந்த் என்கிற பதினாறு வருட வளர்ச்சி கொண்ட மனிதரைப் பார்க்கும்போது சிலருக்கு வியப்பு ஏற்படுகிறது. எப்படி இந்த வளர்ச்சி ஏற்பட்டது என்கிற கேள்வி குடைகிறது. அவர் ஆன்மீகம் பேசினால் இதனால்தானே வளர்ச்சி என்கிற யோசனை வருகிறது. அவர் செல்வச் செழிப்பு பார்த்து, போய் நின்று உதவி கேட்கலாமே என்கிற தாபம் எழுகிறது. இத்தனை மக்கள் அபிமானம் பெற்றவர், நமது கூட்டத்திற்கு ஆதரவாய் இருக்கலாமே என்கிற கணக்குப் போடத் தோன்றுகிறது.

'அவரு கால்ஷீட் இரண்டு வருஷம் பொறுத்து வாங்கிக் கொடு. எப்படியாவது கைல, கால்ல விழுந்து அழுது வாங்கிக்கொடு. இரண்டு லட்சம் உடனே உனக்குத் தரேன்' என்று அவரைத் தெரிந்தவர்களிடம் பேரம் பேச வைக்கிறது.

'இதெல்லாம் ஒன்றும் வேண்டாம். அண்ணன் எங்கள் உயிர். அவர் ஒரு முறை நின்று கையசைத்து விட்டுப் போனால் போதும்' என்று ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான வாலிப உள்ளங்கள் துள்ளுகின்றன.

இப்படிப் பலருக்கு பலவிதமாய் அவர் காட்சி தர அவரின் அமைதி எல்லோருக்கும் அதிசயமாய் இருக்கிறது'

இந்த அளவு மக்கள் செல்வாக்கு இருப்பின் ஆட வேண்டாமா. அரசாங்கத்தை எச்சரிக்கிற இளைஞனாய் சவால்விட வேண்டாமா.

''இன்னிக்கு மீட்டிங்ல அவரைக் கொஞ்சம் அப்செட் பண்ணிட்டாங்க. பொலிட்டிக்கலா ஒரு அறிக்கை விடப் போறாரு'' என்று அவர் பரபரப்பாகப் பேசப்படுகிறார். ஆனால் அவர் எந்த அறிக்கையும் விடவில்லை.

''இருப்பதை வைத்து சந்தோஷமாக இருப்பதே என் கொள்கை'' என்கிற ரீதியில் அவர் பேச்சு அமைகிறது. அங்கு அவர் யாரையும் எதிர்க்கவில்லை. யாரையும் ஆதரிக்கவில்லை. நான் தனி என்கிற முத்திரையே ஆழமாக விழுகிறது. அந்த தனித்தன்மைக்குத்தான் மரியாதை அதிகமிருக்கிறது.

இன்னொரு குழுவினர் அவர் படங்களை, அவர் நடிப்பை கலைரீதியாக ஆராய முற்படுகிறார்கள். ''இவர் படங்களில் ஒன்றுமேயில்லையே'' என்கிற ஏளனம் பேசுகிறார்கள். ஆனால் வசூலில், வியாபாரத்தில் அவர் படங்களுக்கிருக்கும் மாறுதலற்ற உயர்நிலை வேறு எவருக்கும் இல்லை. நல்ல நடிகர்களுக்கும், மிகச்சிறந்த டைரக்டர்களுக்கும் வரைகோட்டுப்படம் மேலும் கீழுமாய் அலைகையில் இவர் கோடு உயர்ந்துதான் போய்க் கொண்டிருக்கிறது. இவரது சில தோல்விப் படங்களால் இவர் நிலை



பாதிக்கப்படவேயில்லை. இவர் மதிப்பு சிறிதுகூட மக்களிடையே குறையவேயில்லை.

''அள்ளி அள்ளிக் கொடுக்கிறார். அதனால் தான் சமூக மதிப்பு', என்று சொல்கிறார்கள். எம்.ஜி.ஆர். மழைக்கோட்டு கொடுத்தது இன்னும் பேசப்படுவதுபோல் இவர் கொடுத்தது பேசப்படுவதாய் என் காதுகளில் கேட்கவில்லை. அவர் கொடுப்பதை அருகே நின்று பார்த்திருக்கிறேன். அளவான காசு, அவசியமான உதவி, மருந்து மாத்திரைகள் என்றும், மூக்குக்கண்ணாடி என்றும், சட்டைத்துணிகள் என்றும், தூண்டித் துருவி ரஜினிகாந்தின் சகா சத்தியநாராயணனிடம் கேள்வி கேட்கப்பட்டு பாத்திரமறிந்து உதவி செய்யப்படுகிறது. தகுதியறிந்து தானம் தரப்படுகிறது. அதுபற்றி அவர் விளம்பரம் செய்யப்படுவதில்லை.

சத்தியநாராயணா அவரின் பிரதிநிதியாய் நின்று காசு கொடுப்பதை நான் போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டால் சத்தியநாராயணன் கை கூப்புகிறார். அது அண்ணனுக்குப் பிடிக்காது என்னை விட்டுவிடு என்று விலகிப்போகிறார். வழங்குவதை போட்டோ கூட எடுக்கக்கூடாதாம். இந்தத் தேசத்தில் என்னை ஆச்சர்யப்படுத்திய விஷயத்தில் இதுவும் ஒன்று.

ரஜினி பற்றி ஒரு மாதப்பத்திரிகை, விலை பன்னிரண்டு ரூபாய். மாத நாவலுக்காக என்னிடம் வந்த அதன் மதிப்பாளரை நான் ரஜினியின் பத்திரிகை பற்றிக் கேட்டேன்.

''பன்னிரண்டு ரூபாய்க்கு மாதப் பத்திரிகை போகுமய்யா, நாலு ரூபா, அஞ்சு ரூபா புக்கெல்லாமே தவிக்கிறதே.''

''ரஜினி புக் போகும் சார். வேறயார் பேர் போட்டாலும் போகாது.''

''என்ன காரணம்?''

''அவர் ரசிகருங்க அப்படி. என் ஆறு புக்குல இந்த புக் நல்ல ஓட்டம். மத்தத்துல வர்ற நஷ்டம் இதுல ஈடு கட்டிடுது'' என்று சொல்கிறார்.

நான் ஒரு பத்திரிகைப் பேட்டிக்காக ஒரு போட்டோ கிராபரை அழைத்துப் போயிருந்தேன். வங்கியில் வேலை செய்யும் அந்த போட்டோகிராபர் முதன் முதலில் ரஜினியை போட்டோ எடுக்கிறார். ரஜினியின் ஒவ்வொரு அசைவையும் போட்டோ எடுக்கிறார். என் பிள்ளைக்கு ரஜினியின் பெரிய போட்டோவை இலவசமாய் கொடுத்தார். நான் காசு கொடுக்க முற்படும் போது தடுத்தார், ரஜினியின் போட்டோக்களை பல பிரதிகள் போட்டு விற்று விடுவாராம். வாங்க ஆள் இருக்கிறதாம். வாய்ப்புக் கொடுத்த எனக்கு ஒரு பெரிய போட்டோ இலவசமாகக் கொடுப்பது ஒரு நன்றியாம்.

''...ஏன்னா அந்த ஸ்டுடியோல எனக்குத் தெரியாம நிறைய பிரிண்ட் போட்டிருக்காங்க சார். என்ன வச்சு அவனும் சம்பாதிச்சுட்டான்.''

ரஜினியின் படம் போட்டால் வாரப் பத்திரிகையும் கூட விற்கும் என்பது பத்திரிகை வட்டாரத்தில் பேசப்படும் விஷயம்.

இப்படி அரசியல் பின்னணி இருந்தும் மிகச்சிறந்த கலைஞன் என்ற நிலையும் இன்றி, வாரி வழங்கிய வள்ளல் என்கிற விளம்பரமின்றி, தத்துவம் பேசும் வித்தகரென்ற புத்தக பலங்களுமின்றி, ஆன்மீகச் செல்வன் என்ற



ஆசிரமக்கட்டு மானங்களின்றி எல்லாமாய், எல்லாமல்லதுவாய் இவர் இருப்பதற்கு ஆதாரமென்ன?

எது குறித்து மக்களுக்கு இவர் மீது காதல்? யார் இவரை அதிகம் நேசிக்கிறார்கள்? எதனால்? எவ்விதம்? எனக்குள் கேள்விகள் உராய்ந்து கொண்டேயிருக்கும்.

அவரிடம் நேரே கேட்டபோது கைகளைக் கூரை நோக்கி உயர்த்தினார். கடவுள் என்பதாய் நான் புரிந்து கொண்டேன்.

''ரஜினிகாந்த் கண்டக்டரா இருக்கணும்னு விதி இருந்தது. இருந்தேன்.

ரஜினிகாந்த் நடிகனா மாறணும்னு விதி இருக்கு. நான், நீ, அவன், அவர், அவள் எல்லோரும் விதிப்படி வாழ்கிறோம். என்னால் என்று சொல்வது அறியாமை. ஜெயித்தேன் நான். நான் ஜெயித்தேன். என்று அர்ஜுனன் கூறினான். தேரோட்டி முதலில் இறங்க வேண்டும். பிறகுதான் நான் இறங்க வேண்டும் என்று கர்வப்பட்டான் தேரோட்டியான கண்ணன் அவனை அதட்டி கீழே இறங்க சொன்னான், பிறகே அந்தக் கடவுள் இறங்கினான். தேர் எரிந்து போயிற்று. அர்ஜுனனுக்குத் தான் ஜெயித்தது கடவுளால் என்று தெரிந்து போயிற்று. அவன் கர்வம் தரைக்கு வந்தது.

எனக்குக் கர்வமேதுமில்லை. என் தேரை கடவுள் ஓட்டுகிறார். எல்லார் தேரையும் அவர்தான் ஓட்டுகிறார். நான் அவரின் கட்டளைப்படியே இயங்கி வருகிறேன்.''

அவர் பேச, நான் சந்தேகத்தோடு பார்த்தேன்.

'இது அடக்கமா, இல்லை படித்ததா. இது படிப்பினால் வந்த தெளிவா, இல்லை பட்டதால் வந்த ஞானமா?' நான் யோசித்துப் பார்த்தேன்.

வாழ்க்கையில் வெகு சிலருக்கே உள்மனக் குரலை செவிமடுத்துக் கேட்கும் பாக்கியம் கிடைக்கிறது. அப்படி கேட்பவனுக்குத்தான். தன் முயற்சி என்ற அகம்பாவம் இல்லாதிருக்க வைக்கும், அந்த அகம்பாவமற்ற அனாதை யான நிலையே அவர் வளர்வதற்குக் காரணமாக இருக் கும். தான், தன் முயற்சி என்று கணக்குகள் போடாத மனதே கலங்காமல் முன்னேறும், எல்லைகளற்று இருக்கும்.

ரஜினிகாந்த் அகம்பாவமில்லாதவர். அதுவே அவ ருக்கு, எளிமையைக் கொடுக்கிறது. அந்த எளிமையே அவரை விசாலப்படுத்துகிறது. மனம் குறுகிய ஆட்கள் அதிகமிருக்கும் தேசத்தில். இந்த விசாலம் அதிசயமாகிப் போற்றப்படுகிறது, ரஜினிகாந்த் தொடர்ந்து ஜெயிக் கிறார். ஜெயிப்பார்,

**முற்றும்**